Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 136 • 01.04.2018







## பிஸ்டலை கழற்றிக் கொடுத்த பிரபாகரன்!

## சுரேஷ் பிரேமச்சந்திரனின் நான்காவது வைத்தியர்!

## செங்கலடியில் கூட்டு கொள்ளையடித்த அதிகாரிகள்!



## சிவராமை கொன்றது யார் தெரியுமா?

## ஒரு பெண் பலரை திருமணம் முடிக்கலாம்!

விக்கியின் கவுன் டவுன் ஐடியா



TOPAZ Mall (Pvt) Ltd.

TOPAZ
No.01 Shop in Jaffna

திருமண பட்டுச்சேலை காஞ்சி புரம் பட்டுச் சேலை சுடிதார் மற்றியல்கள் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

ஆண்களிற்கான சூட் மற்றும் ரெடிமேட் ஆடைகள்

மிஸ் சுட்டி மிஸ் பியூட்டியாக வலம் வரும் சுட்டிச் சிறுமியர்களிற்கான பஷன் ஆடைகள்



We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
|---|---|---|
| No 72, Grand Bazaar Jaffna | No 80/24, Kasthuriyar Road Jaffna | No 195, Power House Road Jaffna |
| Tel 021 222 4743 | Tel 021 222 4643 | Tel 021 222 4933 |
| Fax 021 222 7645 | Email : topazagn@gmail.com | 021 221 9933 |

coustomer is king



**KUKHANS STORES (PVT)LTD**

குகன் ஸ்ரோர்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்

General Marchants & Commission Agents

180(380) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

180(380), Hospital Road, Jaffna

**T.P:- 021 221 9469, 0773921662, 0774598248**





சிவன் TV HD தொலைக்காட்சி

**உங்கள் திருக்கோவில் நிகழ்வுகளினை உலகின் எப்பாகத்திலும் வாழ்ந்தாலும் சிவன் தொலைக்காட்சி ஊடாக நேரலையாக கானொலி மூலம் கண்டு இறை அருள் பெற்றிடலாம்**

**Eichstrasse.49, CH-8152 Glattbrugg Switzerland**

**காங்கேசன்துறை வீதி, தியேட்டர் முன்பாக இனுவில் இலங்கை**

021 224 2364 | info@sivantv.com
077 930 7412 | F: sivantv
0041 78 30 21750 | www.sivantv.com

பார்வையிடக் கூடிய பிற தளங்கள்

Lyca TV · INTERNET TV · LIVE

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகெல்லாம்"





இலங்கை அணியில் லசித் மலிங்கவிற்கு இனி வாய்ப்பளிப்பார்களா என்பது தெரியவில்லை. சுதந்திர கிண்ண அணியில் இணைப்பார்கள் என எதிர்பார்த்திருந்த நிலையில், அப்போதும் வாய்ப்பளிக்கப் படவில்லை. மலிங்கவிற்கு ஏன் வாய்ப்பளிக்கப் படவில்லையென விவாதங்கள் நடந்து கொண்டிருக்க, இத்தாலிக்கு குடும்பத்துடன் விசிற் அடித்துள்ளார் மலிங்க.

நாமிருவர், நமக்கிருவர்!

ஆபாச படங்களில் நடித்து உலகப்புகழ் பெற்றவர் மியா கலிபா. ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் பார்வை இவர் மேல் இப்பொழுதுதான் விழுந்துள்ளது. இஸ்லாமிய பெண்ணாக இருந்து கொண்டு, இப்படி அசிங்கமான வேலைகள் செய்யலாமா என அவர்கள் கொதித்துள்ளனர். ஆபாசப்படங்களில் நடித்தால், கொன்றுவிடுவோம் என தொடர்ந்து மிரட்டல் விடுத்து வந்தனர். கொஞ்சம் அசந்தாலும், கடத்திக்கொண்டு போய் கழுத்தை அறுத்துவிடுவார்கள் என்று பயந்தோ என்னவோ, இனிமேல் ஆபாசப்படங்களில் நடிக்கமாட்டேன் என மியா அறிவித்துள்ளார். விளையாட்டு நிகழ்ச்சிகளில் தொகுப்பாளினியாக செயற்பட உத்தேசித்துள்ளாராம்.


மாற்றம்!



டொனால்ட் ட்ரம் குடும்பத்திற்குள் இன்னொரு பிரிவு. ட்ரம்பின் மூத்த மகன், ட்ரம்ப் ஜூனியரின் மனைவி வனேஸா விவகாரத்து கோரியுள்ளார். ஜூனியரும், வனேஸாவும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து, தமது முடிவை அறிவித்துள்ளனர். இதன்மூலம், பன்னிரண்டு வருட மணவாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள். இவர்களிற்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர். இந்த திடீர் பிரிவிற்கு காரணம் என்னவென்பது தெரியவில்லை. ஆனால், அண்மையில் வனேஸாவிற்கு கடிதம் மூலம் அந்தராக்ஸ் விசத்தாக்குதல் நடந்திருந்தது. இதன்பின்னரே அவர்களிற்குள் முரண்பாடு ஏற்பட்டதென்கிறார்கள். ஜூனியருக்கு இது இரண்டாவது விவாகரத்து.


அப்பா பையன்!

# நியூஸ் பிட்ஸ்



காஷ்மீர் மாநில பெண்கள் ரக்பி அணிக்கு பயிற்சியளிக்கவுள்ளார் நாமல் ராஜபக்ச. ஆரம்பத்தில் காஷ்மீர் ரக்பி அணிக்கு சில உதவிகள் செய்யத்தான் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் காஷ்மீர் மாநில அரசு தலைவர்கள் சிலர் நாமலுடன் நேரடியாக தொலைபேசியில் பேசி, அங்கு அழைத்துள்ளனர். இதன்பின்னரே, காஷ்மீருக்கு நேரில் சென்று பயிற்சியளிக்கும் எண்ணம் நாமலுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையின் மூத்த ரக்பி பயிற்சியாளர் ரோனி இம்ராஹிடம் ஆலோசனையையும் பெற்றுள்ளார்.

தாஜூடின் மேற்றர் ஆகாதே?



மனுஷி ஸில்லார். 2017 ஆம் ஆண்டின் உலக அழகி. பக்கத்து நாட்டுக்காரி. உலக அழகியாக மகுடம் சூட்டியதன் மூலம் ஓவர் நைட்டில் உலகப்புகழ் பெற்றார் இந்த இந்திய அழகி. உலக அழகியான பின்னரும், சினிமாவில் நடிக்க அழைக்காமல் விடுவார்களா? இந்தி படவுலகம் அம்மணிக்கு வெற்றிலை வைத்து அழைத்துக் கொண்டிருக்கிறது. அம்மணிக்குத்தான் இன்னும் நடிக்க நேரம் கிடைக்கவில்லை. உலக அழகி கிரீடத்துடன் உலகை சுற்றி வந்து கொண்டிருக்கிறார். இடையிடையே விளம்பரங்கள், புகழ்பெற்ற சஞ்சிகைகளின் அட்டையில் கவர்ச்சி போஸ் என கலக்கிக் கொண்டிருக்கிறார். உலகஅழகி பரபரப்பு மெல்ல ஓய, இந்திப்படமொன்றில் நடிக்க ஆயத்தமாகிறார். இதற்கு முன்னோட்டமோ என்னமோ, அண்மைக்காலமாக தனது இன்ஸ்டகிராமில் பிகினி படங்களை போட்டு, ரசிகர்களை சூடாக்கி வருகிறார்.

திரை விருந்து!

# சுரேஷ் பிரேமச்சந்திரனிற்கு சிகிச்சையளிக்கும் நான்காவது வைத்தியர் யார்?



நம்மாழ்வார்

ஈழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் தவிர்க்க முடியாத பாத்திரம் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பிற்கும் இருக்கிறது. விடுதலைப்புலிகளால் தடைசெய்யப்பட முன்னரும் சரி, தடைசெய்யப்பட்ட பின்னரும் சரி அந்த பாத்திரம் இருந்தது. புலிகளால் தடைசெய்யப்பட்ட பின்னர், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு இந்திய இராணுவத்துடன் சேர்ந்தியங்கியது. அந்த முடிவை எடுத்தபோது, அவர்கள் அரசியல் தற்கொலை செய்துகொண்டுவிட்டனர் என அப்பொழுது விமர்சிக்கப்பட்டது.

ஆனால் அந்த முடிவு கிட்டத்தட்ட அரசியல் தற்கொலைக்கு ஒப்பான முடிவுதான். ஆனால் அந்த தற்கொலை முயற்சியில் ஈ.பி.ஆர்.எல்.எவ் மரணிக்கவில்லையென்பதே யதார்த்தம். இந்தியா, இலங்கை, புலிகள் ஆகிய மூன்று தரப்புக்களாலும் காலத்திற்கு காலம் வழங்கிய தொடர் அவசர சிகிச்சையால் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிழைத்துக் கொண்டது. எனினும், தற்போது ஈ.பி.ஆர்.எல்.எவ் அரசியல் தற்கொலை செய்துகொண்டுவிட்டதை போலத்தான் தெரிகிறது.

இனி அந்த அமைப்பிற்கு அவசர சிகிச்சையளித்து காப்பாற்ற வேண்டிய அரசியல் சூழல் எதுவும் இல்லை. சிகிச்சையளிக்ககூடிய தரப்புக்களும் இல்லை. இந்த சூழலை தொகுத்து பார்த்தால் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் இறுதி அத்தியாயம் எழுதப்படுகிறது போலத்தான் தெரிகிறது.

அண்மையில் ஒரு இளம் பத்திரிகை நண்பருடன் பேசிக்கொண்டிருந்தபோது, சுரேஷ் பிரேமச்சந்திரனை பற்றிய ஒரு நினைவை குறிப்பிட்டார். தனது பத்திரிகை வாழ்வின் தொடக்கத்தில் சில வருடங்களின் முன்னர் நேர்காணல் ஒன்றிற்காக சுரேஷ் பிரேமச்சந்திரனை நேரில் சந்திக்க சென்றிருக்கிறார். அவர் பணியாற்றிய பத்திரிகையின் பெயரை கேட்டுவிட்டு, வாசலிலேயே நிறுத்தி கோபமாக பேசியிருக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன். அன்றைய நேர்காணல் சுமுகமாக நடக்கவில்லையாம்.

சுரேஷ் பிரேமச்சந்திரனின் கோபத்திற்கு காரணம், அவர் பணியாற்றிய பத்திரிகை தமிழரசுக்கட்சிக்கு ஆதரவானதென அவர் நினைத்ததுதான். தமது பத்திரிகையின் அரசியல் நிலைப்பாட்டை பற்றி அந்த இளம் பத்திரிகையாளர் புரியவைக்க முயன்றபோதும், அதை ஏற்றுக்கொள்ளும் நிலைமையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் இருக்கவில்லையென்றார்.

இந்த சம்பவத்தை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழரசுக்கட்சி மோதலை அதன் உண்மையான அர்த்தத்தில் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள்ளிருந்து வெளியேறி விட்டது. இந்த வெளியேற்றத்திற்கு முன்னதாக, 2015ம் ஆண்டில் இருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ளக ஜனநாயகத்தின் தேவை பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ் கடுமையாகபேசியது.இதற்குமுன்னரும் சில வருடங்களாக மெல்லிய குரலில் பேசியது. அந்த மெல்லிய குரல் பேச்சே தமிழரசுக்கட்சிக்கு பிடிக்கவில்லை. தமிழரசுக்கட்சிக்கு அந்த பேச்சு பிடிக்கவில்லையென்பதற்காகவே சுரேஷ் பிரேமச்சந்திரன் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். அதில் இரகசியமெனஒன்றுமில்லை. ஒருவேளை மாவை சேனாதிராசா 2015 பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்திருந்தால், அவருக்கு தேசியப்பட்டியல் நியமனம் வழங்கப்பட்டிருக்கும். அதில் இரண்டாவது பேச்சிற்கே இடமில்லை. ஆனால் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு வழங்கப்படவில்லை.

ஏன் வழங்கப்படவில்லை? அந்த இளம் பத்திரிகையாளருடன் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோபித்ததற்கு என்ன காரணம்?

தமிழரக்கட்சியுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ் முரண்பட்டதற்கு கொள்கை ரீதியிலான காரணங்கள் இருக்குமென சொல்ல முடியாது. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் 2010 இன் பின்னர் சுரேஷின் பிரமுகத்துவமும், முக்கியத்துவமும் குறைக்கப்பட தொடங்கவே இந்த மோதல் உருவானது. தமிழரசுக்கட்சியின் சம்பந்தன், சுமந்திரன் என்ற சில தலைவர்களுடன் அவருக்கு உருவான மோதல் இது. இது பின்னர் இரண்டு தரப்பாலும் அமைப்பு வடிவாக்கப்பட்டது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் உட்கட்சி ஜனநாயகமில்லையென்பதுதான் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் பிரதான குற்றச்சாட்டு. அந்த குற்றச்சாட்டில் ஒரு சிட்டிகை அளவாவது தவறில்லை. ஆனால், அந்த குற்றச்சாட்டை ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆத்மார்த்தமாக வைக்கவில்லை. தமிழரசுக்கட்சியுடனான மோதலிற்கு ஏதாவது தத்துவார்த்த அர்த்தம் கற்பிக்க வேண்டுமென்பதற்காகவே, இந்த விடயம் முன்னிறுத்தப்பட்டது. ஏனெனில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உள்ஜனநாயகத்திற்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் உண்மையாக போராடவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்று புளொட். அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனை, 2015 பாராளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற பின்னரே தமிழரசுக்கட்சி திரும்பிப்பார்த்தது. 2010 இல் தமிழ் தேசிய கூட்டமைப்பின் புளொட் இணைந்தாலும், 2015 வரை சர்வதேச பிரதிநிதிகளுடனான சந்திப்புக்கள், முக்கிய முடிவுகள் எடுக்கும் கலந்துரையாடல்களில் சித்தார்த்தனை தமிழரசுக்கட்சி இணைத்துக் கொள்ளவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளிகளில் ஒன்று தமிழரசுக்கட்சி. அதன் தலைவர் மாவை சேனாதிராசாவை போல, சமஅந்தஸ்துள்ள இன்னொரு பங்காளி கட்சி தலைவர் சித்தார்த்தன்.

முக்கிய சந்திப்புக்களில் சித்தார்த்தன் நிராகரிக்கப்பட்ட சமயங்களில், சுரேஷ் பிரேமச்சந்திரனும் அந்த சந்திப்புக்களில் கலந்துகொண்டார்: சக பங்காளி கட்சியொன்று ஓரங்கட்டப்படுகிறதென சுரேஷ் பிரேமச்சந்திரனோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியோ ஒருபோதும் பகிரங்கமாக பேசியதில்லை. அதிகமேன், கட்சிக்குள் கூட பேசியதில்லை.

தமிழரசுக்கட்சியனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஓரங்கட்டப்பட தொடங்கிய போதே, இந்த உட்கட்சி ஜனநாயக பேச்சை ஆரம்பித்தார்கள். சுரேஷ் பிரேமச்சந்திரனின் தன்முனைப்பும், கோபமும் பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்குள்ளேயே விமர்சனங்கள் உள்ளன. இதேவிதமான இயல்புடையவர்கள் தமிழரசுக்கட்சிக்குள்ளும் இருக்க, ஒரு உறைக்குள் இரண்டு வாய் இருக்க முடியாதென்ற அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையில் சுரேஷ் ஓரங்கட்டப்பட்டார். இந்த கோபத்தின் ஒரு பகுதியையே, அந்த இளம் பத்திரிகையாளர் எதிர்கொண்டிருக்கலாம்.

எனினும், தேர்ந்த அரசியல்வாதிகள் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதில்லை. அது அரசியல் சூட்சுமம். இந்த இடத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கற்றுக் கொள்ள சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அதிகமுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் உடனான மோதலில் அவர் உணர்ச்சிகளை வெளிக்காட்டியதில்லை. அதிகமேன், அப்படியொரு மோதல் இருப்பதாகவே வெளியில் காட்டிக்கொண்டதில்லை.


கூட்டமைப்பின் அரசியல் பணி, கட்சி பணி,தனது அரசியல் பணி, குடும்பம் என்பனவற்றுடன் ஒன்றாகவே ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியை கையாள்வதையும் சம்பந்தர் கவனித்தார். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் செய்தது எதிர்மாறானது. தமிழரசுக்கட்சியை விமர்சிப்பதை மட்டுமே அவர்கள் ஒரே வேலையாக தமது அரசியலாக செய்தார்கள்.

இதற்காக சுரேஷ் பிரேமச்சந்திரன் செலவிட்ட சக்தி மிக அதிகமானது. கிட்டத்தட்ட தனது அரசியல் எதிர்காலத்தைகூட அவர் ஈடு வைத்தார். ஒரு காலத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரனின் கருத்துக்கள் ஊடகங்களிலும் அதிக கவனத்தை பெற்றிருந்தன. எனினும், 2015இற்கு பின்னர் அவர் அதிகமாக பேசிக்கொண்டிருந்து, தனது கருத்துக்களின் மீதான கவனக்கோரலையும் சிதைத்து விட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு, தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளி

தொடர்ச்சி 9-ம் பக்கம்...

**தேர்ந்த அரசியல்வாதிகள் உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதில்லை. அது அரசியல் சூட்சுமம். இந்த இடத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கற்றுக்கொள்ள சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அதிகமுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் உடனான மோதலில் அவர் உணர்ச்சிகளை வெளிக்காட்டியதில்லை.**





# ராஜிவ் காந்தி கொலை 25
## புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

'நாம் எதற்கு இங்கே வீணாகக் காத்திருக்க வேண்டும்? நீங்கள் ஒரு வார்த்தை சொல்லுங்கள். உடனே இங்கே ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துவிடுகிறேன்' என்று ராஜிவை அழைத்துச் சென்று விடுவதிலேயே ஜனார்த்தன் ரெட்டி ஆர்வம் காட்டினார்.

'இல்லை. நான் போயே ஆக வேண்டும். ஆன்ட்டி மிகவும் வருத்தப்படுவார்கள்' என்று அவர் விடாமல் அதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

'சரி. நாம் அரசு மாளிகைக்குச் செல்வோம். விமானம் தயாரானதும் தகவல் வரும். நாம் திரும்பி வருவோம்' என்று சொல்லிவிட்டு அவரை அழைத்துக்கொண்டு விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தார் ஜனார்த்தன் ரெட்டி.

அவர்கள் காரில் ஏறிப் புறப்பட்ட சில நிமிடங்களில் பைலட்டுக்கு அந்த ரேடார் வசப்பட்டுவிட்டது. என்ன கோளாறு என்று எப்படித் தெரியவில்லையோ, அதே மாதிரிதான் எப்படிச் சரியானது என்பதும்.

ஆனால் ரேடார் இப்போது துல்லியமாக இயங்க ஆரம்பித்துவிட்டது. சந்தோஷத்தில் அவர் உடனே ராஜிவின் விமானத்தைக் காவல் காத்துக்கொண்டிருந்த காவலர்களிடம் விஷயத்தைச் சொன்னார்.

'கருவி சரியாகிவிட்டது. வி.ஐ.பி. உடனே திரும்ப வரலாம்.' ஜனார்த்தன் ரெட்டிக்கு வேண்டுமானால் சற்று ஏமாற்றமாக இருந்திருக்கலாம்.

ராஜிவுக்கு அளவிட முடியாத சந்தோஷம். 'வண்டியைத் திருப்பு, வண்டியைத் திருப்பு' என்று உற்சாகமாகிவிட்டார். 'சரி, நீங்கள் ஸ்ரீபெரும்புதூருக்குச் செல்லுங்கள். நான் வீட்டுக்குப் போகிறேன்' என்று சொல்லிவிட்டார் ரெட்டி. அன்றிரவு எப்படியாவது ராஜிவை ஆந்திராவில் தங்கவைத்து விடுவது, முடிந்தால் ஒரு திடீர்ப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்து அவரைப் பேச வைத்துவிடுவது என்பது அவரது எண்ணம்.

இரண்டும் முடியாது போய்விட்டது. என்ன செய்வது? ராஜிவுக்கு ஆன்ட்டிதான் முக்கியம். அப்புறம்தான் மற்றவர்கள். ஆறு மணிக்குச் சென்னையில் இறங்கிவிடுவது என்னும் திட்டத்துடன் புறப்பட்ட ராஜிவ் அன்று ஆறு மணி அளவில்தான் விமானத்தில் ஏறினார்.

இங்கே ஸ்ரீபெரும்புதூரில் திடீரென்று கருணாநிதி கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் ரத்து செய்யப்பட்டதால், அந்த நிகழ்ச்சிப் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த சுமார் இருநூறு காவலர்களும் ராஜிவ் நிகழ்ச்சிக்கே கிடைத்தார்கள்.

அதிகாரிகளுக்கு மிகவும் திருப்தி. 'நல்லதாப் போச்சய்யா. செக்யூரிடிய நல்லா டைட்டா போடுங்க. கவனமா பாத்துக்கங்க' என்று சொல்லிவிட்டு நிம்மதியாகப் போனார்கள்.

அன்றைக்குக் கிட்டத்தட்ட முன்னூற்றைம்பதிலிருந்து நாநூறு போலீசார் ராஜிவ் பொதுக்கூட்டத்துக்குக் காவலுக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள்.

அனைவரும் தயாராகக் காத்திருக்க, இரவு ஏழரை மணிக்கு ராஜிவின் விமானம் மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. சுறுசுறுப்பாக இறங்கி, பத்திரிகையாளர்களிடம் ஒரு சில வார்த்தைகள் பேசினார்.

புறப்படலாமா என்று கேட்டபடியே விறுவிறுவென்று கிளம்பி, காரில் ஏறினார். வழியில் போரூர், பூந்தமல்லியில் சிறு பொதுக்கூட்டங்கள்.

முன்னதாக பேட்டிக்காக வந்திருந்த இரண்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைத் (நியூயார்க் டைம்ஸ் மற்றும் கல்ஃப் நியூஸ் இதழ்களைச் சேர்ந்தவர்கள்) தன் காரிலேயே ஏறிக்கொள்ளச் சொல்லி விட்டு, போகிற வழியிலேயே அவர்களுடன் பேசிக்கொண்டு சென்றார்.

போரூர், பூந்தமல்லி பொதுக்கூட்டங்கள் ஒரு முன்னாள் பிரதமர் கலந்துகொள்ளும் கூட்டத்தைப் போலவே இல்லை. ஒரு செக்யூரிடி கிடையாது, கட்டுப்பாடு கிடையாது, போக்குவரத்து ஒழுங்கு கிடையாது, ஒன்றுமே கிடையாது.

இது பற்றி அந்த இரு பத்திரிகையாளர்களே வியப்புத் தெரிவித்து பிறகு எழுதியிருந்தார்கள். சர்வ அலட்சியமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்தக் கூட்டங்களில், அது குறித்த எவ்வித விமரிசனமும் இல்லாமல் சிரித்தபடியே கலந்துகொண்டுவிட்டு கார் ஏறிவிட்டார் ராஜிவ்.

ஸ்ரீபெரும்புதூருக்கு வந்ததும் முதலில் இந்திரா காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கும் வைபவம். அதை முடித்துவிட்டுப் பொதுக்கூட்ட மைதானத்தருகே வந்தார். மெயின் ரோடில் இருந்து சுமார் நூறடி நடந்தால் சிவப்புக் கம்பளம் ஆரம்பிக்கும். விறுவிறுவென்று நடந்தால் முப்பது வினாடிகளில் மேடையேறி விட முடியும்.

ராஜிவ் பயணம் செய்த அந்த குண்டு துளைக்காத கார் சரியாக சிவப்புக்கம்பளம் ஆரம்பிக்கும் இடத்துக்கு வந்து நின்றது. பொதுவாகவே ராஜிவ் காந்தி பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் விதம் குறித்துப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு நிறைய விமரிசனங்கள் உண்டு.


அவர் செக்யூரிடியைப் பொருட்படுத்தமாட்டார் என்பது முதலாவது. எத்தனை தடுத்து வைத்தாலும் பொது மக்களை நெருங்கவே விரும்புவார் என்பது அடுத்தது. அவர் வருகிற கூட்டத்தில் மக்களைக் கட்டுப்படுத்தவே முடியாது என்பது மூன்றாவது.

அப்படிக் கட்டுப்படுத்துவதைப் பொதுவாக அவர் விரும்பமாட்டார் என்பது நான்காவது. ஆனால் ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தைப் பொருத்தவரை, நாங்கள் கள ஆய்வு செய்து, துப்புரவாக விசாரித்த வகையில் ராஜிவ் காந்தி, அங்கே வந்து இறங்கிய கணம் முதல், மேடையை நோக்கிச் சென்ற அந்தத் தருணம் வரை எந்தவிதமான செக்யூரிடி வயலேஷனுக்கும் இடம் தரவேயில்லை.

காவல் துறையினர் என்ன ஏற்பாடு செய்திருந்தார்களோ, அதனைத்தான் பின்பற்றினார். விமானத் தாமதத்தினால் எட்டு மணிக்குத் தொடங்கவிருந்த நிகழ்ச்சிக்குப் பத்து மணிக்கு வந்து சேர்ந்தார் என்பது தவிர, அவரால் வேறு பிரச்னையே இருக்கவில்லை.

பிரச்னை வேறு விதமாகத்தான் அங்கே வந்தது. (தொடரும்)

தீபம்
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்
தொடர்புகளிற்கு
ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563
அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562
செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com




# பதினாறு இலட்சம் பணம்... செங்கலடியில் கூட்டாக கொள்ளையடித்த அதிகாரிகள்!

தீபம் லென்ஸ்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த சமுர்த்தி மோசடிகள் தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்களை வெளியிடும் இந்த தொடரில், இந்தவாரம் குறித்த பிரதேசமொன்றில் நடந்த மோசடியை அம்பலப்படுத்துகிறோம். சமுர்த்தி வங்கி கிளையொன்றில் மட்டும் பல இலட்சம் ரூபா பணத்தை சில அதிகாரிகள் மோசடி செய்திருக்கிறார்கள்.

வறுமையை போக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சமுர்த்தி திட்டம், அதன் உண்மையான பலனை எட்டியுள்ளதா? அப்படி எட்ட முடியாமல் போனதற்கு காரணம் என்ன? சமுர்த்தி திட்டம் வெற்றியடையாமல் போக காரணமாக இருந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் தண்டிக்கப்பட்டார்களா? என்பது பற்றி கடந்தவாரம் விலாவாரியாக குறிப்பிட்டிருந்தோம். அரசியல்வாதிகளின் துணையுடன் இயங்கும் உத்தியோகத்தர்களே அதிகமாக இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சமுர்த்தி ஊழல்களை அம்பலப்படுத்தும் இந்த தொடரில், நாம் முதலாவதாக வெளியிடவுள்ள மோசடிகள் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்றவை. இந்த பகுதியில் நாம் வெளியிடும் தகவல்களிற்கான அனைத்து ஆவணங்களும் தீபத்திடம் உள்ளன என்பதை ஆரம்பத்திலேயே பொறுப்புணர்வுடன் குறிப்பிடுகிறோம்.

ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கரடியனாறு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் பெருமளவு ஊழல் மோசடிகள் நடந்துள்ளன. அவற்றை இந்த வாரம் பட்டியல்படுத்துகிறோம். 2013 - 2017 வரை இந்த கிளையில் பெருமளவு மோசடி நடந்துள்ளது. இது தொடர்பான முறைப்பாடுகள் கிடைத்ததையடுத்து, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அனுமதியுடன்மட்டக்களப்புமாவட்ட உள்ளக கணக்காய்வாளர்கள் கடந்த பெப்ரவரி மாதம் கணக்காய்வில் ஈடுபட்டு, அங்கு மோசடி நடைபெற்றதை உறுதிசெய்துள்ளனர்.

அந்த வங்கியில் கடமையாற்றும் கோபாலப்பிள்ளை திபாகரன் (முகாமையாளர்), அரசரெட்ணம் ஜெயசீலன் (உதவி முகாமையாளர்), அருந்ததி விக்னநாதன் (இலிகிதர்), செவ்வராணி தில்லையம்பலம் (காசாளர்) ஆகியோர் மோசடியில் ஈடுபட்டது கணக்காய்வு அறிக்கையில் அம்பலமாகியுள்ளது.

இவர்கள் மிக நூதனமாக திட்டமிட்டு இந்த மோசடியில் ஈடுபட்டதை கணக்காய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த மோசடி திட்டமிடப்பட்ட விதம் குறித்து, கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டதை இங்கு தருகிறோம்

1. கையிருப்பு காசு 2017.11.30 ஆம் திகதி ரூபா 1,100,000.00 (1.1 மில்லியன்) காசாளராக கடமைபுரிந்த திருமதி அருந்ததி விக்னநாதனால் காப்பு பெட்டகத்தில் வைப்பு செய்யப்படாமல் எடுத்து செல்லப்பட்டுள்ளது.

2. இந்த தொகையை சீர்செய்ய வாடிக்கையாளர்கள் வாடிக்கையாளர்கள் மூன்று பேருக்கு கடன் வழங்கப்பட்டதாக நாளாந்த பெறுவனவு கொடுப்பனவு விபரங்களை பதிவுசெய்யும் எட்டில் காட்டப்பட்டமை.

3. வங்கி வாடிக்கையாளர்களிடம் இருந்து வாடிக்கையாளர்களின் கணக்குகள் ஊடாக வாடிக்கையாளர்களுடன் இணைந்து அருந்ததி விக்னநாதன். கடன் மோசடியில் ஈடுபட்டமை.

4. பெற்ற கடனை மீள செலுத்துவதற்காக வங்கிக்கு வந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து பணத்தை பெற்று உரிய வடிக்கையாளரின் வைப்பு புத்தகம், கடன் ஆள்சார் பேரேட்டு தாள்கள் என்பவற்றில் மட்டும் பதிந்து பணமோசடியில் ஈடுபட்டமை.

5.மேலுள்ள மோசடியை மறைப்பதற்காக கணனியில் தயாரிக்கப்பட்டிருந்த கடன் ஆள்சார் பேரேட்டு பரீட்சை மீதியில் அரசரெட்ணம் ஜெயசீலனின் உதவியுடன் உரிய கணக்கிலக்கங்களை மாற்றிமோசடியை மறைத்தமை.

இப்படியாக கரயனாறு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் இருந்து அதிகாரிகள் ஆட்டையை போட்ட மொத்த பணம் 1,610, 881.00 ரூபா!

கையிருப்பு பணத்தில் ரூபா 1,100,000.00, வங்கி வாடிக்கையாளர்களுடன் இணைந்து ரூபா 225,000.00, கடனை மீளச்செலுத்த ஒப்படைத்ததில் ரூபா 285,881.00 என மொத்தமாக ரூபா 1,610, 881.00 மோசடி செய்யப்பட்டுள்ளது.


இந்த மோசடியை மறைப்பதற்காக ஆவணங்களிலும் மோசடியான முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கடன் ஆள்சார் பேரேட்டு தாள்கள் மூன்று காணாமல் போயுள்ளது. 2017.11.20 தொடக்கம் 2017.12.04 ஆம் திகதி வரை தயாரிக்கப்பட்ட நாளாந்த பெறுவனவு கொடுப்பனவு விபரங்களை பதிவுசெய்யும் புத்தகத்திற்கு பதிலாக புதிய புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2017.11.23ஆம் திகதி தொடக்கம் 2017.11.30 ஆம் திகதி வரை புதிய பணச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமையில் மூன்றாமிடத்தில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள மட்டக்களப்பில் ஒரு சமுர்த்தி வங்கியில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மோசடி செய்யப்பட்டுள்ள பணத்திற்கான விபரம் இது. இந்த மோசடி நடவடிக்கை குறித்த ஆதார பூர்வ கணக்காய்வு விபரங்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களங்களிடம் உள்ளன. அந்த அறிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை என்னவென்று நாம் கேள்வியெழுப்புகிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்தகாலங்களில் நடந்த பெரும் ஊழல் மோசடிகள் பற்றிய பல தகவல்களை அரசஅதிபராக கடமையாற்றிய பி.எம்.சாள்ஸ் தொடர்புபட்டிருந்த மோசடிகளையும் தீபம் வெளியிட்டிருந்தது. அவை தொடர்பான எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய மோசடி நடவடிக்கைகளால் மகக்ளிற்கு கிடைக்க வேண்டிய பல உதவித்திட்டங்களிற்கான பணம், அதிகாரிகளின் வங்கி கணக்கை நிரப்பியது. புதிய அரச அதிபர் பதவியேற்ற பின்னர், அவருக்கு முன்னாலிருந்த முதன்மையான சவால்,

மோசடியில் ஈடுபடும் தனிநபர்கள் பற்றிய விபரங்களை பகிரப்படுத்தாமல் விடலாம் என சிலர் நினைக்கலாம். எனினும், வறுமையை போக்க அரசு ஆரம்பித்த செயற்திட்டத்தை சீராக நடக்கவிடாமல், ஊழல் மோசடியில் ஈடுபடும் அதிகாரிகளை அம்பலப்படுத்த வேண்டியது ஊடகங்களின் தேவையாக உள்ளது. ஏனெனில், கடந்தகாலங்களிலும் ஊழல் மோசடியில் ஈடுபட்ட பலர் எந்த தண்டனைக்கும் ஆளாகவில்லை. அரசியல், அதிகார செல்வாக்குடன் தப்பித்து, தொடர்ந்து மோசடியில் ஈடுபட்ட வண்ணமுள்ளனர். இந்த வகை ஊழல் மோசடியாளர்களை அம்பலப்படுத்துவதே, மக்களிற்கு கிடைக்க வேண்டிய அரச திட்டங்கள் சீராக கிடைக்க ஒரே வழியென்பதால், ஊடக பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களில் விபரங்களையும் வெளியிடுகிறோம்.

# இனத்தை பெருக்க முதலமைச்சர் வில்லங்க யோசனை!



திருகோணமலையில் நடந்த தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் நிறைய சுவாரஸ்யங்கள் நடந்துள்ளன. அவை எந்த ஊடகத்திலும் வெளிவர வில்லை. ஊடகங்கள் தவறவிட்ட அந்த சுவாரஸ்ய சம்பவங்களை தீபம் வாசகர்களிற்காக தருகிறோம்.

கூட்டத்தின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடப்படவில்லை. இதனை முதலமைச்சர் கவனித்து விட்டார். ஏன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்வில்லையென நிகழ்ச்சியின் இடையில் ஏற்பாட்டாளர்களிடம் கேட்க, அவசர அவசரமாக தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிபரப்ப ஏற்பாடு செய்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கும் என்று அறிவித்தலும் விட்டார்கள்.

நிகழ்ச்சியின் இறுதி. தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்குமென அறிவிக்கப் பட்டு,ஒலிப்பதிவுஇயங்கவிடப்பட்டது. ஆனால் தமிழ்த்தாய் வாழ்த்து ஒலிக்கவில்லை. இலங்கை தேசிய கீதமே ஒலித்தது. தேசிய கீதத்தின் ஆரம்ப வரிகள் ஒலிக்க, முதலமைச்சர் அதற்கு மரியாதை செலுத்தும் விதமாக நின்றார். தமிழ்த்தாய் வாழ்த்திற்கு பதிலாக தேசிய கீதம் ஒலிக்க தொடங்கிய பின்னரே, ஏற்பாட்டாளர்கள் பதறிப்போய் அதை நிறுத்திவிட்டனர். இறுதியில் தமிழ்த்தாய் வாழ்த்தும் ஒலிக்கவில்லை, தேசிய கீதமும் ஒலிக்கவில்லை.

தேசிய கீதத்திற்கு முதலமைச்சர் மரியாதை செலுத்திக் கொண்டிருக்கும் போது, பாதியிலேயே நிறுத்தலாமா என்று இதுவரை யாரும் வில்லங்கத்தை கிளப்பவில்லை!

இந்த கூட்டத்தில் இன்னொரு சுவாரஸ்ய சம்பவமும் நடந்தது.

"தமிழர்களின் பாரம்பரிய பூமி திருகோணமலையென்கிறீர்கள். ஆனால் முஸ்லிம்கள் இங்கு பெருகி, தமிழர் நிலங்களையெல்லாம் ஆக்கிரமிக்கிறார்கள். தமிழர்கள் சிறுபான்மையினராகி விட்டனர். இதையெல்லாம் நீங்கள் கவனிப்பதில்லையே" என கூட்டத்திலிருந்த ஒருவர் கேள்வியெழுப்பினார்.

முதலமைச்சர் இப்படி பதிலளித்தார் "முஸ்லீம் சனத்தொகை வேகமாக பெருகி செல்வதுதான் இதற்கு காரணம். நீங்களும் அவர்கள் பாணியிலேயே அவர்களை எதிர்கொள்ளலாம். ஒருவர் பல தார மணம் புரியலாம். அல்லது, புராணத்தில் சொல்லப்பட்டதை போல பாஞ்சாலியை போல ஒருத்தி பலரை மணக்கலாம்" என சிரித்தபடி கூறினார்.

## திருகோணமலை நிகழ்வால் கோபித்தவர்கள்!

தமிழ் மக்கள் பேரவையில் அரசியல் கூட்டமொன்று கடந்தவாரம் திருகோணமலையில் நடந்தது. தமிழ் மக்கள் பேரவையை யாழ்ப்பாணத்திற்கு வெளியிலும் நகர்த்த வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் இது. அடுத்த கூட்டம் அனேகமாக புதுக்குடியிருப்பில் நடக்கலாமென தெரிகிறது.

இதற்குள், தமிழ் மக்கள் பேரவைக்குள் அண்மைக்காலமாக அதிருப்திகள் மேலோங்கி செல்வதை கடந்தவாரமும் குறிப் பிட்டிருந்தோம். திருகோணமலை கூட்டமும் அதற்கு எண்ணெய் வார்த்துள்ளது.

பத்திரிகைகளில் கட்டுரை எழுதும் ஒருவரே திருகோணமலை கூட்டத்தை ஏற்பாடு செய்தவர். அவரை தமிழ் மக்கள் பேரவைக்குள் இணைப்பதற்கும் முதலமைச்சர் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. திருகோணமலை கூட்டத்திற்கான ஏற்பாட்டையும் அவரிடமே கொடுத்ததில், தமிழ் மக்கள் பேரவையின் பல பிரமுகர்கள் பயங்கர அப்செட்டில் இருக்கிறார்கள்.

இந்த கூட்டத்தில், அருந்தவ பாலனும் கலந்து கொண்டிருந்தார். எனினும், நிறைய தயக்கத்தின் பின்னரே கலந்துகொண்டார் என தெரிகிறது. கலந்து கொள்வதா, விடுவதா என பலரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்.

பின்னர், தமிழ் மக்கள் பேரவைக்குள் உள்ள பத்திரிகை ஆசிரியர் ஒருவர்தான் அருந்தவ பாலனுடன் பேசி, அவரை கூட்டத்திற்கு வரவைத்துள்ளார். தமிழ் மக்கள் பேரவையின் கூட்டங்களிற்கு அவர் வந்தாலும், மத்திய குழுவில் இணைந்திருப்பதில்லை யென முடிவெடுத்துள்ளாராம்.

## பணியாளர்களின் சம்பளம் சுகாதார அமைச்சரிற்கு சென்றதா?

வடமாகாண சுகாதார அமைச்சர் நிதி துஷ்பிரயோக குற்றச்சாட்டிற்கு இலக்காகியுள்ளார். பணியாளர்களுடன் கூட்டுவங்கிகணக்குவைத்திருந்தவிவகாரமே சிக்கலாக உருவெடுத்துள்ளது. இந்த விவகாரம் முதலமைச்சரின் கவனத்திற்கு சென்றதையடுத்து, சுகாதார அமைச்சரை அழைத்து விளக்கம் கேட்டுள்ளார்.

அமைச்சர்கள் தனிப்பட்ட ஆளணி தொகுதியை வைத்திருப்பதற்கு மாகாணசபை சட்டம் இடமளிக்கிறது. அனேகமாக, இந்த ஆளணியென்பது அமைச்சருக்கு வேண்டப்பட்டவர்களால் நிரப்பப்படுவது. வடமாகாண முன்னாள் அமைச்சர் ஒருவர் தனது குடும்ப உறுப்பினர்களை வைத்தே இந்த வெற்றிடங்களை நிரப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம், அந்த ஆளணிக்கு ஒதுக்கப்படும் பணம், மொத்தமாக அமைச்சரின் குடும்பம் நண்பர்களிற்கு சென்ற சேரும்.

புதிய வடமாகாண சுகாதார அமைச்சராக பதவியேற்ற ஞா.குணசீலன், தனது தனிப்பட்ட ஆளணியினருடன் தனக்கு,கூட்டு வங்கி கணக்கு (joint account) வைத்திருந்துள்ளார். அந்த வங்கி கணக்கிற்கே அவர்களின் மாதாந்த சம்பளம் வைப்பிலிடப்பட்டுள்ளது. இது மோசமான நிதி துஷ்பிரயோகமாகும் என அமைச்சின் அதிகாரிகள் சிலர் முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். இதையடுத்து, சுகாதார அமைச்சரை அழைத்து விளக்கம் கேட்டுள்ளார் முதல்வர்.

இதன்போது சட்டத்திற்குட்பட்ட விதத்திலேயே செயற்பட்டேன் என சுகாதார அமைச்சர் விளக்கமளித்ததாகவும், அதனை ஏற்காத முதலமைச்சர், அந்த பணத்தை திரும்ப ஒப்படைக்குமாறு அறிவுறுத்தியுள்ளதாகவும் தீபம் அறிந்துள்ளது.

இதேவேளை, இந்த தனிப்பட்ட ஆளணியினருக்கு ஒதுக்கப்படும் பணத்தில் சிறிது பிடிப்பு செய்துவ, இன்னொருவருக்கு அதை வழங்குவது எல்லாம் சட்டத்தில் இல்லாத அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளாக உள்ளன. எனினும், அப்படி வழங்குவதென்றாலும், கூட்டு வங்கி கணக்கின் ஊடாக அமைச்சர் அந்த பணத்தை பெற்றுக்கொள்ள முடியாது. பணத்தை பெறுபவரின் வங்கி, கணக்கிற்கே அதை வைப்பிலிட வேண்டும். இல்லாத பட்சத்தில், அது முறையற்ற பரிமாற்றமாகவே கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சருக்கும் செயலாளருக்கும் கெமிஸ்ட்ரி சரியில்லை!

வடமாகாணசபை அமைச்சு செயலாளர்கள் சிலர் மாற்றப்படும் சாத்தியம் உள்ளதாக தெரிகிறது. ஏற்கனவே கல்வியமைச்சின் செயலாளர் இடமாற்றப்படுவார் என்ற செய்தி வெளியான நிலையில், இன்னொரு அமைச்சின் செயலாளரையும் இடமாற்ற முயற்சிகள் நடப்பதாக தெரிகிறது. அடுத்த வாரமளவில் இந்த விசயமும் சர்ச்சையாகலாமென தெரிகிறது.

குறித்த செயலாளர் ஏற்கனவே, இன்னொரு அமைச்சின் செயலாளராக இருந்து, இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் இடமாற்ற முயற்சிகள் நடக்கிறது. அமைச்சருக்கும், செயலாளருக்குமிடையில் "கெமிஸ்ட்ரி" சரியாக போகாததே சிக்கலாம். இதனால், தனது செயலாளரை மாற்றும்படி முதலமைச்சருக்கு தொடர்ந்து நச்சரித்து கொடுத்துள்ளார் அமைச்சர். இதன் பின்னரே, அமைச்சரை மாற்றும் முயற்சியில் முதலமைச்சர் இறங்கியுள்ளார்.

செயலாளர்கள் இடமாற்ற முடிவை முதலமைச்சர் அடிக்கடி எடுத்து, ஆளுனருக்கு கடிதம் எழுதிக் கொண்டிருப்பதால் ஆளுனர் செயலக அதிகாரிகள் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சரி, அமைச்சருக்கும் செயலாளருக்கும் ஏன் கெமிஸ்ட்ரி ஒத்து வரவில்லை தெரியுமா?

அது பெரிய கதை. அந்த அமைச்சர் நிதி விசயத்தில் கொஞ்சம் அப்படி இப்படி விளையாடி விட்டாராம். அதை செயலாளர் கண்டுபிடித்து விட்டார். பொதுவாக அமைச்சருக்கும், செயலாளருக்கும் சுமுகமான உறவு இருப்பதென்றால், சில விசயங்களில் நீக்குப்போக்காக இருந்து விடுவார்கள். எல்லா விசயத்திலும் நோண்டிக் கொண்டிருந்தால் பிறகெப்படி கெமிஸ்ட்ரி ஒத்து வரும்?



# வாக்குறுதிகளை பறக்க விடும் இலங்கையரசு, அமெரிக்காவில் போடப்பட்ட ராஜதந்திர வலை!!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - உலகத் தமிழர் பேரவை அமெரிக்கா பயணத்தின் எக்ஸ்ரே ரிப்போர்ட்

ராஜபக்ச தரப்பினருடன் பேச்சு வார்த்தைக்கான கதவை திறந்து வைத்துள்ளீர்களா? என அமெரிக்காவில் வைத்து தமிழ்ச் தேசியக் கூட்டமைப்பு, உலகத் தமிழர் பேரவை குழுவினரிடம் கேட்டார், அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான துணைச் செயலாளர் அலைஸ் ஜே வெல். வெளிப்படையான இந்த கேள்வி குழுவினரிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருந்தாலும் தன்னை நோக்கி கேட்கப்பட்ட கேள்விக்கு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசியலமைப்பு உருவாக்கத்தில் ராஜபக்சவின் ஆதரவை வேண்டி இரண்டு தடவைகள் எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன், ராஜபக்சை சந்தித்து பேசியதையும், ராஜபக்ச தன்னிடம் அந்த பலம் இல்லையென்றும், தானும், தனது குடும்பமும் அரசின் பழிவாங்கும் கைது நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் சொன்னதை நினைவூட்டி, ராஜபக்சவிடம் இருந்து சாதகமான சமிக்ஞை எதுவும் இதுவரை வரவில்லை என்றும் சொன்னார்.

இது நடந்தது, வொஷிங்டனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் அமைப்புகள் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை சந்தித்த போது. வழமையில் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான கூட்டத் தொடர் நெருங்கி வரும் நிலையில் இலங்கையில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும், பல சமூக அமைப்புக்களின் பிரநிதிதிகளும் ஜெனிவாவில் ஐ.நாவில் உள்ள பக்க அறைகளில் சென்று தனது கருத்துக்களை சொல்வது வழக்கம். இம்முறையும் தமிழர் தரப்பில் அது நடந்திருந்தது. அத்துடன் இம்முறை புதிதாக முஸ்லிம் சிவில் அமைப்புக்களும், கடும் போக்கு சிங்கள அமைப்புக்களும் ஜெனிவாவில் பிரசன்னம் கொடுத்திருந்தன. அத்தோடு, 2015 இல் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான பிரேரணையில் எதுவும் நிறைவேற்றபடாத நிலையிலும், அதிகரித்து வரும் மத, இன சிறுபான்மையினர் மீதான தாக்குதல் தொடர்பிலும், ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் கடும் விசனத்தை தெரிவித்திருந்த நிலையில், அதை எதிர்கொள்ள இலங்கை அரசாங்கம் தரப்பிலும் மூன்று மூத்த அமைச்சர்கள் உட்பட இராஜதந்திரிகள் குழு ஒன்றும் ஜெனிவாவிற்கு பயணமாகி இருந்தது.


அலைஸ் ஜே வெல்

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் உலகத் தமிழர் பேரவை அடங்கிய குழு அமெரிக்காவிற்கு பயணமாகி இருந்தது. தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் ஒரு தரப்பு பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் ஜெனிவாவிற்கு சென்றிருந்தாலும், தெற்கில் சிங்கள, ஆங்கில ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்டது இந்த அமெரிக்க பயணமே.

குறிப்பாக இலங்கை உள்நாட்டு மற்றும் பிராந்திய அரசியலில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், மற்றும் அரசியலமைப்பு மற்றும் அரசியல் தீர்வு திட்டம் சம்பந்தமாக எழுந்திருக்கும் தற்போதைய தேக்கநிலை, அதுமட்டுமல்லாமல், ஜெனீவா 2015 அறிக்கையில் ஐக்கியநாடுகள் சபைக்கும் சர்வதேசத்திற்கும் இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டியிருக்கும் காலதாமதம் போன்ற முக்கியமான விடயங்கள் சம்பந்தமாகவும் இலங்கை அரசு சர்வதேச அரங்கில் ஒப்புக்கொண்ட செயற்திட்டங்களை செய்து முடிப்பதற்கான அழுத்தமொன்றை பிரயோகிக்கும் வகையில் நியூயோர்க்கிலும் வொஷிங்டனிலும் ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்க மற்றும் நோர்வே அரசாங்கங்களின் உயர் மட்ட அதிகாரிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து உலகத் தமிழர் பேரவை (GTF), நோர்வே தமிழர் பேரவை (NTF), கனேடிய தமிழ் காங்கிரஸ் (CTC), அமெரிக்காத் தமிழர் அரசியல் செயலவை (USTPAC), அவுஸ்ரேலியா தமிழ் காங்கிரஸ் போன்ற புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் பிரநிதிதிகள் சந்திருந்திருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த புலம்பெயர் அமைப்புக்களும் இலங்கை அரசு மற்றும் சர்வதேச சக்திகளுடன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை தொடர்பில் தொடர்ந்தும் தொடர்பை பேணி வருபவை.

இந்த சந்திப்பிற்களின் போது இலங்கையில் மோசமடைந்துவரும் சட்டம், ஒழுங்கு மேலும் அதிகரித்துவரும் மத மற்றும் இனச்சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், அரசியலமைப்பு மீள் உருவாக்கம் பற்றிய தற்போதைய மதிப்பீடு மற்றும் ஐ.நா மனித உரிமை ஆணையகம் நிறைவேற்றிய தீர்மானங்களான 30/1 மற்றும் 34/1 இன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துதில் இலங்கையரசின் அதீத காலதாமதம் ஆகியவை பற்றிய விளங்க்ங்களை தூது குழு அளிந்திருந்தது. குறிப்பாக அந்த பரிந்துரைகள் வரும் மார்ச் 2019க்கு முன் நிறைவேற்ற இலங்கை அரசாங்கத்தை கோருவதன் தேவையையும் இதுசம்பந்தமாக இலங்கை மீதான மனித உரிமை ஆணையகம் மற்றும் உறுப்பு நாடுகளின் கண்காணிப்பின் அவசியத்தையும்,இந்த பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை அரசை காலவரையறைக்குள் உட்படுத்துவதையும் பிரதிநிதிகள் குழு விவாதித்தது.

இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு ஐ.நா மனித உரிமை கூட்டத் தொடருக்கு சற்று முன்பு ஒப்புக்கு சில விடயங்களை செய்து விட்டு, அதை காட்டி மீண்டும் கால அவகாசம் கோரும் தந்திரம் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.சில ஆண்டுகள் இழுபறிக்கு பின்னர் அமைக்கப்பட்டு இருக்கும் காணாமல் போனோருக்கான செயலகத்தை கால அவகாசம் கோரும் துருப்புச்சீட்டாக இலங்கை அரசாங்கத்தினால் பயன்படுத்தலாம் எனவும் இக்குழு சந்திந்த அனைத்து ராஜதந்திரிகளிடம் சொல்லியிருந்தது.


கெல்லி எக்கேல்ஸ் கர்ரி

ஐக்கிய நாடுகள் சபையில் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் மற்றும் ஆசிய மற்றும் பசிபிக் பிரிவின் பணிப்பாளரான திருமதி மரி யாமசிதா ஆகியோர் தமது குழுவினருடன் கணிசமான நேரத்தை எடுத்துக் கொண்டு தகவல்களை கேட்டிருந்து இருந்தனர். செயலாளர் அதில் செயலாளர் நாயகம் தனது குழுவினருடன் சில வாரங்களுக்கு முன்பு இலங்கைக்கு வந்திருந்ததால் தற்போதைய அரசியல் சூழ்நிலையைப் பற்றிய புரிதல் இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கான பிரதிநிதியும், ஐக்கிய நாடுகள் சபைக்கான ஐக்கிய அமெரிக்காவின் நிரந்தர பிரதிநிதியுமான தூதர் 'கலி கியூ மனிதஉரிமை ஆணையாளர் தீர்மானம் 30/1 ஐ முழுமையாக நிறைவேற்றுவதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி, ஜெனீவா மற்றும் கொழும்பில் உள்ளபணியகங்களுடன் கவலைகள் பற்றி விவாதிக்க உறுதியளித்தார். இலங்கை அரசாங்கம் சர்வதேச அரங்கில் ஒப்புக்கொண்ட பரிந்துரைகள் விரைவாகவும், நிறைவாகவும் செயற்படுத்தாவிட்டால், சர்வதேசத்தின் மீதும், சர்வதேசத்துடன் நெருங்கிச் செயற்படும் உள்ளூர் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் மீதும் மக்களின் அழுத்தம் அதிகரிக்கின்ற அதே நேரம், இன மற்றும் மத

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

கடுப்போக்காளர்களிற்கு அது வாய்ப்பாகி விடும் என்பதையும் தூதுவர் புரிந்து கொண்டார்.

இதேபோல், ஐ.நா. இற்கான நோர்வேயின் நிரந்தர பிரதிநிதி தூரகத்திரஹெய்ம் நோர்வே அரசுடனும் மற்றும் நோர்வேயின் ஐக்கியநாடுகளுக்கான பிரதிநிதிகளுடனும் இலங்கை அரசுக்கு பரிந்துரைகளை நிறைவேற்ற காலக்கெடு நிர்வகிப்பதற்கான திட்டத்தின் தேவையை பகிர்ந்து கொள்ள உடன்பட்டார்.

வொஷிங்டனில் அமெரிக்கா அரசின் இராஜாங்க திணைக்களத்தில் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவின் பிரதம துணை உதவி செயலாளர் தூதுவர் அலைஸ் ஜே வெல் , மற்றும் மூத்த அதிகாரிகளை சந்தித்து மேற்குறித்த விபரங்களை பேசும்போதும் ஜனாதிபதியும்,அரசாங்கமும் ஐநாவின் மனித உரிமை பேரவையில் ஒப்புக்கொண்ட செயற்திட்டங்களையும், உள்நாட்டில் ஆட்சியமைக்கும் போது ஒப்புக்கொண்ட புதிய அரசியமைப்பு உருவாக்கம், அரசியல் தீர்வுத்திட்டம் போன்றவற்றை செயற்படுத்துவதில் ஆர்வமும், முன்முனைவும் அற்று இருப்பதை பற்றி சொல்லிய போது அலைஸ் யாழ்ப்பாணத்தில் நேற்று ஜனாதிபதி ஆற்றிய உரையை பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என கேட்டார். அந்த கேள்வி ஜனாதிபதியின் தன்து நிலைப்பாட்டை மாற்றி விட்டார் என கருதலாமா? என்ற அடிப்படையிலேயே அமைந்திருந்தது. அதற்கு பதிலளித்த குழு இது ஜனாதிபதியின் வழமையான 'யாழ்ப்பாண உரை', ஒவ்வொரு தடவை யாழ்ப்பாணத்திற்கு வரும் போது இப்படி பேசுவார், ஆனால் அதை செயலில் காட்டுவது குறைவு, மாறாக தெற்கிலே சென்று யாழ்ப்பாண உரைக்கு எதிர்மறையான உரையையும்ஆற்றுவார் என சொன்ன போது, செயலாளர் அலைசும், ஏனைய இலங்கை விவகாரங்களிற்கு பொறுப்பான அதிகாரிகளும் ஆமோதித்து ஏற்றுக் கொண்டனர்.

உண்மையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் உள்ள இந்த அதிகாரிகளே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழு ஏற்கனவே நியூயோர்க்கில் சந்திருந்திருந்த ஐ.நாவிற்கான அமெரிக்காவின் நிரந்தர தூதுக் குழுவின் முடிவில் செல்வாக்கு செலுத்துபவர்கள்.

அதன் பிறகு, இக்குழு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்கு அழுத்தம் தரக்கூடிய அமெரிக்க அரசின் இரு உயர் சபைகளான கொங்கிரஸ் மற்றும் செனட் பிரநிதிகள் மற்றும் அச்சபைகளின்வெளியுறவு விவகாரங்களிற்கான அதிகாரிகளையும் சந்தித்திருந்தது. மிக முக்கியமாக கொங்கிரஸ் உறுப்பினர் பில் ஜோன்சன் அவர்களை சந்தித்தபோது சபையிலும், இராஜாங்க செயலாளர் ஊடாகவும், நேரடியாக இராஜாங்க திணைக்களத்திற்கும் அமெரிக்க வெளியிடவுள்ள அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் அழுத்தம் தருவாக குறிப்பிட்டார்.

அதேபோன்று, செனட் சபையில் உள்ள வெளிவிவகாரங்களிற்கான பிரிவில்,இலங்கைவிவகாரங்களிற்கான பொறுப்பான அதிகாரியை சந்தித்து விளங்களை அளித்திருந்தனர்.

அண்மையில் முஸ்லிம் மீதான தாக்குதல் பற்றி பேசும் போது, அது முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்களை கோபத்திற்குள்ளாக்கி இருக்கிறது என சொன்ன போது,ஆமோதித்த அதிகாரி ஒருவர் ஆனையிறவிலும், கிளிநொச்சி அமைக்கப்பட்டு இருக்கும் யுத்த வெற்றி சின்னங்கள் நல்லணக்கத்திற்கு உதவாது மாறாக நாளைய தமிழ் இளைஞர்களின் மனதிலும் வன்முறையை விதைக்கவல்லது என்றார்.

இந்த சந்திப்பு என்பது அழுத்தங்களும், செல்வாக்கும் வரும் நதிமூலம் வரை சென்றது என சொல்ல வேண்டும், ஏனெனில் வெறுமனே ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்காவின் நிரந்தர தூதுக்குழுவை சந்திந்தால் அவர் இராஜாங்க திணைக்களத்தின் அறிவுறுத்தலை பொறுத்தே செயற்பட முடியும், இராஜாங்க திணைக்களக்களம் வெளியுறவு கொள்கையை வகுப்பதில் பெரும்பங்கு வகித்தாலும், அதன் மீது செல்வாக்கு செலுத்துவது அமெரிக்காவின் இரு உயர் சபைகளின் முடிவுகளே. எனவே இராஜாங்க திணைக்களம் இயங்குவது இவ்விரு சபைகளின் அறிவுறுத்தலில். அச்சபைகள் முடிவுகளை எடுப்பது இராஜாங்க திணைக்களத்தின் கருத்து, சபை உறுப்பினர்களின் விருப்பு அச்சபைகளிற்கென இருக்கும் வெளியிறவு பிரிவின் கருத்து என்ற அடிப்படையில். எனவே, இக்குழு சென்ற நோக்கை நிறைவேற்றும் செல்வாக்கை யார் யார் வைத்திருக்கிறார்களோ அவர்களை சந்தித்து விளக்கமளித்தே இந்த சந்திப்பின் வெற்றி எனலாம்.




இந்த சந்திப்பின் பின்னராக அமெரிக்கா, கனடா, நோர்வே இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கைளில் இலங்கையரசு ஐ.நாவில் ஒப்புக்கொண்டு பரிந்துரைகளை செயற்படுத்த காலம்தாழ்த்துவதை பிரதானமாக குறிப்பிட்டு இருந்தன. அதிலும் குறிப்பாக நோர்வே மற்றும் கனடா போன்றவை இலங்கை அரசை ஒப்புக்கொண்ட செயற்திட்டங்களை நிறைவேற்றும் காலஅட்டவணை ஒன்றிற்குள் உடன்படுத்த வேண்டும் என்றும் சொல்லியிருந்தன. இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்ட செயற்திட்டங்களை நிறைவேற்ற தவறினால் வரும் ஆண்டு மார்ச் மாதமளவில் இலங்கை ஒரு கடுமையான சர்வதேச பிடிக்குள் சிக்கவே வாய்ப்புக்கள் அதிகம். எது எவ்வாறு என்றாலும், இலங்கையரசின் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களை அது சென்றடையும் வரை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு , புலம் பெயர்ந்த அமைப்புகள் மற்றும் சர்வதேச நாடுகள் ஆகியவற்றின் தோள்களில் இருந்து இந்த பொறுப்பு நீங்கிவிடப் போவதில்லை. ●

---

4-ம் பக்க தொடர்ச்சி..,

யேறியதில் கட்சி அங்கத்தவர்களிற்கும் முழுமையான உடன்பாடில்லை. வெளியேற வேண்டியளவு முரண்பாடெதுவும் தோன்றவில்லையென்று பலர் உணர்கிறார்கள். எனினும், ஏற்கனவே குறிப்பிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனின் இயல்பு அப்படியொரு பிளவை தோற்றுவித்துவிட்டது.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து விலகுவது, உதயசூரியனில் கூட்டணி அமைப்பது என்ற சுரேஷ் பிரேமச்சந்திரனின் முடிவு, கிட்டத்தட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் அரசியல் தற்கொலை முயற்சிதான். தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெளியேறும் போது, சுரேஷின் முன்னால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடனான கூட்டிற்கான கதவு அகல திறந்திருந்தது. எனினும், உதயசூரியன் சின்னத்தை பெறுவதற்கான நீண்டகால கனவின் அடிப்படையில் அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கைகோர்த்தார்.



உள்ளூராட்சி தேர்தலில் இந்த கூட்டணிதான் அதிகமாக அடிவாங்கியது. வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் கட்சியின் செல்வாக்குள்ள இடங்களில்கூட பலத்த அடி விழுந்துள்ளது. இதிலிருந்து மீள்வது ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு உண்மையிலேயே சிரமமானது.

அரசியல் தற்கொலையை நிகழ்த்த வல்ல முடிவுகளை ஈ.பி.ஆர்.எல்.எவ் இப்பொழுதுதான் எடுத்ததென்றில்லை. இந்தியப்படைகளுடன் சேர்ந்தியங்க எடுக்கப்பட்ட முடிவு முதலாவது தற்கொலை முயற்சி. எனினும், இந்தியா அவர்களை காப்பாற்றி வடக்கு,கிழக்கின் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொடுத்தார்கள். பின்னர், இலங்கை அரசு போஷித்து உயிர்வாழ வைத்தது. இதெல்லாம் ஒட்சிசன் வழங்கல் சிகிச்சைதான். விடுதலைப்புலிகள் 2002 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ் உட் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் இணைய வேண்டுமென எடுத்த முடிவுதான், அதன் மீள் உயிர்ப்பிற்கு காரணமாக அமைந்தது.

பொதுவாகவே, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பிற்குஒருவாக்குவங்கியிருந்தது. அதில் ஒரு பகுதியை ஈ.பி.டி.பி பிரித்தெடுத்து விட்டது. பின்னர், பத்மநாபா அணியிடம் மிகச்சிறிய சேதத்தை ஏற்படுத்தியது. எஞ்சிய வாக்குவங்கி, ஈ.பி.ஆர்.எல்.எவ் இடம் இருந்தது. ஆனால் கடந்த தேர்தலில் அந்த வாக்குகளை அவர்களால் தக்கவைக்க முடியவில்லை. புதிய கூட்டணியை வாக்காளர்கள் விரும்பவில்லை. அதனால்தான், அரசியல் தற்கொலை முயற்சியென குறிப்பிட்டேன்.

இந்த ஆபத்தான கட்டத்திலிருந்து எப்படியாவது மேலெழ வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் முயற்சிக்கும். போர்க்களத்தில் வாளை இழந்த போர் வீரனின் நிலைமையில் நின்றுதான், இந்த முயற்சியை அவர்கள் எடுக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் வீழ்ச்சி, பேரம்பேசலுக்கான வாய்ப்பை இல்லாமலாக்கிவிட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எவ் முன்னர் இப்படியான நிலைமையை எதிர்கொண்ட போது, இந்தியா,இலங்கை, புலிகள் காப்பாற்றினார்கள். இப்பொழுது ஈ.பி.ஆர்.எல்.எவ் நீந்தி கரைசேர இரண்டேயிரண்டு துரும்புகள்தான் உள்ளன. ஒன்று, கஜேந்திரகுமார் பொன்னம்பலம். மற்றது, விக்னேஸ்வரன். இவர்களுடனான கூட்டணிதான், சுரேஷ் பிரேமச்சந்திரனை காப்பாற்ற வாய்ப்புள்ளது.

தமிழ்தேசிய மக்கள் முன்னணியுடன் கூட்டணி பேச்சை நடத்திக்கொண்டே, இன்னொரு கூட்டணி வைத்த அதிருப்தி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் உள்ளது. அதனால், அவருடன் கூட்டணி வைக்க அல்லது கூட்டணி வைத்தாலும் மரியாதைக்குரிய இடத்தில் இருக்க சுரேஷிற்கு வாய்ப்பிருக்குமா என்பது தெரியவீல்லை.

ஈ.பி.ஆர்.எல்.எவ் உடனான கூட்டணியை விக்னேஸ்வரனும் உள்ளூர ரசிக்கவில்லை. இரண்டு கூட்டணிகளையும் தவிர்த்து, தமிழ் தேசிய கூட்டமைப்பையும் தவிர்த்து ஈ.பி.ஆர்.எல்.எவ் இன்னொரு தேர்தலில் களமிறங்கினால்,ஈ.பி.ஆர்.எல்.எவ் தனக்கான புதைக்குழியை தோண்டுவதாகவே அர்த்தம். இது சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் தெரியும். ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கும் தெரியும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சிக்கு நான்காவது தடவையாக சிகிச்சையளிக்கப்போகும் அந்த வைத்தியர் யார் என்பதே இப்போதைய கேள்வி. ●

இம்ரான்பாண்டியன் படையணி தளபதியாக கடாபி இருந்த காலத்தில் கடும் கட்டுக்கோப்புடன் படையணியை வழிநடத்தினார். இம்ரான்பாண்டியன் படையணிக்குள் பலஉபபிரிவுகளை உருவாக்கியிருந்தார். அவற்றில் ஒன்றுதான், படையணிக்கான புலனாய்வு பிரிவு. ஈழ யுத்தத்தின் இறுதியில் பெரும் புகழ் பெற்றிருந்தவர்களில் ஒருவர் இரட்ணம் மாஸ்ரர். சாதாரண போராளியாக இருந்த இரட்ணம் மாஸ்ரரை, இந்த நிலைக்கு அழைத்து வந்தது கடாபிதான்.

பிரபாகரனின் பாதுகாப்பு விவகாரங்களை கவனித்து வந்ததால், இம்ரான் பாண்டியன் படையணிக்குள்ளும் பாதுகாப்பு படையணியில் இருப்பவர்கள் அனுமதியின்றி விடுமுறையெடுப்பது கடுமையான தண்டனைக்குரிய குற்றம். சிவில் குற்றங்களில் ஈடுபடுவது அதைவிட பயங்கரமான குற்றம். பாதுகாப்பு படையணியில் இருந்த நிலையில், புலிகள் அமைப்பை விட்டு விலகுவதும் தண்டனைக்குரிய குற்றம்.


இதில் எந்த வகைக்குள் அடங்கியிருந்தாலும், அவர் படையணியின் புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்படுவார். இதில் அதிககாலம் தண்டனைக்கு உள்ளாகுபவர்கள், பிரபாகரனின் பாதுகாப்பு படையணியில் இருந்து, அமைப்பை விட்டு விலக முடிவெடுப்பவர்கள்தான். நிகழ்ந்திருக்கும். சிறைச்சாலையிலிருந்து வெளியில் வருபவரால், பிரபாகரனின் மெய்பாதுகாவலர் அணியை மீண்டும் அணுகி, தகவல் எதுவும் பெற முடியாது.

எனினும், சிறைச்சாலை நடைமுறைகள் மிக மோசமானவையாக இருந்தன. கம்பிக்கூட்டுக்குள், இருட்டு அறைகளிற்குள் தொடர்ந்து அடைத்து வைப்பதால், சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்படும் போராளிகள் முள்ளந்தண்டு பிரச்சனை, பார்வை பிரச்சனைக்கு உள்ளாக தொடங்கினர். 1997 - 2000 ஆம் ஆண்டு வரை இது நீடித்தது. ஒவ்வொரு ஆண்டும் இந்த பிரச்சனையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சிறைச்சாலையில் இருந்து வருவதாக சொன்னார்கள். உடனே, இது பற்றி பிரபாகரனிற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அந்த கடிதத்தில், இம்ரான் பாண்டியன் படையணியின் சிறைச்சாலையில் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய புள்ளிவிபரத்தையும் இணைத்திருந்தார்.

இதைப்பார்த்ததும், பிரபாகரனிற்கு அதிர்ச்சியாக போய்விட்டது. தனது பாதுகாப்பின் பெயரில், போராளிகள் பாதிக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. உடனடியாக கடாபியை அழைத்து, அந்த சிறைச்சாலையை இடித்து அழிக்குமாறு கூறினார்.

அப்பொழுது தலைமைசெயலக பொறுப்பாளராக நியமிக்கப்



துப்பாக்கிகளின் அதிக சத்தத்தை பிரபாகரன் விரும்புவதில்லை

மினி தொடர் 7

# எய்மர் கடாபி சுட்டு விழுத்தியது குருவியை அல்ல; விமானத்தை!

## பிரபாகரன் பிஸ்டலை கழற்றி கொடுத்ததற்கும் காரணமுண்டு!

### யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

ஒரு புலனாய்வு பிரிவு அமைக்கப்பட்டது. பிரபாகரனின் பாதுகாப்பு படையணியிலுள்ள போராளிகளை கண்காணிப்பது, பிரபாகரனின் முகாம் அமைந்துள்ள பகுதியின் வெளிப்புற பாதுகாப்பை கவனிப்பது, விசாரணை பிரிவு, சிறைச்சாலை பிரிவு என்பனவற்றுடன் பெரியதொரு நிர்வாக அலகாக வளர்ச்சியடைந்திருந்தது. விடுதலைப்புலிகளிடம் இருந்த சிறைச்சாலைகளில் மிகப்பயங்கரமான சிறைச்சாலையாக, இம்ரான்பாண்டியன் படையணி சிறைச்சாலையே இருந்தது. கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகளும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்துதான், இம்ரான் பாண்டியன் படையணிக்குள் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. அதற்கு காரணமும் இருந்தது.

பிரபாகரனின் இரகசிய இருப்பிடத்தை அறிந்தவரை வெளியில் விட்டால், பிரபாகரனிற்கு ஆபத்து ஏற்படலாமென புலிகள் நினைத்தனர். அதனால், பிரபாகரனின் பாதுகாப்பு படையணியில் இருந்து அவர் விலக்கப்பட்டு, இரண்டு வருடம் தண்டனை வழங்கப்பட்ட பின்னர்தான் வீட்டுக்கு அனுப்பப்படுவார். இதில் ஆறு மாதமோ,ஒருவருடமோ தனிமைச்சிறையாக இருக்கும். இருளான பதுங்கு குழிக்குள்ளும் அடைக்கப்படுவார்கள். வெளியுலக தொடர்பு எதுவும் அவர்களிற்கு இருக்காது.

இந்தஇரண்டுவருடஇடைவெளியில் பிரபாகரனின் பாதுகாப்பு நடைமுறையில் மாற்றம் நிகழ்ந்திருக்கும். அவரது இருப்பிடமும் மாறியிருக்கும். இரண்டு வருடங்களின் முன்னர் பாதுகாப்பு அணியிலும் மாற்றம் அதிகரித்தபடியே சென்றது.

விடுதலைப்புலிகளின் மருத்துவ துறையில் முக்கியஸ்தராக இருந்தவர் வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன். புலிகளின் முக்கியஸ்தராக இருந்த கரிகாலனின் மனைவி. டொக்ரர் அன்ரி என்றால் எல்லோருக்கும் தெரியும்.

சிறைச்சாலையிலிருந்து முள்ளந்தண்டு, கண் பிரச்சனைகளுடன் அதிகளவானவர்கள் கொண்டு செல்லப்பட, டொக்ரர் அன்ரியின் கவனம் இந்த விவகாரத்தில் திரும்பியது. மூன்று வருடத்தில் இம்ரான் பாண்டியன் படையணியில் இருந்து அதிகளவானவர்கள் முள்ளந்தண்டு, கண் பிரச்சனையுடன் ஏன் வருகிறார்கள் என்பதை டொக்ரர் அன்ரி ஆராயத் தொடங்கினார். பாதிக்கப்பட்டவர்கள் அனைவருமே, படையணியின் புலனாய்வுத்துறையின் பட்டிருந்தவர் தேவன். இம்ரான் பாண்டியன் படையணியில், பிரபாகரனின் பாதுகாப்பு அணிக்கு பொறுப்பாக இருந்தவர். பின்னர், தலைமை செயலக பொறுப்பாளராக பிரபாகரனால் நியமிக்கப்பட்டிருந்தார். அவரை அழைத்த பிரபாகரன், சிறைச்சாலை உடைப்பதை கண்காணிக்கும்படி கூறினார்.

கடாபியின் கீழ் வளர்ந்தவர் தேவன். தேவன் இந்த இடத்திற்கு வந்ததற்கு காரணமும் அவர்தான். இப்பொழுது முக்கிய பொறுப்பில் இருந்தாலும், கடாபி விசயத்தில் தேவன் தலையிடவில்லை. தனது பொறுப்பாளராக இருந்தவரை, எப்படி நான் சிரமப்படுத்துவது என்று நினைத்தோ என்னவோ பேசாமல் இருந்துவிட்டார்.

தேவன் பேசாமல் இருக்க, கடா

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

பியும் அதைப்பற்றி கவனிக்காமல் இருந்துவிட்டார். ஆனால், பிரபாகரன் அப்படியிருக்கவில்லை. சிலவாரங்களின் பின்னர், திடீரென தேவனை அழைத்து, சிறைச்சாலை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதா என கேட்டார். தேவன் கையை பிசைந்து கொண்டு நிற்க,பிரபாகரனிற்குஎல்லாம் புரிந்துவிட்டது. கடாபியையும், தேவனையும் அவர்களின் பொறுப்புக் களில் இருந்து நீக்கினார்!


பிரபாகரனுடன் கடாபி

கடாபி விடுதலைப்புலிகள் அமைப் பிற்குள் உச்சநிலையில் இருந்தபோதும், அவர் வெளியில் அவ்வளவாக அறியப் பட்டிருக்கவில்லை. கடாபி பற்றிய செய்திகளோ, படங்களோ வெளியில் அதிகம் வரவில்லை. காரணம், அவர் செய்தது அத்தனையும் புலிகளின் இரகசியமான வேலைகளை.

வெளியில் வரவில்லை என்பதற்காக அவர் சாதாரண ஆள் கிடையாது. அன்றாடம் செய்திகள் வெளியான தளபதிகளை விட, அதி முக்கியமான ஆளாக புலிகளிற்குள் இருந்தார். அமைப்பிற்குள் அப்படி பெயரும், புகழும் கொண்டிருந்த கடாபி, ஒரே நாளில் அனைத்தையும் இழந்தார்.

கடாபி பொறுப்பிலிருந்து நீக்கப் பட்டு, அந்த இடத்திற்கு இரட்ணம் மாஸ்ரரை பிரபாகரன் நியமித்தார்.

கடாபிக்கு கொஞ்சநாள் எந்த பொறுப்பும் வழங்கப்படவில்லை. பின்னர், புதிய போராளிகளிற்கான பயிற்சி முகாம் பொறுப்பாளர் என்ற சாதாரண பொறுப்பொன்றை கொடுத்தார் பிரபாகரன். அது மிகச்சாதாரண பொறுப்பு.

இந்த இடத்தில்தான் கடாபியை பற்றிய இன்னொரு விசயத்தையும் சொல்ல வேண்டும். முன்னரே குறிப் பிட்டிருக்க வேண்டும், தவறிவிட்டது. அது கடாபியின் நிர்வாக ஆளுமை.

இம்ரான் பாண்டியன் படையணி யின் கீழ் எண்ணற்ற பிரிவுகள் இருந்தாலும், மிகச்சாதாரணமாக அதை நிர்வகித்தார். அவரது நிர்வாக ஆளுமைதான் காரணம். சிறிய படையணிகளிலேயே ஆட்பதிவு, துப்பாக்கி பதிவு, இதர விபரங்களில் சிக்கல் ஏற்பட்டு கொண்டிருக்க... ஒரு காலத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் அதிக போராளிகளையும், பிரிவுகளையும் வைத்து நிர்வகித்த

**நவீன ஆயுதங்கள் எது வந்தாலும், அதை முதலில் கையாண்டு பார்க்கும் ஆள் கடாபிதான். அவரது துல்லியமான சூட்டு திறமையினாலேயே, இந்த நிலையை அடைந்தார். சிறிய துப்பாக்கிகளில் இருந்து விமான எதிர்ப்பு ஏவுகணை வரை எது வந்தாலும், கடாபியை கடந்துதான் புலிகளிற்குள் செல்ல வேண்டும்!**


தளபதிகளுடன் துப்பாக்கி சுடும் போட்டியில் பிரபாகரன்

கடாபி, மிகச்சாதாரணமாக அதை நிர்வகித்தார். அனைத்து விபரங்களை யும் விரல்நுனியில் பேணினார். அனைவருக்குமான தேவைகளையும், உணவு வழங்களையும் திறம்பட நிர்வகித்தார். இதற்காக நிர்வாக கட்டமைப்புக்களை கச்சிதமாக உருவாக்குவார்.

புலிகளின் ஆரம்ப இராணுவ பயிற்சி முகாம்கள் தனி அலகாக இருந்த தில்லை. ஏதாவதொரு படையணியின் கீழ் இயங்கும். கடாபியின் கீழ் ஆரம்ப இராணுவ பயிற்சி முகாம் ஒதுக்கப்பட்ட பின், தனி அலகானது.

மிகப்பிரமாண்டாக கட்டியெழுப் பப்பட்ட இம்ரான் பாண்டியன் படையணியில் இருந்து (அதை கடாபிதான் அப்படி கட்டியெழுப் பினார்) என்னை நீக்கினால் என்ன, ஒன்றுமேயில்லாத இடத்திலிருந்தும் என்னால் அப்படியொரு நிர்வாக கட்டமைப்பை உருவாக்க முடியுமென பிரபாகரனிற்கே சவால் விட்டதைபோல, செயலில் செய்து காட்டினார்.

சில மாதங்களிலேயே புலிகளின் ஆரம்ப பயிற்சி முகாம் கட்ட மைப்பு, கச்சிதமான நிர்வாக கட்ட மைப்புக்களுடன் பிரமாண்டமானதாக மாறியது. கடாபி உருவாக்கிய அந்த நிர்வாக கட்டமைப்பை பார்த்து பிரபாகரனே அசந்து விட்டார். ஆரம்ப இராணுவ பயிற்சி முகாம் நிர்வாகத்தை இப்படியொரு, சிறந்த நிர்வாக கட்டமைப்பாக மாற்ற முடியுமென நானே எதிர்பார்க்கவில்லையென பிரபாகரன் மனம் திறந்து கடாபியை பாராட்டினார். அதுதான் கடாபி!

கடாபியின் இத்தனை வருட வரலாற்றில், அவர் நிழலை பார்த்து வானத்தில் பறக்கும் பறவையை சுட்டதோ... இன்னொரு போராளியின் தலையில் அப்பிளை வைத்து சுட்டு விழுத்தியதோ கிடையாது. அதெல்லாம் இட்டு கட்டப்பட்ட கதைகள். ஆனால் கடாபி துல்லியமாக சுடக்கூடியவர். புலிகள் அமைப்பிற்குள் அவர் சேர்ந்தபோதே, அவரது துப்பாக்கி சுடும் திறமையை அவதானித்தவர் கிட்டு. இதனால்தான் பிரபாகரனின் மெய்பாதுகாவலர் அணிக்குள் அப்பொழுதே இணைந்து விட்டார்.

கடாபி இறுதிவரை பாவித்தது EAGLE ரக பிஸ்டல். அதை ஆரம் பத்தில் பாவித்தவர் பிரபாகரன். ஏனோ தெரியவில்லை, விடுதலைப் புலிகள் அந்த ரக பிஸ்டலை அதிகம் வாங்கவில்லை. மற்றைய பிஸ்டல்களை விட, EAGLE பிஸ்டல் அதிக சத்தத்தை எழுப்பும். துப்பாக்கிகளில் இருந்து பெரிய சத்தம் வருவது பிரபா கரனிற்கு ஒத்துவராது. இயன்றவரை சத்தம் குறைவான துப்பாக்கிகளின் மீதே அவருக்கு ஆர்வமிருந்தது. EAGLE பிஸ்டலை கடாபியிடம் கொடுத்துவிட்டார் பிரபாகரன்.

துப்பாக்கி சுடும் போட்டியொன்றில் பிரபாகரனும், கடாபியும் ஈடுபட்ட தாகவும், அதில் பிரபாகரன் தோல்வி யடைந்ததை தொடர்ந்து EAGLE பிஸ்டலை கடாபியிடம் கொடுத்தார் என்றும் ஒரு கதையுள்ளது. அதுவும் தவறானது.

விடுதலைப்புலிகளிற்கு நவீன ஆயுதங்கள் எது வந்தாலும், அதை முதலில் கையாண்டு பார்க்கும் ஆள் கடாபிதான். அவரது துல்லியமான சூட்டு திறமையினாலேயே, இந்த நிலையை அடைந்தார். சிறிய துப்பாக்கிகளில் இருந்து விமான எதிர்ப்பு ஏவுகணை வரை எது வந்தாலும், கடாபியை கடந்துதான் புலிகளிற்குள் செல்ல வேண்டும்!

புலிகள் வெற்றிகரமாக முதலில் பாவித்தவிமானஎதிர்ப்புஏவுகணையை இயக்கியவரும் கடாபிதான். 1995 இல் யாழ்ப்பாணத்தில் இரண்டு புக்காரா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. கடாபிதான் அவற்றை சுட்டு விழுத்தினார். இதன்பின், பல ஹெலிகொப்ரர்களையும் சுட்டு வீழ்த்தினார். அதாவது, உருவாக்கப் பட்ட புனைகதைகளில் சொல்லப் படுவதைபோல, தலைக்கு மேல் அப்பிளை வைத்து அவர் சுடவில்லை. நிழலை பார்த்து குருவியையும் சுடவில்லை. தலைக்கு மேல் பறந்த விமானத்தைதான் சுட்டு விழுத்தினார்.

கடாபியின் துல்லியமான சூட்டை யாரும் சந்தேகிக்க முடியாது. அதற்காக அவரைப்பற்றி அளவிற்கு அதிகமாக இல்லாத கதைகளை பரப்ப வேண்டிய அவசியமில்லைத்தானே.

இம்ரான் பாண்டியன் படையணி தளபதியிலிருந்து கடாபியை, பிரபாகரன் நீக்கினாலும், இருவருக்குமிடையில் இருந்த நெருக்கம் கடைசிவரை குறையவில்லை. இதற்கு உதாரணமாக ஒரு சம்பவமுண்டு. புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்து சென்றுவிட்டார். இதனால் கடும் நெருக்கடி ஏற்பட்டது. அமைப்பிற்குள் ஏற்பட்ட குழப்பத்தால் பிரபாகரனும் வருத்தத்தில் இருந்தார். கருணா பிரிந்து செல்ல அறிவித்த சமயத்தில், பிரபாகரன் மாற்று ஏற்பாடுகளிற்கான உத்தரவுகளை பிறப்பித்துவிட்டு, தனிமையான இடம் ஒன்றிற்கு சென்றுவிட்டார். அவரது மனம் சோர்ந்திருந்தது. தனிமையில் இருக்க வேண்டுமென தோன்றியதால், காட்டுக்குள்ளிருந்த தனது இரகசிய மறைவிடம் ஒன்றிற்கு சென்றுவிட்டார். தனியாக போகவில்லை. கடாபியையும் அழைத்துக்கொண்டுதான் போனார்!

அங்கு நீண்டநேரம் கடாபியுடன் தனிமையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்திருக்கிறார். கருணா என்ற போராளியில் எவ்வளவு நேசமும், நம்பிக்கையும் கொண்டிருந்தேன், அவருக்கு எப்படியெல்லாம் வாய்ப் புக்கள் கொடுத்தேன் என பழைய நினைவுகளையெல்லாம் அசைபோட் டிருக்கிறார்.

கடாபி தொடர்பாக உலாவிய கட்டுக்கதைகள்,அவற்றின் உண்மைகள் பற்றி கடந்த இரண்டு வாரமாக குறிப் பிட்டிருந்தோம். இதை படித்த பின் வாசகர்களிற்கு, தெளிவு பிறந்திருக்கு மென நம்புகிறோம். சரி, முக்கியமான விசயத்தை சொல்லாமல் தப்பிக்க பார்க்கிறோம் என்று நினைக்கிறீர்களா?

அவசரப்படாதீர்கள். கடாபியின் முடிவு எப்படி அமைந்ததென்பதை கட்டாயம் குறிப்பிடுவோம். ஆனால், இந்தவாரமல்ல. அடுத்த வாரம்வரை காத்திருங்கள். (தொடரும்)

**(இடப்பற்றாக்குறை காரணமாக, கடந்தவாரம் மினி தொடர் இடம்பெறவில்லை வாசகர்களே. அசௌகரியங்களிற்கு வருந்துகிறோம்)**




# கால் விலங்குகள்போடும் கற்பனைக் குதிரைகள்

சாள்ஸ் ஜே போர்மன்

**1988**ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒருநாள் ஜேர்மனியிலிருந்த Schwartzwald நகரில் இரண்டு குடியானவர்களிடையே பெரும் வாக்குவாதம் உண்டாயிற்று. அவர்களைக் கடந்து வீதியில்போன அந்த வாகனம் எந்தச்சக்தியைக் கொண்டு இயங்குகிறது என்று அவர்களுக்குள் ஏற்பட்ட வாக்குவாதம் அடிபிடி வரையும் போனதாக விபரிக்கப்படுகிறது.

அவர்கள் கண்ட அந்த அதிசய வாகனத்தில் பெர்த்தா பென்ஸ் தனது மகனுடன் Pforzheim நகரிலிருந்த தங்கள் உறவினர் வீட்டுக்கு அதிகாலையில் புறப்பட்டார். சுமார் 80 கி.மீற்றர்கள் பயணம்செய்து அவர்கள் உறவினர் வீட்டை அடைந்தபோது இருட்டாகி விட்டிருந்தது.

அவர்கள் பயணம் செய்த வாகனம் பெர்த்தாவின் கணவன் கார்ல் பென்ஸால் கண்டுபிடிக்கப்பட்டு 1886 இல் வடிவமைக்கப்பட்டு தயாராகி 1887 இல் விற்பனைக்குத் தயாராக இருந்தது, வாங்குவதற்கு எவரும் வராமலேயே.

கார் என்ற அந்த தனியார் வாகனம் மனித சரித்திரத்தில் செய்த முதலாவது நீண்டதூரப் பயணம் பெர்த்தா பென்ஸின் உறவினர் வீட்டுப் பயணத்தைத்தான். அன்று சந்தைக்கு வந்தபோது எந்தவித ஆர்வத்தையும் உண்டாக்காத அந்த வாகனம் இன்று எங்கள் வாழ்வில் எத்தனை அவசியமாகியிருக்கிறது?

மேல்நிலை கல்லூரி ஆசிரியராக இருக்கும் நான் எனது தினசரி வாழ்க்கையில் பெரும்பாலும் இளம் தலைமுறையினரை சந்திக்கிறேன். பொதுவாகப் பல விடயங்களையும் எங்களுக்குள் சம்பாஷிக்கும்போது அவர்களது சமீபகால எதிர்கால கனவுகளில் ஒன்றாக "நான் ஒரு கார் வாங்க வேண்டும்" என்று கண்கள் விரிய அதைப்பற்றி வர்ணிப்பதை கேட்கிறேன்.

உலகில் எங்கே சென்று இவர்களது வயதுக்காரர்களிடம் கேட்டாலும் அவர்களில் பெரும்பாலானோரும் இதையே சொல்வார்கள் என்று நம்புகிறேன். எனது இளவயதிலும் நான் இப்படியாக கற்பனைகளுடன் வாழ்ந்திருக்கிறேன்.

முதலாவதாக வாங்கிய காருக்குப் பின்பு பல கார்களையும் மாற்றி இப்போதும் எனது உடமைகளில் ஒன்றாகக் கார் இருக்கிறது. ஆனால், அன்று நான் கண்ட கற்பனைகளுடன் இப்போது நான் எனது காரை பாவிப்பதில்லை.

சுவீடனில் சுமார் 50,000 மக்கள் தொகையுள்ள நகரமொன்றின் வெளியே இருக்கும் சிறு கிராமத்தில் நான் வாழ்கிறேன். எனது வேலைக்காக நான் வேறொரு நகருக்குப் போக வேண்டியிருப்பதால் எனக்கு கார் தினசரிப் போக்குவரத்துத் தேவைகளுக்கு அவசியமாக இருக்கிறது.

சுமார் 10 கி.மீ தூரத்துக்கு அதிகம் போக வேண்டும் என்றால் மட்டுமே நான் எனது காரை பாவிக்கிறேன். அதன் முக்கிய காரணம் செலவைக் குறைப்பதல்ல, மாறாக சுற்றுப்புற சூழ்நிலையை மாசுபடுத்தலாகாது என்பதும், நடப்பது அல்லது சைக்கிளை பாவிப்பது தேக ஆரோக்கியத்துக்கு நல்லது என்று நான் புரிந்து கொண்டதாலும் தான்.

பெரும்பாலானோருடைய கார் கனவுகளும் இப்படித்தான் என்று நினைக்கிறேன். ஆரம்பத்தில் கனவுகளையும், கற்பனைகளையும் நிறைவு செய்ய வாங்குவதில் ஆரம்பித்தாலும், நாளாக, ஆக அவைகளின் பிரயோசனத்துக்காகவே பாவிக்கப்படுவதாக மாறுகின்றன. கார்கள், அவைகளை ஓட்டுவது எல்லாம் இயந்திரத்தனமாகின்றன. அவைகளை பாவிப்பதாலும் எங்கள் நாளாந்த வாழ்வு பல விதங்களிலும் இயக்கப்படுகிறது.

எதற்காக இப்போது தனியார் வாகனங்கள் பற்றிச் சொல்ல ஆரம்பிக்கிறேன்?



சமீபத்தைய வருடங்களில் உலகின் முக்கிய நகரங்கள் சில தமது எல்லைக்குள் பகுதியாகவோ, முழுவதுமாகவோ தனியார் வாகனங்களைத் தடை செய்யும் திட்டங்களை அறிவித்திருக்கின்றன.

ஒஸ்லோ (நோர்வே), மட்ரிட் (ஸ்பெயின்), செங்டு (சீனா), ஹம்பர்க் (ஜேர்மனி), கொப்பன்ஹேகன் (டென்மார்க்), பாரிஸ் (பிரான்ஸ்), லண்டன் (பிரிட்டன்) பிரசெல்ஸ் (பெல்ஜியம்), பெர்லின் (ஜேர்மனி), மெக்ஸிகோசிட்டி (மெக்ஸிகோ), பொகொதா (கொலம்பியா), சான்பிரான்ஸிஸ்கோ (அமெரிக்கா) ஆகியவை அவற்றில் சில..

நான் வாழும் சுவீடனைப் பொறுத்த வரை நாட்டின் பாராளுமன்றம் நகரங்களில் இருந்து தனியார் மோட்டார் வாகனங்களை முழுமையாக அகற்றுவதற்காக என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது பற்றி ஆராய ஒரு குழுவை நிறுவியிருக்கிறது.

தனியார் மோட்டார் வாகனங்களை நகரங்களிலிருந்து அகற்றுவது பற்றி ஏன் நகரங்கள் சில சிந்திக்க ஆரம்பித்திருக்கின்றன, அப்படியானால் அவர்களது எதிர்கால நகரங்கள் எப்படி இருக்கும் போன்றவை பற்றி இத் தொடரில் அலசப் போகிறேன்.

எதிர்கால நகரங்களைப் பற்றி சிந்திக்கும்போது, கடந்தகால நகரங்களின் அமைப்புக்களையும்பற்றி சிந்திப்பதும் அவசியமாகிறது. அத்துடன் சுமார் 100 வருட காலத்துக்குப் பின்பு ஏன் எங்கள் போக்குவரத்துச் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன, அவைகளுக்கான உப காரணிகள் எவை என்பவற்றையும் இந்த தொடரில் ஆராயப் போகிறேன்.

கண்ணை மூடிக்கொண்டு ஒரு நிமிடம் சிந்தியுங்கள்!

சாதாரணமான ஒரு நகருக்குள் நீங்கள் நிற்கும்போது உங்களுக்கு என்னென்ன விடயங்கள் அங்கே இடைஞ்சலாகத் தோன்றுகின்றன?

மாசுபடுத்தப்பட்ட காற்று, மண்டையைப் பிளக்க வைக்கும் சத்தம், இஷ்டப்பட்டபடி நகர முடியாமல் போக்குவரத்தால் ஏற்படுத்தப்படும் இடைஞ்சல்கள், சிந்தனையை ஒருமுகப்படுத்த முடியாமல் ஏற்படும் மனச்சஞ்சலம், ஆங்காங்கே குவிந்து கிடக்கும் குப்பை கூளங்கள், அடுத்தவரை பொருட்படுத்தாமல் எதையோ நோக்கி விரைந்து கொண்டிருக்கும் சக மனிதர்கள், வாகன விபத்துக்கள்... என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

அல்லது...

தற்போது லண்டனில் தனியார் வாகனங்கள் ஒரு துவிச்சக்கர வண்டியை விட மெதுவாக ஒரு மிருக வண்டியின் வேகத்தில்தான் நகர்கின்றன. அமெரிக்காவில் சுமார் ஒரு பில்லியன் வாகன நிறுத்துமிடங்கள் இருக்கின்றன. அதாவது நாட்டில் இருக்கும் ஒவ்வொரு காருக்கும் நான்கு நிறுத்துமிடங்கள் இருக்கின்றன. அதே சமயத்தில் நாட்டின் வீதிகளெல்லாம் கூட அதே கார்களுக்காகவே பாவிக்கப்படுகின்றன.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் வாகனத்தில் பயணம் செய்பவர்கள் வருடத்தின் 90 மணித்தியாலம் போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொள்வதில் கழிக்கிறார்கள்.

நகரங்களில் வாகனங்களை செலுத்துகிறவர்கள் தமது வாழ்நாளில் 105 நாட்களை அவற்றை நிறுத்துவதற்கான

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!



**பயம், சோகம், கணவன் - மனைவி இடையேயான மன வேற்றுமை, சுய இன்பத்தால் ஆற்றல் வீணாகிவிடும் போன்ற மூடநம்பிக்கைகளாலும் ஆணுறுப்பு விரைப்புத் தன்மையில் பிரச்னை ஏற்படும்.**

**டி.நாராயண ரெட்டி,**
செக்ஸாலஜிஸ்ட்

'அழுக்குத்தீரக் குளித்தவனுமில்லை; ஆசைதீர அனுபவித்தனுமில்லை' என்று ஒரு பழமொழி உண்டு. வாழ்வின் இறுதி விநாடி வரை தீராதவை செக்ஸ் குறித்த சந்தேகங்கள். காதல், கவர்ச்சி, இன்பம், இணைப்பு, இனப்பெருக்கம், நிறைவு இவற்றில் எதை செக்ஸுக்கான விளக்கமாக எடுத்துக்கொள்வது?

புகழ்பெற்ற தத்துவ அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டு, 'எல்லோருடைய பலவீனமும் பலமும் செக்ஸ்தான்' என்கிறார். அது, வாழ்வில் பிரிக்க முடியாதது, தவிர்க்க முடியாதது. அது இல்லையென்றால், உலகம் உயிரினங்களற்ற, உயிரற்ற ஓர் உருண்டை. அவ்வளவுதான். அப்படிப்பட்ட பெருமைக்குரிய செக்ஸை நாம் எவ்வளவு மோசமாகப் புரிந்து வைத்திருக்கிறோம் என்பதே வேதனையான ஒன்று. அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம்... என அத்தனைத் துறைகளும் அபார முன்னேற்றம் அடைந்திருக்கும் இந்தக் காலத்திலும், செக்ஸ் குறித்த மூட நம்பிக்கைகள்தான் நம்மை, குறிப்பாக இளைஞர்களை ஆட்டிப்படைக்கின்றன.

எந்த நோயும் இல்லாதவர்களுக்கும், உடலுறவின் போது பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் ஆணுறுப்பின் முன்பகுதி தோல் (Fore skin) கடினமாக, பின் நோக்கித் தள்ள முடியாதபடி இருப்பது. இந்த நிலைக்கு 'ஃபைமோசிஸ்' (Phimosis) என்று பெயர். இதன் காரணமாக உடலுறவின்போது கடுமையான வலி ஏற்படும். விந்து சீக்கிரமாக வெளியேறாது. தோல் கிழிந்து ஆணுறுப்பு காயமாகலாம். பொதுவாகவே, குளிக்கும்போது, ஆணுறுப்பின் முன் பகுதியில் இருக்கும் தோலைப் பின்பக்கம் தள்ளிவிட்டு விட்டு, அதை நன்றாகக் கழுவ வேண்டியது அவசியம். அப்போதுதான் நோய்த்தொற்றுகள் ஏற்படாது. ஆணுறுப்பின் முன்பகுதியில் உள்ள தோல் (Fore skin) பின்பக்கம் தள்ள முடியாமல் சிலருக்கு இருப்பதுண்டு. சிலருக்குப் பிறப்பிலேயே அதுபோல இருக்கலாம். அல்லது, ஏதாவது நோய்த்தொற்றின் காரணமாகவும் அப்படி இருக்கலாம். பிறந்ததிலிருந்து அப்படி இருந்தால், அதற்கு ஒரே வழி 'சுன்னத் அறுவை சிகிச்சை' (Circumcision) செய்வதுதான். நோய்த்தொற்றின் காரணமாக இதுபோல இருந்தால், தகுந்த சிகிச்சை எடுத்துக்கொண்டால் மட்டுமே சரியாகும்.

'விரைப்புத்தன்மை நீண்ட நேரம் நீடிக்கும்' என்று சொல்லி, பல எண்ணெய்களையும், மாத்திரைகளையும் விற்பதற்கான விளம்பரங்களைப் பார்த்திருப்போம். ஒன்றை மட்டும் நினைவில்கொள்ளுங்கள். எந்த மருத்துவமாக இருந்தாலும், நல்ல மருந்துக்கு விளம்பரம் தேவையில்லை. நல்ல மருந்துகளை மருத்துவர்களே பரிந்துரைத்துவிடுவார்கள். விரைப்புத் தன்மை பிரச்னைக்கான காரணத்தை முதலில் கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிக்க வேண்டும். விரைப்புத் தன்மைப் பிரச்னைக்கு ஆணுறுப்பு அமைப்பில், ஹார்மோனில், ரத்தக்குழாய்களில் பிரச்னைகள் இருக்கலாம்...

உட்கொள்ளும் மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகள் காரணமாக இருக்கலாம்... நரம்பு தொடர்பான பிரச்னைகளும் காரணமாகலாம். இவை உடல் ரீதியான கோளாறுகள். குழந்தைப் பருவத்தில் எப்படிப்பட்ட சூழலில் ஒருவர் வளர்க்கப்படுகிறார் என்பது மனரீதியான ஒரு காரணி.

தன்னம்பிக்கையின்மை, பயம், சோகம், கணவன்மனைவி இடையேயான மன வேற்றுமை, சுய இன்பத்தால் ஆற்றல் வீணாகிவிடும் போன்ற மூடநம்பிக்கைகளாலும் ஆணுறுப்பு விரைப்புத் தன்மையில் பிரச்னை ஏற்படும். இந்தப் பிரச்னையைச் சரியான மருத்துவ சிகிச்சை மூலம் சரிசெய்துவிட முடியும் என்பதே உண்மை.

**(இன்னும் கற்றுத் தருகிறேன்)**

---

இடங்களைத் தேடுவதில் செலவழிக்கிறார்கள்.

ஒவ்வொரு நகரவாசியும் தனக்குப் பாவிக்கக்கூடிய நிலப்பரப்பில் 50 - 60 விகித நிலத்தை தனியார் வாகனங்களுக்காகவே செலவழிக்கிறார்கள் என்று சில கணிப்பீடுகள் எங்களுடைய அனுபவங்களுக்கு விபரங்களைத் தரலாம்.

மேற்கண்ட நிலைமை உண்டாகக் காரணமாக இருப்பது என்ன என்று கவனித்தால் இலகுவாக எங்களால் மறுமொழி சொல்லிவிட முடியும்.

வாகனங்கள், முக்கியமாக தனியார் வாகனங்கள்!

கார்ல்பென்ஸ் 1887 இல் விற்பனைக்கு அறிமுகப்படுத்திய மொடல் 3 என்ற அந்த மூன்று சக்கர வாகனம் 1891 வரை 25 தயாரிக்கப்பட்டன. 1894 இல் அவ் வாகனத்தின் புதிய அமைப்பான 'வேலோ" அறிமுகப்படுத்தப்பட்டபோதுதான் மோட்டார் வாகனங்கள் பாவிப்பதில் உயர் மட்டத்தினரிடையே ஆர்வம் உண்டாகியது.

1895 இல் 135 வாகனங்களை விற்ற பென்ஸ் மேலும் நான்கு வருடங்களில் 572 வாகனங்களை விற்றார். ஆனால் தொழிற்சாலைத் தயாரிப்பாக கார்கள் வெற்றிகரமாக ஆரம்பித்தது. மேலும் சில வருடங்களின் பின்பு பிரான்ஸிலும், பிரிட்டனிலும்தான். அதையடுத்து அமெரிக்காவிலும் இவ் வாகனங்கள் பாவிக்கப்பட ஆரம்பிக்கப்பட்ட போது தயாரிப்பும் மிக வேகமாக அதிகரித்தது. ஸ்பிரிங் பீல்டில்டுரயே சகோதரர்களின் தயாரிப்பான மோட்டார் வாகனங்கள் 1896 இல் விற்கப்பட ஆரம்பித்தன. அமெரிக்காவில்தான் மோட்டார் வாகனங்கள் ஓரளவு ஜனரஞ்சகமாக்கப்பட்டன.

அந்தவகையில் முக்கியமாக குறிப்பிட வேண்டியவர் ஹென்ரி போர்ட் என்றால் மிகையில்லை. ஐரோப்பாவில் பிரான்ஸ், பிரிட்டன் நாடுகள் மோட்டார் வாகனப் போட்டிகளை ஆங்காங்கே உண்டாக்கி அவ் வண்டிகளின் வேகத்தைக்காட்டி அவைகளை பிரபலமாக்கி கொண்டிருந்த அதே சமயத்தில் 1900-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ஹென்ரி போர்ட் தயாரிப்பு முறையில் புதிய வேகத்தை அறிமுகப்படுத்தினார்.

"ஒரே வகையிலான கார்களை தயாரித்து, அவைகள் ஒவ்வொன்றும் மற்றவைகளைப் போலவே இருக்க வைத்து அவைகளை ஒரே நேரத்தில் தயாரிப்பு நிலையத்திலிருந்து வெளியே உருளச் செய்ய வேண்டும்," என்ற தயாரிப்புக் கோட்பாடு போர்டின் வெற்றிக்கு காரணமாக இருந்தது. அதே கோட்பாடுதான் அவ்வாகனங்களைப் பொதுமக்களிடையே பிரபலமாகவும் செய்தது.

Model T என்ற பெயருடைய போர்ட் கார் 1908 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் 850 டொலர்களுக்கு விற்கப்பட்டன. அவ் வண்டிகளின் விலை 1815 இல் 440 டொலர்களுக்கு சரிந்தது. அதனால் 70 000 வண்டிகள் ஆரம்பத்தில் விற்கப்பட்ட அக் கார்களின் விற்பனையும் 500 000 ஆக அதிகரித்தது.

அமெரிக்காவில் கார்களின் விற்பனை வேகமாக வளரக் காரணம் அங்கே அதே சமயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருந்த பொருளாதார, சமூக வளர்ச்சிதான் என்பதை முக்கியமாக சுட்டிக்காட்ட வேண்டும். ஏனெனில் ஐரோப்பாவைப் போலன்றி அங்கே அச்சமயத்தில் ஒரு தொழிலாளர் சமூகம் பொருளாதார சுபீட்சத்தை அடைந்து கொண்டிருந்தது. அந்தப் பொருளாதார வளர்ச்சியின் சமூக அடையாளமாக உருவெடுத்தது கார் உடமை.


தொடரும்...




1991 ஶ 95 வரையில், இந்திய கால்பந்து அணிக்கு கேப்டனாக இருந்தவர், கேரளாவைச் சேர்ந்த வி.பி.சத்யன். தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா வுக்கு தங்கம் பெற்றுத் தந்தவர். அவரது சாதனைகளைப் போன்று, சோதனைகளும் அதிகம். விளையாட்டுத் துறையிலுள்ள அரசியல் காரணமாக பந்தாடப்பட்டவர் அவர். இதனாலேயே மன அழுத்தத்துக்கு ஆளானார். கால்பந்து மைதானத்தில் அவர் சந்தித்த சவால்களைவிடவும், மைதானத்துக்கு வெளியே சந்தித்த சவால்கள், பிரச்னைகள் ஏராளம். இதற்கிடையே, காலில் ஏற்பட்டிருந்த காயத்தாலும் அவதிப்பட்டு வந்தார். 2006ம் ஆண்டு சென்னையில் ஓடும் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

மிகப் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்திவிட்ட இந்த விளையாட்டு வீரனின் வாழ்க்கையைத் தழுவியே இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. சத்யனின் அத்தனை உணர்வுகள் மற்றும் சத்யனின் கால்பந்து மீதான வெறித்தன காதலை தனது நடிப்பால் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார், ஹீரோ ஜெயசூர்யா. மலையாளத்தில் மெதுவாக நகர்ந்த ஜெயசூர்யாவின் கேரியர், இந்தப் படத்தால் திருப்பு முனையைக் கண்டிருக்கிறது. 'நீ என் விளையாட்டுக்கு நடுவுல வரக்கூடாது. அதுதான் என்னோட முதல் மனைவி. வந்தின்னா, உன்னை விவாகரத்து பண்ணிடுவேன்' என்று மனைவி அனு சிதாராவை மிரட்டும் போதும் சரி, விளையாட்டுக்கு ஏற்ப தன் குடும்பத்துக்கும் முக்கியத்துவம் தர வேண்டும் என்று மெனக்கெடும்போதும் சரி, ஜெயசூர்யா ஜொலிக்கிறார். சந்தோஷ் கீழத்தோர், தீபக் பரம்போல், ஷரப் அலி என எல்லா கேரக்டர்களும் கச்சிதம். படத்தின் மிக முக்கிய அம்சம், பின்னணி இசை. கோபி சுந்தரின் பின்னணி இசை, படக் காட்சிகளின் வலிமையை மேலும் கூட்டுகிறது. ராபி வர்கீஸ் ராஜினுடைய கேமரா, கொல்கத்தாவுக்கு கதை நகரும் காட்சிகளில் ஒன்ற வைத்திருக்கிறது. இடைவேளைக்குப் பிறகான திரைக்கதையில் தொய்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. எனினும், சாதித்தும் அங்கீகாரம் கிடைக்காமல் போய்விட்ட ஒரு விளையாட்டு வீரரின் வாழ்க்கையை, மிக யதார்த்தமாகப் பதிவு செய்திருக்கின்றனர்.



# சின்னத்திரை

## விக்னேஷை விலக்கிய சிவகார்த்திகேயன்!

சிவகார்த்திகேயனை வைத்து படம் இயக்கும் முடிவிலிருந்து விக்னேஷ் சிவன் பின்வாங்கிவிட்டார். சிம்பு, ஹன்சிகா நடித்த 'போடா போடி' படத்தின் மூலம் அறிமுகமானவர் விக்னேஷ் சிவன். அந்தப்படம் சரியாக போகவில்லை. அடுத்து விஜய் சேதுபதி, நய்னதாராவை வைத்து 'நானும் ரௌடிதான்' படத்தை இயக்கினார். சூப்பர் டூப்பர் ஹிட். இதையடுத்து 'தானா சேர்ந்த கூட்டம்' படத்தை இயக்கும் வாய்ப்பை வழங்கினார் சூர்யா. ஸ்டூடியோ கிரீன் தயாரித்த இந்த படத்தில் கீர்த்தி சுரேஷ் நாயகி. கடந்த பொங்கல் விடுமுறையில் வெளியானது. தமிழ்நாட்டில் மட்டும் கிட்டத்தட்ட 16 கோடி ரூபா நட்டம் என்கிறார்கள். சிவகார்த்திகேயனை வைத்து விக்னேஷ் சிவன் இயக்கவிருந்த படத்தையும் ஸ்ரூடியோ கிரீன்தான் தயாரிக்கவிருந்தது. ஆனால் 'தானா சேர்ந்த கூட்டம்' தோல்வியடைந்ததால், புதிய புரஜெக்டில் இருந்து விக்னேஷ் சிவனை விலக சொல்லிவிட்டனர். "கொஞ்சம் லேட்டா பார்த்துக்கலாம் ப்ரதர்" என சிவகார்த்திகேயனும் கூறிவிட்டார். இப்போது சீமராஜா படத்தில் நடிக்கும் சிவகார்த்திகேயன், 'நேற்று இன்று நாளை' ரவிகுமாரின் இயக்கத்தில் நடிக்கிறார். அடுத்து எம்.ராஜேஷின் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார்.

## பிரபு தேவாவின் மெனுகார்ட் இதுதான்!

பிரபுதேவாவிற்கு 44 வயதாகியும் 20 வயது இளைஞனின் துடிப்புடன் இருக்கிறார். இதற்கு காரணம் அவரது உணவுப்பழக்கமும், நடனமும்தான். சைவ உணவை மட்டும் சாப்பிடும் பிரபுதேவா, காலையில் உடற்பயிற்சி முடிந்ததும் உலர்ந்த பழங்கள் மற்றும் முந்திரி, பதாம் போன்ற பருப்பு வகைகளுடன் இரண்டு வாழைப்பழங்களை சாப்பிடுகிறார். இதுதான் பெரும்பாலும் தினசரி அவரது உணவு. மதிய உணவில் கட்டாயம் அப்பளம் இருக்க வேண்டும். சின்ன வயதிலிருந்தே அப்பளம் இருந்தால்தான் சாப்பிடவே உட்கார்வாராம். எந்த உணவென்றாலும் அளவாக சாப்பிடுவாராம் இடையிடையே இளநீர், நீர்சத்து நிரம்பிய தார்பூசணி யூஸ் போன்றவற்றை அருந்துவார். அந்தந்த சீசனில் எந்த பழம் கிடைக்கிறதோ, அந்த யூஸை அதிகம் பாவிப்பார். தொடர்ச்சியாக வேலைப்பளு இருந்தால் மதியம் சாப்பிடாமல் வெறும் யூசுடன் இருந்து விடுவார். குறிப்பாக டான்ஸ் ரிகர்சல் இருக்கும் சமயத்தில் யூஸ்தான் முழு நாளுக்குமான எனர்ஜியை கொடுக்கும். இட்லி, இடியப்பம் போன்ற ஆவியில் வெந்த உணவுகள்தான் இரவில். 8 மணிக்குள் இரவு உணவை முடித்து விடுவாராம். அதன்பின் வெறும் தண்ணீர்தான் அருந்துவாராம்.

## என்ன செய்ய போகிறாள் நிலா?

நிலா, தியா இருவரும் இரட்டை சகோதரிகள். பார்ப்பதற்கு ஒரே மாதிரியே இருப்பார்கள். நிலாவிற்கும் பணக்கார பையன் ப்ரவீனுக்கும் திருமணம் நிச்சயமாகிறது. ஆனால் நிலாவோ, விஜய்யை காதலிக்கிறாள். எவ்வளவோ முயன்றும் நிலாவால் பெற்றோரை சம்மதிக்க வைக்க முடியவில்லை. எனவே கடிதம் எழுதி வைத்துவிட்டு காதலனுடன் சென்றுவிடுகிறாள். குடும்ப மானத்தை காப்பாற்ற, தியாவை நிலாவென சொல்லி ப்ரவீனுக்கு கல்யாணம் கட்டி வைத்துவிடுகிறார் தந்தை. தியாவும் அரவிந்த் என்பவனை காதலிக்கிறாள். நிலாவின் காதலை ஏற்காத பெற்றோர், தனது காதலையும் ஏற்கமாட்டார்கள் என, ப்ரவீனையே கல்யாணம் செய்கிறாள் தியா. இருந்தும், காதலனை ஏமாற்றியதை நினைத்து வருந்துகிறாள் தியா. இன்னொரு பக்கம், தியாவை நிலாவென நினைத்து பாசத்தை பொழிகிறான் ப்ரவீன். அவனிடம் தான் யாரென சொல்ல முடியாமல் தவிக்கிறாள். அவளது காதலன் அரவிந்தோ, ப்ரவீனிடமிருந்து விலகிவருமாறு கூறுகிறான். குடும்பத்தை பிரிந்து சென்ற நிலாவிற்கு, காதலன் விஜய் வீட்டில் அவ்வளவு வரவேற்பு இல்லை. விஜய்யின் பாட்டி, நிலாவை கடுமையாக எச்சரிக்கிறார். இந்தநிலையில், நிலா என்ன செய்ய போகிறாள்? விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'அவளும் நானும்' சீரியலின் மைக்கரு இதுதான். நிலா, தியா என இரட்டை சகோதரிகளாக மவுனிகா நடிக்கிறார். திங்கள் முதல் வெள்ளிவரை மதியம் 1.30 க்கு பார்க்கலாம்.

# வண்ணத் திரை



## ஜோடியை மகளாக நடத்திய ரஜினி

ரஜினியின் காலா படத்தில் நாயகியாக நடித்தவர் ஹூமா குரோசி. படப்பிடிப்பில் ரஜினியின் நடவடிக்கைகளை பார்த்து நெகிழ்ந்து போயிருக்கிறார். ரஜினியின் எளிமை வியப்படைய வைத்தது, ஒரு மகளைப் போல என்னை நடத்தினார் என்கிறார். ரஜினியின் வீட்டிலிருந்து உணவு வரவழைத்து குரேசிக்கும் விருந்து வைத்தாராம். தமிழ் கலாசாரம் தன்னை நெகிழ வைத்துவிட்டது என்கிறார். காலா படத்திற்கு பின்னர் தமிழ் படங்களில் தொடர்ந்து நடிக்க விரும்புகிறாராம். தமிழ் வாய்ப்புக்கள் நன்றாக வந்தால், மும்பையிலிருந்து சென்னைக்கு குடிபெயரவும் திட்டமிட்டுள்ளாராம்.

## தமிழுக்கு வரும் அல்லு அர்ஜுன்

தெலுங்கு முன்னணி நடிகர்கள் தமிழில் அறிமுகமாகும் சீசன் இது. அந்த வரிசையில் அடுத்து அறிமுகமாகிறார் அல்லு அர்ஜுன். யேவடு, சன் ஒப் சத்தியமூர்த்தி, ருத்திரமாதேவி உள்ளிட்ட அவர் நடித்த படங்கள் தமிழில் டப் செய்யப்பட்டு வரவேற்பை பெற்றன. அடுத்ததாக நேரடியாகவே தமிழுக்கு வருகிறார். நா பேரு சூர்யா. நா இலு அண்டியா என்ற தெலுங்கு படம் ஒரே நேரத்தில் தமிழிலும் அறிமுகமாகிறது. அல்லு அர்ஜுனின் ஜோடி அனு இம்மானுவேல். துப்பாக்கி பாணியிலான தேசப்பற்று கதையாம் இது. அல்லு அர்ஜுன் துடிப்பான இராணுவ அதிகாரியாக நடிக்கிறார். தமிழில் என் பேர் சூர்யா, என் வீடு இந்தியா என பெயர் வைத்துள்ளனர். தமிழ் வசனம், பாடல்களை பா.விஜய் எழுதுகிறார். ஏப்ரல் மாதம் திரைக்கு வருகிறது.

## ரஷ்ய காதலருடன் ரகசிய மணம்!

ரஷ்ய காதலரை இரகசியமாக மணம் முடித்துள்ளார் ஸ்ரேயா. மார்ச் 12ம் திகதி இவர்களது திருமணம் நடந்துள்ளது. மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே திருமணத்தில் கலந்து கொண்டுள்ளனர். அன்டிரே கொச்சேவ் என்ற ரஷ்ய தொழிலதிபரே மாப்பிள்ளை. இவர் ரென்னிஸ் வீரரும் கூட. நிகழ்ச்சியொன்றில் சந்தித்தபோது ஏற்பட்ட பழக்கம், திருமணத்தில் முடிந்துள்ளது.

## பிரபுதேவாவின் நடன விருந்து!

பிரபுதேவாவின் கலக்கல் நடனத்தை பார்த்து கனநாள் ஆகிவிட்டதென ஏங்கும் ரசிகர்களிற்கு விருந்து வைக்கவிருக்கிறார் அவர். ஏ.எல்.விஜய் இயக்கத்தில் உருவாகும் லட்சுமி படம், நடனத்தை மையமாக கொண்டே உருவாகிவருகிறது. இதற்கு முன்னர் இந்தி, தெலுங்கில் வெளியான ஏபிசிடி, ஏபிசிடி 2 ஆகிய பிரபுதேவா படங்கள் நடனத்தை மையமாக கொண்ட கதைகள்தான். அதன்பின் லட்சுமி படத்தில்தான் நடனம் சம்பந்தப்பட்ட கதையில் நடிக்கிறார். இதுவரை இல்லாத வகையில் நடன அசைவுகளை வெளிப்படுத்த திட்டமிட்டுள்ளாராம். லட்சுமி வெறும் பொழுதுபோக்கு படமாக மட்டுமல்லாமல், உணர்வுபூர்வ படமாகவும் இருக்குமென ஏ.எல்.விஜய் கூறியிருக்கிறார்.

## தள்ளிப்போகும் காஜலின் திருமணம்!

இன்றும் தமிழ், தெலுங்கில் முன்னணி ஹீரோக்களுடன் நடித்துக் கொண்டிருக்கிறார் காஜல் அகர்வால். இந்திப்பட ஆசையில் சென்றவர், அங்கு நடித்த இரண்டு படங்களும் கைகொடுக்காததால் மீண்டும் தமிழுக்கே திரும்பி விட்டார். இதற்கிடையில் காஜலின் தங்கை நிஷா, காதல்வலையில் விழுந்து திருமணம் முடித்து விட்டார். காஜல் இருக்க தங்கைக்கு திருமணமா என குடும்பத்தில் குழப்பம் ஏற்பட்டபோது, காஜலே முன்னின்று தங்கையின் திருமணத்தை முடித்து வைத்துள்ளார். ஒரு கடத்தில் காஜலிற்கு படவாய்ப்புக்கள் குறைய, அவருக்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் எண்ணினர். காஜலும் அதற்கு சம்மதித்தார். அந்த நேரம் பார்த்து விஜய், அஜித், சிரஞ்சீவி என முன்னணி நாயகர்களில் படவாய்ப்புக்கள் வந்தன. அந்த படங்கள் ஹிட் அடித்து காஜலின் மார்க்கெட்டும் உயர்ந்துவிட்டது. இதனால் திருமண திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டாராம். தற்போது இரண்டு படங்களில் நடித்து வருகிறார். இரண்டும் ஹிட் அடித்தால், இந்த வருடமும் காஜலின் திருமணம் தள்ளிப்போய்விடும் என பெற்றோர் குழப்பத்தில் இருக்கிறார்களாம்.

## விவசாயி ஆகும் சிவகார்த்திகேயன்

விவசாயத்தில் ஈடுபாடு காட்டி வருகிறார் நடிகர் ஆரி. அவர் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியொன்றில் சிவகார்த்திகேயன் பேசும்போது, "நான்கரை வயதாகும் என் மகள் ஆராதனாவிற்கு பர்கர், பீட்சா, வெளிநாட்டு குளிர்பானங்களை நான் வாங்கிக் கொடுப்பதில்லை. அதனால்தான் அத்தகைய விளம்பரங்களிலும் நான் நடிப்பதில்லை. விவசாயத்தில் எனக்கு அதிக ஆர்வம் இருக்கிறது. தற்போது எனது புது வீட்டு தோட்டத்தில் கொய்யா, சப்போட்டா உள்ளிட்ட மரங்கள் வளர்க்கிறேன். கண்டிப்பாக எதிர்காலத்தில் மிகப்பெரியளவில் விவசாயம் எண்ணம் உள்ளது. படப்பிடிப்பிற்கு இடையே அதற்காக நேரம் ஒதுக்குவேன்" என்றார்.

## கண்ணழகியின் போனில் சிம் கார்ட் இல்லை!

கடந்த மாதம் மலையாளத்தில் வெளியான "மாணிக்யா மலராய பூவி" என்ற ஒரு பாடலில் புருவம் உயர்த்தி, கண்ணடித்து உலகப்புகழ் பெற்றவர்தான், புருவ அழகி எனப்படும் பிரியா பிரகாஷ் வாரியர். இதை தொடர்ந்து பேஸ்புக், இன்ஸ்டகிராமில் அவரை தொடர்பவர்களின் எண்ணிக்கை பல இலட்சங்களை கடந்தது. ஆனால் அதில் ஆச்சரியம் என்னவென்றால், அவர் மொபைல் போன் பயன்படுத்துவதற்கு அவரது அப்பா தடைவிதித்துள்ளாராம். பிரியாவின் கைவசம் தற்போது ஒரு செல்போன் இருந்தாலும், அதில் சிம் கார்ட் இல்லையாம். அதனால் யாருடனும் போனில் பேசுவதும் இல்லையாம். இந்த தகவலை பிரியாவின் தந்தையே சொன்னதுதான் ஹைலைட். தற்போது அம்மாவின் செல்போனை பாவித்துதான் நட்பு வட்டாரத்தில் பேசி வருகிறாராம் கண்ணழகி. அதில் இன்டர்நெட் பாவிப்பதென்றால், எங்கே வைபை கிடைக்கிறதோ அங்கு மட்டும் பாவிக்க தந்தை அனுமதித்துள்ளாராம்.

## பாவடை தாவணியில் பார்த்த உருவமா?

அறிமுகமான நாளிலிருந்தே பரபரப்பான நாயகியாக இருக்கிறார் நயன்தாரா. மீடியாவில் எப்பொழுதும் பேசப்பட்டு கொண்டிருக்கும் நாயகியும் அவர்தான். கிசுகிசுவிற்கும் பஞ்சமில்லாதவர். ஆனாலும் அதைப்பற்றியெல்லாம் கவனிக்காமல் நடிப்பு, காதல் என தனி உலகத்தில் இருப்பவர். நானும் ரவுடிதான் படத்தின் பின்னர்தான் நயன்தாராவின் நடிப்பு வேறு ஒரு லெவலிற்கு சென்றது. இந்த படத்தில் பாவாடை, கட்டை கஸ்ட்யூமில் ரசிக்கும்படியாக இருந்தார். தற்போது அவர் நடிக்கும் கோலமாவு கோகிலாவிலும் அதேவிதமான கஸ்ட்யூமில்தான் நடிக்கிறாராம். படம் பற்றி வெளியான படங்களில் அப்படியான தோற்றத்தில்தான் இருக்கிறார்.

## திருமணமானவரை காதலிக்கும் சாய் பல்லவி?

நடிகை சாய்பல்லவியின் காதல் விவகாரம்தான் இப்போது பரபரப்பாக பேசப்பட்டு கொண்டிருக்கிறது. தற்போது விஜய் இயக்கத்தில் கரு படத்தில் நடித்து வருகிறார். இந்தநிலையில் தெலுங்கு நடிகர் கண்டா ரவிதேஜாவுடன் காதல் கிசுகிசுவில் சிக்கியுள்ளார். இவர் திருமணமானவர். ஆந்திர கல்வி மந்திரி கண்டா ஸ்ரீனிவாசின் மகன் இவர். ஜெயதேவ் படத்தில் நாயகனாக நடித்துள்ளார். இந்த தகவலை கேள்விப்பட்டதும், கல்வி மந்திரி ஸ்ரீனிவாஸ் அதிர்ச்சியடைந்துள்ளார். "எனது மகனும் சாய்பல்லவியும் காதலிப்பதாக வெளியாகும் செய்தியில் உண்மையில்லை. இருவரும் ஒரு படத்தில்கூட சேர்ந்து நடிக்காத நிலையில் இப்படியான வதந்திகள் வருவது வருத்தமாக உள்ளது. எனது மகனின் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக செல்கிறது. இந்த வதந்தியால் எனது மகன், சாய்பல்லவியின் வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காகவே இதை பகிரங்கமாக சொல்கிறேன்" என்றுள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி - ரீகன் இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ஷாமீர்

# தாக்கி அழிக்க வேண்டும்; அல்லது ஆயுதம் கொடுத்து உதவ வேண்டும்

## ஈரானை வளைக்க அமெரிக்கா பாவித்த நூதன உத்தி

## ஒரு புலனாய்வு அதிகாரியின் இராஜதந்திர விளையாட்டு - 03

*கடந்தவார சுருக்கம்*

**பெய்ரூட்டில் வைத்து அமெரிக்கர் ஒருவர் கடத்தப்பட்ட செய்தியறிந்ததும், லெபனானில் இருந்த அத்தனை நாட்டு புலனாய்வு அமைப்புக்களும் துப்பு துலக்க ஆரம்பித்தன, அமெரிக்க சி.ஐ.ஏ அதிர்ச்சியடைந்தது.கடத்தப்பட்டதாக செய்திகள் வெளியானாலும், கடத்தப்பட்டவர் உல்லாசப்பயணி அல்ல. லெபனானில் இயங்கிய சி.ஐ.ஏ இன் station chief!**

கடத்தப்பட்டவர் பின்னர் கொல்லப்பட்டார், இந்த கொலைக்கு ஒரு தீவிரவாத இயக்கம் உரிமை கோரினார்கள். அந்த தீவிரவாத இயக்கத்தை பற்றி கிடைத்த முக்கிய தகவல் ஈரானில் ஆதரவு அவர்களிற்கு உள்ளது.

இந்த தீவிரவாத இயக்கத்தை பற்றி சி.ஐ.ஏக்கு தகவல் கொடுத்தது மொசாட். அதன்பின்னர்தான் அந்த இயக்கம் பற்றிய தகவல்களை திரட்ட தொடங்கியது சி.ஐ.ஏ. இதுவரை அவ்வளவாக அறியப்படாத இந்த இயக்கம் எப்படி இவ்வளவு கடத்தல்களை செய்தது? இயக்கத்தில் எத்தனை உறுப்பினர்கள் உள்ளனர்? எப்படி வருமானம் ஈட்டுகிறார்கள்? இப்படியான தகவல்களை திரட்ட ஆரம்பித்தனர்.

இதற்கு பின்னரும் ஏழு அமெரிக்கர்கள் கடத்தப்பட்டனர். அதற்கு இரண்டு நாள் கழித்து, ஹோட்டல் அறையொன்றில் இருந்து மர்மமாக இறந்தநிலையில் அமெரிக்கர் ஒருவர் மீட்கப்பட்டார்.

லெபனான்,ஜோர்டானில் அமெரிக்கர்கள் கடத்தப்படுவது, கொல்லப்படுவது அப்பொதைய ஜனாதிபதி ரீகனிற்கு பெரிய நெருக்கடியை கொடுத்தது. அமெரிக்கர்களிற்கு பாதுகாப்பில்லாத நிலைமை உலகம் முழுவதும் உருவாகி வருகிறதென அங்குள்ள பத்திரிகைகள் எழுத தொடங்கின. ரீகனிற்கு எதிரான அதிருப்தி மக்களிடம் ஏற்பட தொடங்கியது.

அமெரிக்கர்களையும் காப்பாற்ற வேண்டும், உள்ளூரில் அரசியல்ரீதியாகவும் வலுப்பட வேண்டும். அப்படியானால் ஏதாவது ஸ்டண்ட் செய்ய வேண்டும். செய்வதென முடிவெடுத்தார் ரீகன்!

பாதுகாப்பு ஆலோசகர்களும் கலந்தாலோசித்து, ஈரான் மீது தாக்குதல் நடத்துவதென முடிவு செய்தார். தரைவழியாக தாக்காமல், ஈரானை கொஞ்சம் தட்டி வைப்பதற்காக விமானத் தாக்குதல் நடத்தலாமென முடிவெடுத்தார்கள். பென்டகனில் அவசர அவசரமாக இதற்கான ஆயத்தங்கள் நடந்தது. ஈரானின் அணுசக்தி தயாரிப்பிடங்கள் என அடையாளப்படுத்தப்பட்டவை சிலவற்றிலும், தலைநகர் தெஹ்ரானிலும் தாக்கலாமென திட்டம் தயாரானாது.

அமெரிக்காவின் முதற்கட்ட தாக்குதல் நடத்தப்பட்டதும், ஈரானிற்கு ஒரு தகவல் அனுப்புவதென்றும் திட்டமிடப்பட்டது. "அமெரிக்கர்களை கடத்தும் இயக்கத்திற்கு ஈரான் ஆதரவளிப்பது எங்களிற்கு நன்றாகவே தெரியும். கடத்தப்பட்டவர்கள் உடனடியாகவிடுவிக்கப்பட வேண்டும். அல்லது தாக்குதல் தொடரும்" இந்த தகவலைத்தான் அனுப்ப திட்டமிட்டனர். இவையெல்லாம் பின்னாளில் அமெரிக்க பாதுகாப்பு கவுன்சில் கூட்ட மினிட்டுக்களில் இருந்து வெளியான தகவல்கள்.

எனினும், ரீகனின் இந்த முடிவிற்கு அரசிலிருந்த முக்கியஸ்தர்கள் பலர் ஆதரவளிக்கவில்லை. இரண்டு காரணங்களை முன்வைத்து அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டனர். முதலாவது ஈரான் மீது அமெரிக்கா முதல் முறை குண்டை வீசிவிட்டு, பணயக் கைதிகளை விடுவிக்க காலஅவகாசம் வழங்கும். இந்த இடைவெளியை பயன்படுத்தி சுதாகரித்து கொண்ட ஈரான் இராணுவம், மீண்டும் அமெரிக்க விமானங்கள் ஈரானுக்குள் நுழையும்போது தாக்குதல் நடத்தலாம். அமெரிக்க விமானங்களின் மீது தாக்குதல் நடத்துவதென்றால், சோவியத் ரஷ்யா அதி நவீன ஏவுகணைகளை நிச்சயம் கொடுக்கும். அப்படி நடந்தால் அமெரிக்காவிற்கு பெரும் அடியாக அமைந்து விடும்.

இரண்டு இந்த சம்பவங்களிற்கும் தனக்கும் தொடர்பில்லை, அந்த தீவிரவாத இயக்கத்துடன் தொடர்பில்லையென ஈரான் உறுதியாக அறிவித்தால், அமெரிக்காவால் ஒன்றும் செய்ய முடியாது. ஈரானிற்கும் அந்த இயக்கத்திற்குமான தொடர்பை புலனாய்வுரீதியில் மட்டுமே அமெரிக்காவால் உறுதிசெய்ய முடிந்தது. அதற்கு வெளியில் உறுதிப்படுத்த முடியவில்லை.

அப்போதைய தேசிய பாதுகாப்பு கவுன்சிலில் முக்கிய பிரமுகராக இருந்த அலெக்ஸ் ரூபிலன்ஸ் இன்னொரு புரபோஷலை வைத்தார். கொமாண்டோ படைப்பிரிவை பயன்படுத்தி, பணயக்கைதிகளை மீட்கலாமென்பதே அந்த புரபோஷல்.

ஆனால் லெபனானில் நடத்தப்படும் இந்த தாக்குதலில் பணயக்கைதிகளை எந்த ஆபத்துமில்லாமல் மீட்கலாமென்பதை உத்தரவாதப்படுத்துவதில் சிக்கலிருந்தது. அதனால், அந்த புரபோஷலும் கைவிடப்பட்டது.

இதற்கு பின்னர் மூன்றாவது முடிவொன்று எடுக்கப்பட்டது. இந்த முடிவைகேட்ட அமெரிக்க அதிகாரிகள் பலரே அதிர்ச்சியடைந்தனர்.

ஜனாதிபதி ரீகன், அப்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொபர்ட் மக்பார்லோன், சி.ஐ.ஏ தலைவர் வில்லியம் கேசி ஆகியோர் கலந்துகொண்ட உயர்மட்ட கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. கூட்டத்தின் ஆரம்பத்தில், மத்திய கிழக்கு விசயத்தில் அமெரிக்கா சறுக்கலை எதிர்கொண்டிப்பதை கூறிய ரீகன், பணயக்கைதிகள் விசயத்தை சி.ஐ.ஏ மூலம் கையாளலாமா என கேட்டார். ஆனால் லெபனானில் இயங்கிய சி.ஐ.ஏ station chief கூட கொல்லப்பட்ட சூழலில், சி.ஐ.ஏ தடுமாறிப் போயிருந்தது. வாட்டர் கேட் ஊழலில் சிக்கி சி.ஐ.ஏயும் தடுமாறியிருந்த சமயம். எந்த விசயத்திலும் ரிஸ்க் எடுக்க அவர்கள் தயங்கினார்கள்.

வாட்டர்கேட் விவகாரத்தின் பின்னர் தமது மத்தியகிழக்குநெற்வேர்க் பலவீனமடைந்து விட்டதென்பதை வில்லியம் கேசி வெளிப்படையாகவே சொன்னார். ரீகனிற்கும் இந்த விசயம் புரிந்திருந்தது. அதனால் சி.ஐ.ஏ மூலம் கையாளும் திட்டம் கைவிடப்பட்டது.

ரீகன் தன்னிடமிருந்த திட்டத்தை, அந்த கூட்டத்தின் இறுதியில் சொன்னார். "அமெரிக்க பிரஜைகள் கடத்தப்பட்டுள்ளனர். லெபனானில்,

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

ஜோர்டானில் அவர்கள் கடத்தப்பட்டாலும், இந்த கடத்தலில் ஈரானின் பங்கை குறைத்து மதிப்பிட முடியாது. துரதிஸ்டவசமாக, புலனாய்வுரீதியாக நாம் எதையும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். இந்த சிக்கலை சமாளிக்க என்னிடம் புது ஐடியா இருக்கிறது. ஈரானுடன் உறவை ஏற்படுத்தி, அதன்மூலம் பயணக் கைதிகளை விடுதலை செய்யலாம்."

ஈரானுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்துவதில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொபர்ட் மக்பார்லோனுக்கு அவ்வளவு உடன்பாடு இருக்கவில்லை. அமெரிக்காவின் நேச நாடுகளை பகைக்க வேண்டியதாகிவிடும் என எச்சரித்தார்.

ஆனால் ரீகன் முடிவில் உறுதியாக இருந்தார். "இன்றைய திகதியில் ஈரானுக்கு அவசியம் தேவைப்படுவது ஆயுதங்கள். ஈராக்குடன் போரிட அவர்களிற்கு நவீன ஆயுதங்கள் அவசியமாக தேவைப்படுகிறது. நாம் கொஞ்ச அயுதத்தை கொடுத்து விட்டு, பயணக்கைதிகளை விடுவிக்குமாறு நிபந்தனை விதிக்கலாம்" என்றார்.

ரீகனின் திட்டத்தை கேட்டதும், மக்பார்லோனுக்கு தூக்கிவாரிப் போட்டது. மத்திய கிழக்கில் ஈரான் போன்ற நாடுகளிற்கு ஆயுதம் வழங்குவது, தீவிரவாதிகளின் கையில் கொடுப்பதற்கு சமம் என கூறினார். என்றாலும் ரீகன் இந்த முடிவை உறுதியாக எடுத்திருந்ததால், அதில் மாற்றமிருக்கவில்லை. ரீகனின் முடிவில் மாற்றத்தை ஏற்படுத்த மற்றவர்களாலும் முடியவில்லை. அதிபரின் முடிவின்படியே எல்லாம் நடக்கட்டும் என அவர்கள் விட்டுவிட்டனர்.

ஆயுதம் கொடுப்பது சரி, அதை எப்படி இரகசியமாக ஈரானுக்கு கொண்டு சேர்ப்பிப்பது?

அதைப்பற்றி அந்த கூட்டத்தில் ரீகன் எதுவும் பேசவில்லை.

பொதுவாகவே இப்படியான இரகசியமான நடவடிக்கைகளை சி.ஐ.ஏ தான் செய்வது வழக்கம். அரசிலுள்ள பலருக்கே தெரியாமல், காதும் காதும் வைத்ததைபோல விசயத்தை முடித்து விடுவார்கள். ஆனால் அந்த கூட்டத்திலோ, அதற்கு பின்னரே சி.ஐ.ஏ உடன் ரீகன் கலந்தாலோசிக்கவில்லை. சி.ஐ.ஏ தலைவரும் இதைப்பற்றி கேட்கவில்லை. வாட்டர்கேற் விவகாரத்தின் பின், அரசு கொஞ்சம் எச்சரிக்கையாக நடக்க ஆரம்பித்திருக்கலாம்... சி.ஐ.ஏ யை வெட்டிவிட்டு வேறு தரப்புக்கள் ஊடாக விசயத்தை முடிக்க திட்டமிட்டிருக்கலாம் என அவர் நினைத்தார்.

அவர் நினைத்ததுதான் நடந்தது!

சி.ஐ.ஏ இந்த விசயத்தில் ஈடுபடகூடாதென ரீகன் ஏற்கனவே முடிவெடுத்திருந்தார். நிக்சன் விவகாரம் ஒரு பாடமாக அமைந்திருந்தது. இப்படியான இரகசிய நடவடிக்கைகளில் அமைப்புக்களை சம்பந்தப்படுத்தினால், உடனடியாக இல்லாவிட்டாலும் எப்பொழுதாவது சிக்கல் வரலாமென ரீகன் நினைத்திருந்தார். சி.ஐ.ஏ இடம் இந்த திட்டத்தை கொடுக்காமல், தனிநபர் ஒருவரிடம் கொடுக்கலாமென முடிவெடுத்தார்.

கேணல் ஒலிவர் நோர்த். இவர் அமெரிக்க கடற்படையை சேர்ந்த அதிகாரி. இவரிடம்தான் ஈரானிற்கு ஆயுதம் சப்ளை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது!

சி.ஐ.ஏ பார்க்க வேண்டிய பெரிய வேலையை, தனிநபர் ஒருவரிடம் ஒப்படைக்க ரீகன் ஏன் முடிவெடுத்தார் என்பதற்கு இன்றுவரை தெளிவான விடை கிடைக்கவில்லை. அதற்கான எந்த ஆவணமும் இல்லாததால், ஊகத்தின் அடிப்படையில் பேச முடியாதல்லவா.

சி.ஐ.ஏ இந்த ஒப்ரேஷனில் இருக்க கூடாதென்பதை ரீகனும், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரொபர்ட் மக்பார்லோனும் ஏற்கனவே முடிவெடுத்திருந்தார்கள் என்ற அளவில் மட்டுமே தகவல் கிடைத்தது. சி.ஐ.ஏ வை காய்வெட்டிவிடுவதில் கடற்படைக்கு மாறிவிட்டார். வியட்நாம் யுத்தகாலத்தில் ஒலிவர் நோர்த் செய்த சாகசங்கள் மிகப் பிரபலமானவை. அதனால்தான் ஈரான் டீலுக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஈரான் ஆயுத சப்ளையை எப்படி செய்யலாமென்பது பற்றி மக்பார்லோனும், ஒலிவர் நோர்த்தும் தீவிரமாக டிஷ்கஸ் செய்தார்கள். அண்டர் கவர் ஏஜெண்டுகள் மூலம் செய்யலாமென முதலில் திட்டமிட்டார்கள். ஆனால், அவசரமாக அண்டர் கவர் ஏஜெண்டுகளை அடையாளம் காண்பதில் அவர்களிற்கு சிக்கல் இருந்தது. அவர்கள் இப்படியான வேலைகளில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் கிடையாது. உளவுத்துறை ஆட்கள் அண்டர் கவர் ஏஜெண்டுகளை கைவசம் வைத்திருப்பார்கள். திடீரென இப்படியான விசயத்தில் இறங்கிய மக்பார்லோன் ஒலிவர் நோர்த் கூட்டணியால் அண்டர் கவர் ஏஜெண்டுகளை

**ஈரான் ஆயுத சப்ளையை எப்படி செய்யலாமென்பது பற்றி மக்பார்லோனும், ஒலிவர் நோர்த்தும் தீவிரமாக டிஷ்கஸ் செய்தார்கள். அண்டர் கவர் ஏஜெண்டுகள் மூலம் செய்யலாமென முதலில் திட்டமிட்டார்கள். ஏஜெண்டுகளை அடையாளம் காண்பதில் அவர்களிற்கு சிக்கல் இருந்தது.**


ரீகனும் வில்லியம் கேசியும் கலந்துரையாடுகிறார்கள்

அடையாளம் காண முடியவில்லை.

இதற்க பின்னர்தான் இஸ்ரேல் மூலம் ஆயுதம் கொடுக்கலாமென்ற ஐடியாவிற்கு வந்தார்கள். இஸ்ரேல் ஏற்கனவே ஈரானிற்கு ஆயுதம் கொடுத்துக் கொண்டிருந்த விசயம் அமெரிக்காவிற்கு தெரிந்திருந்தது. அண்டர் கவர் ஏஜெண்டுகள் மூலம் கொடுப்பதை விட, இஸ்ரேல் மூலம் கொடுப்பது உத்தரவாதமானது என நினைத்தார்கள். உடனடியாக இஸ்ரேல் அரச உயர்மட்டத்தை தொடர்பு கொண்டது அமெரிக்க அரசு.

அமெரிக்காவிலிருந்து வந்த தகவலை பார்த்து இஸ்ரேல் கிட்டத்தட்ட மிரண்டு விட்டது. ஈரானுக்கு அமெரிக்காவிலிருந்து ஆயுத சப்ளை, அதுவும் இஸ்ரேலை கொண்டு... இஸ்ரேலியர்களிற்கே தலைசுற்ற தொடங்கிவிட்டது.

அப்போது இஸ்ரேல் பிரதமராக இருந்தவர் யிட்ஷாக் ஷாமீர். இஸ்ரேல் உளவுத்துறையில் பணியாற்றிய அனுபவமுடையவர். பணியாற்றியவர் என்றால் சாதாரண ஆள் கிடையாது. 1955 இல் மொசாட்டில் இணைந்தார். பத்து வருசங்கள் மொசாட்டில் இருந்தார். அப்போது பல ஒப்ரேஷன்களை செய்திருக்கிறார். அவற்றில் சில இன்றும் உளவுத்துறை வட்டாரங்களில் மாஸ்டர் பீஸ் என சிலாகிக்கப்படுபவை.

ஒப்ரேஷன் டமோகிள்ஸ் பற்றி சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். தெரியாதவர்களிற்காக மேலோட்டமான அறிமுகம் தருகிறோம். இஸ்ரேலிய மொசாட் உளவுத்துறை செய்த தலைசிறந்த ஒப்ரேஷன்களில் ஒன்று ஒப்ரேஷன் டமோகிள்ஸ்.

ஜேர்மன் விஞ்ஞானியொருவர், எகிப்திற்காக ஏவுகணை புரோகிராம் ஒன்றை உருவாக்கி கொடுத்திருந்தார். அவர் உயிரோடு இருப்பது இஸ்ரேலிற்கு பிரச்சனையென மொசாட் கருதியது. எகிப்திற்காக மேலும் சில இராணுவ உபகரணங்களை உருவாக்கும் முயற்சியில் இருந்தார். அவரை ஜேர்மனியில் வைத்து "போட்ட" ஒப்ரேஷன்தான் டமோகிள்ஸ். அதை வழிநடத்தியவர் யிட்ஷாக் ஷாமீர். அந்த ஒப்ரேஷனால் இஸ்ரேல் ஜேர்மன் உறவு சிக்கலான கதையெல்லாம் உள்ளது.

இந்த யிட்ஷாக் ஷாமீர் 1965 இல் மொசாட்டிலிருந்து விலகினார். பின்னர் அரசியலுக்கு வந்து, பிரதமராகவும் மாறினார்.

உளவுத்துறை அதிகாரியான இருந்த யிட்ஷாக் ஷாமீரே, அமெரிக்காவின் திட்டத்தை கேட்டு அதிர்ந்து விட்டார். சி.ஐ.ஏ மூலம் ஆயுதத்தை கொடுக்காமல், எதற்காக இஸ்ரேலிடம் வருகிறார்கள் என்ற கேள்வி இப்பொழுதும் உங்களிடம் இருக்கிறதல்லவா, அது அப்போது யிட்ஷாக் ஷாமீரிடமும் இருந்தது!

அமெரிக்காவிற்கு என்ன பதில் அனுப்பலாமென தனது ஆலோசகர்களுடன் யிட்ஷாக் ஷாமீர் பேசினார். அமெரிக்காவின் திட்டம் என்னவென்று அவர்கள் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. அதனால், அமெரிக்காவின் போக்கில் ஓடிப் பார்க்கலாமென முடிவெடுத்தார்கள்.

அமெரிக்காவிற்கு க்ரீன் சிக்னல் அனுப்பினார்கள்!

இப்படியான இரகசிய ஆயுத சப்ளை விசயங்களை இஸ்ரேல் மொசாட்தான் கையாளும். இம்முறை மொசாட்டை தவிர்த்தது இஸ்ரேல். அமெரிக்காவின் பாணியில், இராஜதந்திர மட்டத்திலேயே விசயத்தை முடிக்க நினைத்தது. அதற்காக ஒரு ஆளையும் நியமித்தனர்.

அந்த ஆள் இஸ்ரேல் வெளியுறவுத் துறையில் பணியாற்றினார். வெளியுறவுத்துறையில் பணியாற்றினாலும், மொசாட்டின் திறமையான அதிகாரியென பெயரெடுத்த ஆள். அவரை பற்றி இந்த தொடரின் ஆரம்பத்திலும் குறிப்பிட்டிருக்கிறோம் டேவிட் கிம்சி!

1983 ஜூன் 28ம் திகதி, ஈரானுக்கு ஆயுதம் வழங்கும் ஒப்ரேஷனை பற்றி பேசுவதற்காக அமெரிக்காவிற்கு சென்றார் கிம்சி. (தொடரும்)
















# மூன்றெழுத்துக்குள் இருந்த மாமனிதம்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** மீது மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்கூட அளப்பரிய அன்பும் மரியாதையும் மதிப்பும் உடையவர்களாக விளங்குகிறார்கள் என்றால், அதற்கு தமிழ் சமுதாயத்துக்கு அவர் ஆற்றிய தொண்டு முக்கிய காரணம். அப்படி எம்.ஜி.ஆர் மீது மதிப்பு வைத்துள்ளவர்களில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவரும் ஒருவர்.' அரசியல் மட்டுமின்றி இலக்கியமும் அவருக்கு அத்துபடி. இளையராஜாவின் 'திருவாசகம்' இசை வெளியீட்டு விழாவில் அவரது பேச்சைக் கேட்டு நடிகர் ரஜினிகாந்த் எழுந்து நின்று விசில் அடித்தார். அந்த மூத்த தலைவர் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ!

படிக்கும் காலத்தில் நெல்லை மாவட்டத்தில் தனது சொந்த ஊரான கலிங்கப்பட்டி அருகே டூரிங் டாக்கீஸில் எம்.ஜி.ஆர் நடித்த 'தாய்க்குப் பின் தாரம்' படத்தை வைகோ பார்த்தார். படத்தில் எம்.ஜி.ஆரும் சின்னப்பா தேவரும் போடும் சிலம்பச் சண்டை வைகோவைக் கவர்ந்தது. வைகோவும் சிலம்பம் கற்றவர். எம்.ஜி.ஆரின் சிலம்ப வீச்சுக்காகவே அந்தப் படத்தை பலமுறை பார்த்திருக்கிறார். 'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆரின் வாள் வீச்சின் லாவகத்தைக் கண்டு வைகோ சொக்கிப் போனார்! “சண்டைக் காட்சிகளில் எல்லோரையும் விட எம்.ஜி.ஆர் சோபித்ததற்கு, தானாகவே அவர் மனதுக்குள் சிந்தித்து புதிய பாணிகளை வகுத்துக் கொண்டதுதான் காரணம்!” என்கிறார் வைகோ!

கல்லூரியில் முதுகலை படிப்புக்காக 1964ம் ஆண்டு சென்னைக்கு வைகோ வந்தார். அந்த சமயத்தில் மலேசிய சுற்றுப் பயணத்தை முடித்து சென்னை திரும்பிய அறிஞர் அண்ணாவை ஏழு குதிரைகள் பூட்டிய சாரட் வண்டியில் அமரவைத்து ஊர்வலமாக அழைத்து வந்து வரவேற்பு அளித்தனர். ஊர்வலத்தை உடன் படிக்கும் மாணவர்களுடன் வைகோ பார்த்தார்.

அண்ணா இருந்த வண்டிக்கு முன்னால் சென்ற லாரியில் நின்று கொண்டு, ரோஜாப்பூக்களை இறைத்த படி பொன்னிறமாய் ஜொலித்த எம்.ஜி.ஆரை அப்போதுதான் வைகோ முதன்முதலில் பார்த் தார். அந்தக் காட்சி அவரது கண்களில் இருந்து இன்னும் அகலவில்லை.

1967ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னை விருகம்பாக்கத்தில் நடந்த திமுக மாநாட்டில்பரங்கிமலைத்தொகுதியின் வேட்பாளராக எம்.ஜி.ஆர் பெயரை அண்ணா அறிவித்தபோதுவிண்ணைப் பிளந்த கரவொலியில் வைகோவின் கரவொலியும் அடங்கும். சில நாட்களில் எம்.ஜி.ஆர் சுடப்பட்டார் என்ற செய்தி கேட்டு துடித்துப் போனார் வைகோ. ராயப்பேட்டை மருத்துவமனைக்கு மாணவர்களுடன் விரைந்தார். ஆயிரக்கணக்கானோர் திரண்டிருந்த கூட்டத்தில் உள்ளே நுழையமுடியவில்லை என்றாலும் எம்.ஜி.ஆரின் உயிருக்கு ஆபத்து இல்லை என்ற செய்தியால் ஆறுதல் அடைந்தார்.

அந்தத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் மாணவர் தலைவர் சீனிவாசன், எம்.ஜி.ஆரை மருத்துவ மனையில் சந்தித்து ஆசிபெற்றார். அவருக்கு ஆதரவாக விருதுநகரில் வைகோ தீவிர பிரசாரம் செய்தார். “எம்.ஜி.ஆர் எப்படி இருக்கிறார்?” என்று ஏக்கத்தோடு கேட் கும் கிராம மக்களிடம், “நன்றாக இருக் கிறார். வெற்றி விழாவுக்கு வருவார்” என்று வைகோ கூறுவார். அவர் சொன்னதுபோலவே பிறகு, வெற்றி விழாவுக்கு எம்.ஜி.ஆர் வந்தார்!

1969ம் ஆண்டு நெல்லை மாவட்ட திமுகமாணவர் அணி அமைப்பாளராக வைகோ இருந்தபோது, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நெல் லைக்கு எம்.ஜி.ஆர் வந்தார். வைகோ ஏற்பாடு செய்திருந்த திமுக கொடியேற்று விழாவிலும் கலந்து கொண்டார்!

பின்னர், ஏற்பட்ட அரசியல் சூழல்களால் திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்டபோது வைகோ மிகவும் வருந்தினார். என்றாலும், கட்சிப் பற்று காரணமாக திமுகவிலேயே இருந்துவிட் டார். 1978ம் ஆண்டு நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவையில் பேசும் போது எம்.ஜி.ஆரை அரசியல்ரீதியில் விமர்சித்திருக்கிறார்.

“நாடாளுமன்ற நூலகத்தில் ஒரு நாள் நான் படித்துக் கொண்டிருந்தேன். டெல்லி வந்த முதல்வர் எம்.ஜி.ஆருக்கு நூலகத்தைக் காட்ட அதிமுக எம்.பி.க்கள் அழைத்து வந்தனர். அவரிடம் அதிமுக எம்.பி. மோக னரங்கம் என்னை சுட்டிக் காட்டினார். உடனே, மலர்ந்த முகத்துடன் என்னை நோக்கி வந்து கைகுலுக்கினார் எம்.ஜி.ஆர்! அவரை அரசியல்ரீதியாக விமர்சித்திருக்கிறேன். அது தெரிந்தும் அவர் என்னுடன் அன்பாக கைகுலுக்கியபோதுதான், எம்.ஜி.ஆர் என்ற மூன்றெழுத்துக்குள் மாமனிதம் இருப்பதை உணர்ந்தேன்” என்று பூரிப்புடன் சொல்கிறார் வைகோ!

டெல்லிக்கு 1985ல் வந்த இலங்கை அதிபர் ஜெயவர்த்தன, “ஈழப் பிரச்சினை கொழுந்துவிட்டு எரிவதற்கு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்தான் காரணம்” என்று கூறினார். “மறுநாள் மாநிலங்களவையில் நான் பேசும்போது, 'வெளி நாட்டுத் தலைவர்கள் இந்தியா வந்தால் இந்தியாவின் உள்நாட்டு அரசியல் பேசும் வழக்கம் இல்லை. நாம் தரும் விருந்தை சாப்பிட்டுவிட்டு மரியாதையாகப் போக வேண்டும். தமிழக முதல்வர் பற்றி ஜெயவர்த்தன கூறியது அக்கிரமம். அவர் அருகில் இருந்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி பேசாமல் இருந்தது சகிக்க முடியாதது' என்று பேசினேன். இது பத்திரிகைகளிலும் வந்தது” என்று வைகோ நினைவுகூர்கிறார்.

“எம்.ஜி.ஆர் மீது எனக்கு திடீர் காதல் வந்திருப்பதாகக் கிண்டல் செய்த காங்கிரஸாருக்கு, 'எங்களுக்குள் அரசியல் மோதல்கள் உண்டு. அதை தமிழக அரசியல் களத்தில் வைத்துக் கொள்வோம். ஆனால், எம்.ஜி.ஆர் எங்கள் முதல் அமைச்சர். அவரை இன்னொரு நாட்டுக்காரர், அதுவும் தமிழர்களுக்கு எதிரானவர் கண்டனம் செய்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது' என்று பதிலளித்தேன்” என்று உணர்ச்சி மேலிட கூறுகிறார் வைகோ!

ஒரு காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், எம்.ஜி.ஆர் பற்றி தன்னிடம் கூறியதைக் கேட்ட பிறகு, எம்.ஜி.ஆரை அரசியல் ரீதியாகவும் விமர்சிப்பதை அடி யோடு நிறுத்திவிட்டதாக வைகோ கூறுகிறார்!

எம்.ஜி.ஆர் பற்றி வைகோவிடம் பிரபாகரன் அப்படி என்ன கூறினார்?

அடுத்தவாரம்
நிறைவுப் பகுதியில் பார்ப்போம்.

**எம்.ஜி.ஆர் ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு 31 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்தப்பட்டது! பரம்பரையாக இருந்துவந்த மணியக்காரர், கர்ணம் பதவிகளுக்குப் பதிலாக, கிராம நிர்வாக அலுவலர் பதவியை உருவாக்கி சாதாரண மக்களும் அப்பதவிக்கு வர வழி செய்தார் எம்.ஜி.ஆர்!**

# சர்வதேச சந்தையைப் பிடிப்பது எப்படி?

பிஸ்னஸ் செய்ய விரும்புபவர்கள் முதலில் என்ன செய்ய வேண்டும், தங்களுக்கான சரியான பிஸ்னஸை எப்படித் தேர்வு செய்ய வேண்டும், அதைப் பதிவு செய்து எப்படி, சட்ட ரீதியான சிக்கல்கள் எதுவும் இல்லாமல் தொழிலை எப்படி சுமுகமாக நடத்திச் செல்வது, முக்கியமாக பிஸ்னஸை வெற்றிகரமாக நடத்தத் தேவையான மேலாண்மை விஷயங்கள் என்னென்ன என்றெல்லாம் கடந்த இதழ்களில், ஒவ்வொன்றாக விரிவாகப் பார்த்து வந்திருக்கிறோம்.

இனி, உங்களுடைய பிஸ்னஸை கடல் கடந்து கொண்டு செல்வது எப்படி என்பதைப் பற்றிப் பார்ப்போம். ஏற்றுமதி/இறக்குமதி மூலம் ஒருவர் தன்னுடைய பிஸ்னஸை பல கண்டங்களிலும் உள்ள பல்வேறு நாடுகளுக்கு விரிவுபடுத்த முடியும். இலங்கையிலிருந்து பல்வேறு பொருட்கள், பல நாடுகளிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த ஏற்றுமதி/இறக்குமதி செயல் முறைகளைக் கற்றுக் கொண்டால், உள்ளூர் மட்டுமல்ல,




வெளிநாடுகளிலும் ஏற்றுமதி செய்ய முடியும்.

### உலகம் மிகப் பெரிது

ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு பொருள் தேவைப்படும். ஆனால், அந்தப் பொருள் உற்பத்தி ஆவதற்கான வளமோ, தொழில்நுட்பமோ இல்லாமல் இருக்கலாம். அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பிற நாடுகளிலிருந்து அவர்கள் இறக்குமதி செய்வதைத் தவிர, வேறு வழியில்லை. அதேபோல, குறைந்த அளவே உற்பத்தியாகும் ஒரு பொருளை அதிகமானோர் பயன்படுத்தும்போதும், அந்தப் பொருளை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருக்கும். இந்த வித்தியாசத்தை சமன் செய்வதுதான் ஏற்றுமதி/இறக்குமதி. இதன் மூலம் பற்றாக்குறையாக இருக்கும் நாட்டின் தேவை பூர்த்தி செய்யப்படும். உற்பத்தி செய்யும் நாட்டின் பொருளாதாரமும் மேம்படும்.

நமக்கு இன்னொரு வாய்ப்புண்டு. புலம்பெயர்ந்த தமிழர்கள் ,பல நாடுகளில் செறிந்து வாழ்கிறார்கள். அவர்களிற்கு தேவையான பொருட்களையும் ஏற்றுமதி செய்யலாம்.

### சீனாவைப் பார்த்துக் கற்றுக்கொள்வோம்

உலகிலேயே சீனாதான் ஏற்றுமதியில் முன்னணி நாடாக விளங்குகிறது. அதன் பொருளாதாரத்தில் பெரும்பாலான சதவிகிதம் ஏற்றுமதிச் சந்தையிலிருந்துதான் கிடைக்கிறது. அங்கு குடிசைத் தொழில்கள் அதிகம். படிக்கும்போதே தொழில்கள் செய்யக் கற்றுக்கொடுக்கிறார்கள்.

### ஏற்றுமதி தொழில் செய்வது எப்படி?

ஏற்றுமதி/இறக்குமதி தொழிலை எப்படி வெற்றிகரமாகச் செய்வது என்பதைப் பற்றி விரிவாக பார்க்கும் முன், அதற்குமுன் இந்தத் தொழிலின் அடிப்படை விஷயங்களைப் பார்த்து விடலாம்.

ஒரு நாட்டின் தேவை என்ன, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருள்/தொழில்நுட்பம் நம்மிடம் இருக்கிறதா, அதை அங்குள்ளவர்களிடம் எப்படி விற்பனை செய்வது? இந்த மூன்று கேள்விகள்தான் ஏற்றுமதி/இறக்குமதி தொழிலின் முக்கியமான அடிப்படையைப் புரிந்துகொள்ள உதவும்.

காய்கறிகள், பழங்கள், மூலிகைகள், பூக்கள், கைவினைப் பொருள்கள் என அனைத்தையும் ஏற்றுமதி செய்யலாம். பெரும்பாலும், உணவுசார் பொருள்கள்தான் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவை மட்டுமல்லாமல், தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளையும் ஏற்றுமதி செய்யலாம்.

இலங்கையர்கள் உலகம் முழுக்க பரவி இருப்பதால், இலங்கை பாரம்பர்ய பொருள்கள் இன்னும் வெளிநாடுகளில் பலத்த வரவேற்பைப் பெற்று வருகின்றன. ஊறுகாய் முதல் அப்பளம், வடகம், ஊதுபத்தி வரை அனைத்தும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதே சமயம், நீங்கள் நினைத்த எல்லா பொருள்களையும் ஏற்றுமதி செய்துவிட முடியாது. ஏற்றுமதி வர்த்தகத்துக்கு அரசு அனுமதிக்கும் பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்யலாம். தடை செய்துள்ள பொருள்களை ஏற்றுமதி செய்தால், பெரும் பிரச்னைக்குள் சிக்க வேண்டி வரும்.

இந்தத் தொழிலில் நீங்கள் இறங்கும் முன், நீங்கள் என்ன வகையான ஏற்றுமதியாளர் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். அதாவது, 1. பிறரிடமிருந்து பொருள்களை வாங்கி ஏற்றுமதி செய்பவரா, 2. பொருள்களை நீங்களே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்பவரா, 3. பிறரிடமிருந்து வாங்கிய பொருள்களை மதிப்புக்கூட்டி ஏற்றுமதி செய்பவரா, 4. சேவை ஏற்றுமதியாளரா? இதில் நீங்கள் எந்த வகை ஏற்றுமதியாளர் என்பதை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

மேலும், ஏற்றுமதியைப் பொறுத்தவரை மிக முக்கியமானது தரம். உள்ளூரில் செய்யும் பிஸ்னஸ் போல ஏற்றுமதி சந்தையைச் சாதாரணமாக நினைக்கக்கூடாது. தரம்தான் உங்களுடைய பிஸ்னஸை மேலும் மேலும் உயர்த்தும். உங்களுடைய பொருளுக்கான தரத்தில் நீங்கள் கவனம் செலுத்தாவிட்டால், பெரும் நஷ்டம் ஏற்பட்டுவிடும்; பெயரும் கெட்டுவிடும்.

### ஜெயிக்க ஐந்து முக்கிய படிநிலைகள்

**1. ஏற்றுமதி தொழிலை எப்படித் தொடங்குவது?**

ஏற்றுமதி தொழில் தொடங்குவதன் செயல்முறைகள், அரசு மற்றும் சட்ட ரீதியான விதிமுறைகள், அவற்றுக்கு எப்படி நம்மைத் தயார் செய்து கொள்வது எனத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**2. திட்ட மிடுதல்**

ஏற்றுமதி தொழிலில் உள்ள நுணுக்கங்கள், திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வளர்த்துக்கொள்ள வேண்டிய திறமைகள், பொருளையும் நாட்டையும் தேர்வு செய்யும் உத்திகள் போன்றவற்றைத் தெரிந்து வைத்திருப்பது முக்கியம்.

**3. முதலீடும், விலை நிர்ணயமும்**

எந்தப் பொருளுக்கு எவ்வளவு முதலீடு, தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் வழிகள், அரசு தரப்பில் கடன் வசதிகள், மானியங்கள் சலுகைகள், பொருளுக்கான விலையை நிர்ணயம் செய்யும் வழிகள், எவ்வளவு லாபம் வைத்து விற்கலாம் என்பன போன்றவற்றைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

**4. செயல்முறைகளும் டொக்குமென்டேஷனும்**

தேவையான ஆவணங்கள் என்னென்ன, அதற்கான நடைமுறைகள் என்னென்ன, ஆவணங்களைத் தயார் செய்வது எப்படி என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

**5. பேக்ஒபிஸ் அல்லது அக்கவுன்டிங்**

பிஸ்னஸ் செயல்பாடுகளை நிர்வகிப்பது, ஓர்டர்களைக் கையாள்வது, கணக்கு வழக்குகளை நிர்வகிப்பது ஆகியவற்றையும் அறிந்து வைத்திருப்பது அவசியம்.

இந்த ஐந்து படிநிலைகளை பற்றி அடுத்தடுத்து வரும் இதழ்களில் விரிவாகப் பார்ப்போம்.

நீங்கள் ஏற்றுமதி செய்யும்முன், ஐஇ கோட் (IE Code) என்று சொல்லப்படும் ஏற்றுமதி/ இறக்குமதி செய்வதற்கான உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

நிறுவனமாகப் பதிவு செய்து கொண்ட பிறகுதான் ஏற்றுமதி/இறக்குமதி செய்வதற்கான உரிமத்தைப் பெற முடியும். ஏற்கெனவே உள்ளூரில் பிஸ்னஸ் செய்பவராக இருந்தால், உங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே உரிமம் பெற்றுக் கொள்ளலாம். அல்லது நேரடியாக ஏற்றுமதி தொழிலில் இறங்குகிறீர்கள் என்றால், ஒரு நிறுவனத்தைப் பதிவுசெய்து அதன் பெயரில் 'ஐஇ கோட்' வாங்கிக்கொள்ளலாம்.

ஆயிரக்கணக்காணவர்கள் ஐஇ கோட்களை வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் குறைந்தளவான எண்ணிக்கையுடையவர்கள்தான் ஏற்றுமதி தொழிலைச் செய்துவருகிறார்கள். மற்றவர்கள் 'ஐஇ கோட்' வாங்கியதோடு சரி, அடுத்து என்ன செய்வதென்றே தெரியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் நீங்களும் ஒருவரா? கவலைவேண்டாம். அனைத்து சந்தேகங்களுக்கும் இனி வரும் பகுதிகளில் தீர்வுகள் காத்திருக்கின்றன; தொடர்ந்து படியுங்கள்.

தொடரும்...

# பப்பாசியாலும் பணமீட்டலாம்!




பப்பாசியில் பல இனங்கள் இப்பொழுது அறிமுகப்படுத்தப் பட்டு விட்டன. ஆனாலும், உள்ளூர் பப்பாசிக்கான மவுசு இன்றும் இருக்கிறது. உள்ளூர் பப்பாசியை முறைப்படி பராமரிக்காததால் விளைச்சல் முழுமையாக கிடைப்ப தில்லை. இதனால், புதிய இனங் களை விவசாயிகள் நாடுவது அதிகரித் துள்ளது.

உள்ளூர் பப்பாசியை முறைப்படி பராமரித்தால் அமோக விளைச்சல் கிடைக்கும். இதற்கு பருவம் கிடையாது. நாலு மாதம் தினமும் பழம் பறிக்கலாம். ஐந்தாவது மாதத்தில் இருந்து மூன்று நாளிற்கு ஒருமுறை பறிக்கலாம். 400 மரங்கள் இருந்தால், ஒரு பறிப்பில் 450 500 கிலோ பழங்கள் பறிக்கலாம். ஒரு கிலோ விற்பனை விலை 20 30 வரை என வைத்தாலும், ஒரு பறிப்பில் 15,000 ரூபா வரை பணமீட்டலாம். மொத்தம் 130 பறிப்புக்கு குறையாமல் பறிக்கலாம். 130 பறிப்பு என்று வைத்தாலும் 1,950,000 மொத்த பணம் கிடைக்கும்!

### பப்பாசி செய்கை


ஒரு ஏக்கர் நிலத்தில் உள்ளூர் பப்பாசி செய்கை முறை.


பப்பாசிக்கு பருவம் இல்லை. களிமண் தவிர அனைத்து மண்ணிலும் செய்கை செய்யலாம். நிலத்தை முதலில் சட்டிக்கலப்பையால் ஒரு சால் உழவு செய்துவிட்டு, 15 நாட்கள் நிலத்தை காயவிட வேண்டும். பிறகு, டிரில்லரால் (சாதாரண கலப்பை) ஒரு சால் உழவு செய்துவிட்டு.. அடுத்த நாள் அரை அடி ஆழத்தில், செடிக்குச் செடி 10 அடி, வரிசைக்கு வரிசை 10 அடி இடைவெளி விட்டு அரையடி ஆழத்தில் குழிகள் எடுக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 436 குழிகள் வரை எடுக்கலாம். குழி எடுத்த மறுநாள் ஒரு குழிக்கு அரை கிலோ தொழுவுரம் போட்டு, நடுவிரல் அளவு குழி எடுத்து, பப்பாசி கன்றை வைத்து, மேல் மண் கொண்டு குழியை மூடிவிட வேண்டும். நடவு செய்த உடனே பாசனம் செய்ய வேண்டும். அதன் பிறகு, மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து தண்ணீர் பாய்ச்சி வந்தால் போதும்.



### ஏக்கருக்கு அரை கிலோ விதை!

பப்பாசியை கன்றாக வாங்காமல், விதையை வாங்கி நாமே நாற்று உற்பத்தி செய்து நடவு செய்வதுதான் சிறந்தது. 20 அடி நீளம், 20 அடி அகலத்தில் நாற்றங்கால் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான அரை கிலோ விதையை எடுத்து, ஒரு பாத்திரத்தில் ஒரு லிட்டர் தண்ணீரில் அரை லிட்டர் பஞ்சகவ்யா ஊற்றி அதில் விதையைப் போட்டு மூன்று மணி நேரம் ஊற வைக்க வேண்டும். பிறகு, ஓலைப்பாய் விரித்து, அதில் விதையை கொட்டி, அரை மணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். விதையை நாற்றாங்காலில் தூவிவிட்டு 50 கிலோ மட்கிய தொழுவுரத்தைத் தூவிவிட்டு ஒரு முறை கிளறிவிட்டால் விதையும், தொழுவுரமும் கலந்து விடும். தண்ணீர் பாய்வதற்கு வசதி யாக 4 அடிக்கு ஒரு பாத்தி வீதம் 5 பாத்திகள் எடுத்துக் கொள்ளலாம். விதைத்ததில் இருந்து, 8 முதல் 10 நாட்களில் முளைப்பு தெரியும். 30 நாளில் அரை அடி உயரமும், 60 நாளில் ஓர் அடி உயரமும் வரும். 30ம் நாளிலேயே எடுத்து நடவு செய்யலாம். ஆனால், ஓர் அடி உயரம் வந்தால் நடவு செய்ய வசதியாக இருக்கும்.





### 15 நாள் இடைவெளியில் பஞ்சகவ்யா!

பப்பாளியை நடவு செய்ததில் இருந்து, 20ம் நாள் மட்டும் ஒரு களை எடுத்துவிட்டு, 10 லிட்டருக்கு 300 மில்லி பஞ்சகவ்யா என்ற கணக்கில் கலந்து தெளிக்க வேண்டும். தொடர்ந்து, ஒவ்வொரு 15 நாள் இடைவெளியிலும் இதே அளவில் பஞ்சகவ்யா தெளிக்க வேண்டும். 40 நாளுக்கு ஒருமுறை 10 லிட்டர் தண்ணீருக்கு 150 மில்லி மீன் அமிலம் கலந்து தெளிக்க வேண்டும்.

### பூ பூக்கும் நேரத்தில் பிண்ணாக்குக் கரைசல்!

6ம் மாதம் பூ பூக்க ஆரம்பிக்கும். அந்த நேரத்தில் 5 கிலோ பாசிப்பயறு, 5 கிலோ தட்டைப்பயறு, 5 கிலோ கொள்ளுப்பயறு, 5 கிலோ கொண்டைக்கடலை, ஆகியவற்றை மாவாக திரித்து இதனுடன் கடலைப் பிண்ணாக்கு 80 கிலோ, வேப்பம் பிண்ணாக்கு 10 கிலோ ஆகியவற்றை 200 லிட்டர் கொள்ளவுள்ள டிரம்மில் போட்டு தண்ணீர் ஊற்றி கலக்க வேண்டும். டிரம் நிரம்பும் அளவுக்கு தண்ணீர் ஊற்றி இரண்டு நாள் வைத்திருக்க வேண்டும். பிறகு, அந்தக் கரைசலை ஒவ்வொரு தூரிலும் 500 மில்லி ஊற்றி, மண் அணைக்க வேண்டும். இதனால் பூக்கும் பூக்கள் உதிராமல், காய் பிடித்து நன்கு வளரும்.

பூ பூக்கும் நேரத்தில்தான், பப்பாளியில் ஆண் பெண் அடையாளம் காணமுடியும். கிளைகளுக்கும் தண்டுக்கும் இடையே ஒரே பூ மட்டும் பூத்தால் அது பெண் பப்பாளி எனவும், கொத்தாக பூ காணப்பட்டால் அது ஆண் பப்பாளி எனவும் அடையாளம் தெரிந்து கொள்ளலாம்.

400 பப்பாளி மரங்களில் குறைந்தது 20 ஆண் பப்பாளியாவது இருந்தால் காய்ப்புத்திறன் அதிகமாக இருக்கும். சில விவசாயிகள் ஆண் பப்பாளி மரங்களை மொத்தமாக பிடுங்கிவிடு வார்கள். இதனால் அயல்மகரந்தச் சேர்க்கை நடைபெறாமல் காய்ப்புத் திறன் குறைய வாய்ப்புள்ளது.

7ம் மாதம் காய் காய்க்கத் தொடங்கும். 8ம் மாதம் காய் பறிக்கலாம். 9ம் மாதத்தில் இருந்து விளைச்சல் அதிகரிக்கும். 12ம் மாதம் வரை நல்ல விளைச்சல் கிடைக்கும். 13ம் மாதத்தில் இருந்து விளைச்சல் படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். பிறகு, மரம் உயரமாக வளர்ந்து விடும். காய்களும் தரமில்லாமல் இருக்கும்.

### மாவுப்பூச்சி தாக்குதலுக்கு மூன்று எண்ணெய் கரைசல்!

பப்பாசி செய்கையில் இரண்டாவது மாதத்தில் இருந்தே உற்று கவனிக்க வேண்டும். இலைக்கு மேல்புறம், இலைக்கு பின்புறம் என வெள்ளை நிறத்தில் மாவுப்பூச்சி தென்படும். மாவுப்பூச்சி எப்போது தென்பட் டாலும் தண்ணீரை கைத்தெளிப் பானால் தெளிக்க வேண்டும். தண்ணீர் தெளித்த இரண்டு மணி நேரத்துக்குள், 1 0 லிட்டர் தண்ணீரில் வேப்ப எண்ணெய் 50 மில்லி, புங்கன் எண்ணெய் 50 மில்லி, இலுப்பை எண்ணெய் 50 மில்லி ஆகியவற் றைக் கலந்து, கைத்தெளிப்பானால் தெளித்துவிட வேண்டும்.




## டீட் ப்ரொடெக்ட்

கறவை மாடுகளின் பால் காம்புகளைக் கிருமி தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் ஜெல் இது. பால் கறந்த பிறகு, இதைத் தடவும்போது காம்புகளின் மீது ஒரு படிவமாக மாறி, நோய் தொற்றுகள் ஏற்படாமல் தவிர்க்கிறது. இந்த டீட் ப்ரொடெக்ட் எந்த ரசாயனங்களும் இன்றி முழுவதும் இயற்கை மூலப்பொருள்களால் உருவாக்கப்பட்டது. இத்துடன் சோமட்டிக் அணு கணக்கீட்டுக் கலனை உபயோகிப்பதன் மூலம் மடி அழற்சி நோய் தாக்கப்பட்டுள்ளதையும் அறிய முடியும்.

## நானோ ஹீல்

இது நனோ கால்சியம் துகள்களால் ஆன புண்களை ஆற்றும் களிம்பு. இக்களிம்பு கால்நடைகளின் செல் வளர்ச்சியை ஊக்குவித்து புண்களைக் குணமடையச் செய்கிறது. இக்களிம்பில் உள்ள ஜெலட்டின், புண்களின் மேல் பாதுகாப்புத் திரையை ஏற்படுத்துகிறது. இதோடு இக்களிம்பு ஈரப்பதத்தைத் தக்கவைக்கவும் உதவுகிறது. நுண்ணுயிரி தாக்குதலுக்கு எதிராகவும் செயல்படுகிறது.



# தீபம் சுப்பர் மார்க்கெட்

கடந்த வாரம் ஆரம்பித்த தீபத்தின் சுப்பர் மார்க்கெட் பகுதிக்கு வாசகர்களிடம் இருந்து நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பல பகுதிகளில் இருந்தும் வாசகர்கள் தொடர்பு கொண்டபடியிருக்கிறார்கள்.

விபரங்களை அனுப்பிவிட்டு, அடுத்தவாரமே அது பிரசுரமாக வேண்டுமென நீங்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லைத்தான். ஆனால், எமக்கு கிடைக்கும் வரிசை ஒழுங்கின்படிதானே அவற்றை பிரசுரிக்க முடியும். எம்மிடம் வந்து சேரும் விபரங்களை முழுமையாக வரிசை கிரமமாக பிரசுரிப்பாம் என்பதை வாசகர்களிடம் தெரியப்படுத்துகிறோம்.

புதிய வாசகர்களே, உங்களிற்கு தேவையான சொத்தை/ பொருளை பற்றியோ, அல்லது விற்பனைக்கு உள்ள சொத்தை/ பொருளை பற்றியோ தீபம் வாரஇதழின், தீபம் சுப்பமார்க்கெட் பகுதியில் விளம்பரப்படுத்துங்கள். இதில் இடைத்தரகர்களிற்கு இடமில்லை. இடைத்தரகர்கள் நிராகரிக்கப்பட்டு விடப்படுவீர்கள் என்பதால், தொடர்பு கொள்வதை தவிர்த்து விடுங்கள். இந்த பகுதியில் வெளியாகும் அனைத்து விளம்பரங்களிற்கும் இது பொருந்தும்.

விளம்பரப்படுத்துவதென்றால், எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்? இந்த கேள்விதான் உங்களிற்கு முதலில் ஏற்படும். அந்த கவலையையே விடுங்கள். பரீட்சார்த்த முயற்சியாக முற்றிலும் இலவசமாகவே இதை செயற்படுத்துகிறோம்.

உங்களிடம் உள்ள சொத்தை/ பொருளை விளம்பரப்படுத்த வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் மின்னஞ்சல் கணக்கு வைத்துள்ளவரா? அப்படியென்றால், deepamdesk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, விற்பனை பொருளின் படம், அதன் பாவனை விபரம், எதிர்பார்க்கும் விலை, உங்கள் தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

மின்னஞ்சல் கணக்கு இல்லையென்றாலும், கவலைப்பட வேண்டியதில்லை. 0768255562 என்ற தொலைபேசி எண்ணுக்கு, விபரங்களை SMS செய்யுங்கள். மேலதிக விபரங்களிற்கு நாங்களே உங்களை தொடர்பு கொள்வோம்.

தபாலில் அனுப்பிவைப்பவர்கள்
தீபம் சுப்பர்மார்க்கெட்,
தீபம் வாரஇதழ்,
989/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு, நல்லூர், யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

## தேவை

### Chick incubator

நல்ல நிலையில் முட்டை பொரிக்கும் இயந்திரம் வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
Capacity 350700
தொடர்புக்கு: 0770575314

### முச்சக்கரவண்டி


நல்ல நிலையிலுள்ள 2 Stoke முச்சக்கர வண்டியொன்று தேவை. வடக்கின் எந்த பகுதியிலிருந்தாலும், உடன் தொடர்புகொள்ளவும்.
தொடர்புக்கு: 0771816039

### வீடு

யாழ் நகரிலுள்ள
அலுவலகமொன்றிற்கு வீடு தேவை. மாநகரசபை எல்லைக்குட்பட்ட, அல்லது அண்மித்த பகுதியிலுள்ள, நல்ல நிலையிலுள்ள வீடு தேவை.
தொடர்புக்கு: 0771816039



HONDA TWISTER BIKE
5500km
எதிர்பார்க்கும் விலை:
**210,000Rs**
தொடர்புக்கு:
0770366456 (அஜந்தன்)



TVS WEGO
43,100km
எதிர்பார்க்கும் விலை:
**110,000Rs**
தொடர்புக்கு: 0771816039



HONDA HONART BIKE
20,000km
எதிர்பார்க்கும் விலை:
**250,000Rs**
தொடர்புக்கு: 0771864593
(டினேஷ்)



YAMAHA FAZER BIKE
27000km.
எதிர்பார்க்கும் விலை:
**325,000Rs**
தொடர்புக்கு: 0774403654
(கபீசன்)



## விற்பனைக்கு

### முயல்

நல்ல இன வளர்ப்பு முயல்கள் விற்பனைக்குண்டு. ஆண், பெண், குட்டி, வளர்ந்தது என அனைத்து விதமான முயல்களும் விற்பனைக்குண்டு. தனியாகவோ, ஜோடியாகவோ, மொத்தமாகவே வாங்கலாம்.
தொடர்புக்கு: 0773953084


### கமரா

MD 9000 பாவித்த கமரா விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்புக்கு: 0771816039

### கோழி

பன்டம் சேவல்கள் ஐந்து விற்பனைக்கு உள்ளன. விலை பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்புக்கு: 0770575314





சிவராம்

# சிவராமை கொன்றது யார் தெரியுமா?

பீஷ்மர்

ஈழப்போராட்டம் தொடர்பாக, அதில் முக்கிய பங்காளிகளான விடுதலைப்புலிகளின் யாருமறியாத உள் தகவல்களை விலாவாரியாக பேசும் தீபத்தின் இந்த தொடரில், இதுவரை கிழக்கு மாகாண பிளவு பற்றி குறிப்பிட்டிருந்தோம். புலிகளின் கிழக்கு பிராந்திய தளபதியாகவிருந்த கருணா, விடுதலைப்புலிகள் அமைப்பை விட்டு ஏன் பிரிந்தார், தனிமனித பிரச்சனைகளிற்கு தத்துவார்த்த அர்த்தம் கற்பிப்பதில் ஊடகவியலாளர் தராகி சிவராம் போன்றவர்கள் ஆற்றிய பங்கு, புலிகள் கருணா மோதலில் நடந்த உள் விசயங்கள் என பல விசயங்களை அறிந்திருப்பீர்கள்.


முக்கியமாக குறிப்பிட வேண்டிய ஒரு விசயம் இந்த விவகாரத்தில் பேசப்படாத விசயங்கள் இன்னும் உள்ளன. அனைத்து விசயங்களையும் அச்சமின்றி பேசலாமென ஒரு சூழல் உருவாகினால், இந்த விவகாரத்தில் உள்ள அதிர்ச்சியளிக்கும் இன்னும் பல தகவல்களுடன் உங்களை சந்திக்க ஆவலாக உள்ளது. இன்றைய யதார்த்தத்தில் இவ்வளவு தகவல்களையும்தான் பேச முடியும். வாசகர்கள் இதைபுரிந்துகொள்வார்கள் என நம்புகிறோம்.

கருணா விவகாரத்தில் கட்டாயம் பேசப்பட வேண்டியவர் ஊடகவியலாளர் 'தராகி சிவராம். அவரது கொலை தொடர்பாகவும் ஒரு மினி தொடர் எழுதலாம். அவ்வளவு திகில் சம்பவங்களால் ஆனது அந்தவிவகாரம். வசதியும், சூழலும் அமைந்தால், தீபத்தில் அதுவும் வெளியாகும்.

சிவராம் தொடர்பாக மேலோட்டமாக சில தகவல்களை இதில் குறிப்பிடுகிறேன். சிவராமை பற்றி எழுத வேண்டுமெனில், புளொட் அமைப்பு பற்றியும் கொஞ்சம் எழுத வேண்டும். விடுதலைப்புலிகளை பற்றி, இறுதி யுத்தத்தை பற்றி ஆரம்பமான இந்த தொடரில், ஈழப்போராட்டத்தின் ஆரம்ப காலகட்டங்களை பற்றிய தகவல்களும் வருவது வாசகர்களிற்கு ஆர்வத்தை தூண்டும் என நம்புகிறோம்.



இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 73



உமா மகேஸ்வரன்

சிவராம் தீவிர தமிழ் தேசியவாதி. அதில் இரண்டாவது சந்தேகம் கிடையாது. அவர் தமிழ் தேசியவாதியென்பது எவ்வளவு உண்மையோ, அதைவிட பல மடங்கு உண்மையானது அவர் கிழக்கு பிரதேசவாதியென்பது.

கிழக்கு பிரதேசவாத உணர்வு சிவராமிற்குள் திடீரென தோன்றியதாக தொன்னூறுகளின் இறுதியில் பலர் நினைக்கிறார்கள். அது தவறு. சிவராமுடன் நெருக்கமாக பழகியவர்களிற்கு இதன் உண்மை தெரியும். சிவராமுடன் அவர் ஆயுத போராளியானதிலிருந்து, மரணமாகும் வரை ஆத்மார்த்த நட்பாயிருந்தவர்கள் விரல்விட்டு எண்ணத்தக்கவர்கள்தான். அவர்கள் யாரும் வாய் திறந்து பேசும் நிலைமையில் இல்லாததால், இந்த உண்மைகள் வெளியாவதில்லை.

சிவராமைப்பற்றி உள்ள இன்னொரு கதைகளில் ஒன்று அவர் இரண்டு இயக்கங்களை அழித்தார் என்பது. சிவராமின் இயக்க வாழ்க்கை, அப்பொழுது நடந்த சம்பவங்கள், தகவல்கள், கதைகளின் அடிப்படையில், அப்படி சொல்லப்படுவதுண்டு. அப்படி சொல்லப்படுதில் எவ்வளவு உண்மையுண்டு என்பதை தொடர்ந்து படிக்கும்போது வாசகர்களிற்கு புரியும் என நினைக்கிறேன்.

சிவராமால் அழிக்கப்பட்டதாக கூறப்படும் இயக்கங்கள் எவையெவை தெரியுமா?

புளொட், விடுதலைப்புலிகள்!

என்ன தலைசுற்றுகிறதா? இதற்குத்தான் ஏற்கனவே சொல்லியுள்ளோம், தொடர்ந்து படித்தால்தான் முழுமையாக இந்த கருத்தின் பின்னால் உள்ள அர்த்தத்தைபுரிந்துகொள்ளலாம் என. ஆகவே, முழுமையாக படித்துவிட்டு முடிவெடுங்கள்.

புளொட்டை விடுதலைப்புலிகள் தாக்கினார்கள், விடுதலைப்புலிகளை சர்வதேச நாடுகள் சிலவற்றின் உதவியுடன் இலங்கை அழித்தது என்றுதானே சொல்கிறார்கள் என நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், அதற்கும் அப்பால் சில விசயங்கள் உள்ளன. உள்ளக ரீதியாக ஏற்படும் சில பிரச்சனைகளும், அமைப்புக்களின் வீழ்ச்சிக்கு பின்னணி காரணியாக அமைவதுண்டு. இந்த பிரச்சனைகளையும் எதிர்தரப்புக்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதுண்டு. உயரமாக கட்டப்படும் கட்டங்களில் அடியிலுள்ள ஒரு துண்டை அகற்றிவிட்டால்மொத்தமாக சரிவதற்கு வாய்ப்பாகுவதை போல, இரண்டு இயக்கங்களின் வீழ்ச்சியுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சிவராமின் பெயரும் சேர்ந்தே பேசப்படுகிறது. இதனால்தான், இரண்டு இயக்கங்களை அழித்தவர் என்று சொல்லப்படுவதுண்டு. அது பற்றி விபரமாக சொல்கிறேன்.

சிவராம் 1983 இல் புளொட் அமைப்பில் இணைந்தார். 1985 இல் புளொட் அமைப்பின் தலைவர் உமாமகேஸ்வரன், சிவராமை பற்றி மிக துல்லியமாக கணிப்பிட்டு, தனது இயக்கத்திலிருந்த முக்கியஸ்தர்களை எச்சரித்திருந்தார். "சிவராம் பிரச்சனைக்குரிய ஆள். கிழக்கு பிரதேசவாதம் பேசி, சிக்கலை ஏற்படுத்துவார். சிவராமுடன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என புளொட் முக்கியஸ்தர்களை எச்சரித்திருக்கிறார்.

1985 இல் உமாமகேஸ்வரன் தனது முக்கியஸ்தர்களை எச்சரித்த விசயத்தை, 19 வருடங்கள் கழித்து விடுதலைப்புலிகள் உணர்ந்து கொண்டனர்!

எவ்வளவு பெரிய முரண்நகையான விசயம் இதுவென்று கவனியுங்கள்.

சிவராம் புளொட்டில் சேர்வதற்கு முன்னர் பெரதேனிய பல்கலைகழகத்தில் ஆங்கில இலக்கியம் கற்றுக் கொண்டிருந்தார். சிவராம் குடும்பத்தில் வீட்டிலேயே ஆங்கிலத்தில்தான் பேசிக்கொள்வார்கள். அதனால் இயல்பிலேயே ஆங்கிலப்புலமை அவருக்கு உண்டாகியிருந்தது. பல்கலைகழகத்தில் படிக்கும் காலத்தில் ஜே.வி.பி மாணவர் அமைப்புக்களின் மூலம் மார்க்சிய அறிமுகம் ஏற்பட்டிருந்தது. இயல்பிலேயே சிவராமுக்குள் ஒரு கவிஞனும் இருந்தான். சிவராம் எழுதிய கவிதைகள் பல புளொட்டின் வெளியீடான பொங்கும் தமிழமுது, மற்றும் சூரிநிகர் போன்ற பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளன.

இதனால் புளொட்டில் சேர்ந்ததும், அவரை அரசியல்பிரிவில் இணைத்து விட்டனர். ஆனால் ஆயுதப்பயிற்சி பெற வேண்டுமென சிவராம் விரும்பினார். இறுதிவரை அவருக்கு புளொட் இராணுவப்பயிற்சி முகாமில் பயிற்சிபெறும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆயுதங்களின் மீது சிவராமிற்கு அப்பொழுது தீராத காதலிருந்தது.

1984 இன் தொடக்கத்தில் புளொட்டிடம் இருந்த ஏகே துப்பாக்கிகளின் எத்தனையென்பது தெரியுமா?

வெறும் ஐந்துதான்!

அதில் ஒன்றை மட்டக்களப்பிலிருந்த போராளிகளிடம் கொடுத்திருந்தனர். அந்த துப்பாக்கி தன்னிடம் இருக்க வேண்டுமென சிவராமிற்கு விருப்பமிருந்தது. அப்பொழுது புளொட்டின் கிழக்கு பொறுப்பாளராக இருந்தவர் பார்த்தன். அவர்தான் துப்பாக்கிக்கு பொறுப்பானவர்.

யாழ்ப்பாணத்திற்கு வர வேண்டியேற்பட்டால், அடம்பிடித்து அந்த துப்பாக்கியை தன்னுடன் எடுத்து வந்துவிடுவார் சிவராம். இருந்த ஒரேயொரு துப்பாக்கிக்கும் சிவராம் உரிமை கொண்டாட தொடங்கிய பின்னரே, மட்டக்களப்பிற்கு இன்னொரு துப்பாக்கி கொடுக்க வேண்டுமென புளொட் தலைமை தீர்மானித்தது.

1984 இல் புளொட்டின் அரசியல் பிரிவில் இயங்கி, போராளிகளிற்கு அரசியல் வகுப்புக்கள் எடுத்தார் சிவராம். அவர் நன்றாக சாப்பிடுவார். சிவராம் என்பதை, இயக்கத்திற்குள் SR என்றுதான் சுருக்கமாக அழைப்பார்கள். SR என்பதற்கு சாப்பாட்டு ராமன் என்றும் நகைச்சுவையாக அர்த்தம் கற்பிப்பார்கள்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

புளொட் போராளிகள்!

1984 அளவில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணம் பற்றி புளொட் தலைவர் உமாமகேஸ்வரனுக்கும், சிவராமிற்குமிடையில் ஒரு அரசியல் உரையாடல் நடந்தது. வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்பதுதான் ஈழவிடுதலை இயக்கங்கள் அனைத்தினதும் குறிக்கோளாக இருந்தது. சிவராமும் அதை ஏற்றுக்கொண்டவர்தான். எனினும், அதற்குள் கிழக்கு மட்டக்களப்பை முன்னிலைப்படுத்தி, அதை தனித்துவப்படுத்தி, வடக்கிலுள்ளவர்கள் தம்மை ஒதுக்குகிறார்கள் என நிறைய விசயங்கள் சிவராம் அப்பொழுது பேசினார். வடக்கும் கிழக்கும் பாரம்பரிய நிலம் என்ற ஒரு கருதுகோளின் அடிப்படையில் இணைவதில் சிவராமிற்கு முழுமையான திருப்தி அப்போது இருக்கவில்லை. இந்த உரையாடல் பெரும் விவாதமாகவே அப்பொழுது உருவானது. சிவராமைப்பற்றி உமாமகேஸ்வரன் முழுமையாக எடை போட்ட சம்பவம் அது.

அதன்பின்னர் புளொட் முக்கியஸ்தர்கள் குறிப்பாக சிவராமுடன் நெருக்கமாக இருந்தவர்கள் சிலரை தனிமையில் அழைத்த உமாமகேஸ்வரன், சிவராமின் கிழக்கு பிரதேசவாத கருத்துக்கள் தமது தமிழீழ கோரிக்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும், சிவராமுடன் அவதானமாக இருக்க வேண்டுமென எச்சரித்தார். அப்பொழுது உமாமகேஸ்வரன் பாவித்த வார்த்தைகளில் ஒன்று 'சிவராம் ஆபத்தாவனர்' என்பது!

1985 இல் பூட்டான் தலைநகர் திம்புவில் இலங்கை அரசுக்கும், ஈழப்போராளிகளிற்குமிடையில் பேச்சு நடந்தது. இலங்கையரசு, போராளிகளுடன் முதன்முதலில் பேச்சுவார்த்தை நடத்திய சம்பவம் இதுதான். புளொட் சார்பில் த.சித்தார்த்தனும், இன்னும் சிலரும் கலந்துகொண்டனர். முஸ்லிம், மலையக மக்கள் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டுமென, ஒரு முஸ்லிம் போராளியையும், மலையகத்தை சேர்ந்த பேர்ராளியையும் புளொட் அனுப்பிவைத்தது. அந்த சமயத்தில், புளொட்டின் அரசியல் அணியில் சிவராம் முக்கியஸ்தராக உருவெடுத்திருந்தார். அவரது ஆங்கில புலமைக்கு நிச்சயம் திம்பு சென்றிருக்க வேண்டும். ஆனால் செல்லவில்லை. அதற்கு, சிவராமின் கிழக்கு பிரதேசவாத உணர்வுதான் காரணம்!

சிவராமை திம்புவிற்கு அனுப்பினால் சிக்கலாகிவிடும் என்று உமாமகேஸ்வரன் நினைத்தார். உமாமகேஸ்வரன் தன்னை திட்டமிட்டு தடுத்து விட்டார் என்ற வருத்தம் சிவராமிடமும் நீண்டநாட்கள் இருந்தது.

1986 அளவில் புளொட் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடங்கினார்கள். ரெலோ மீதான தாக்குதலுடன் புலிகள் ஆரம்பித்த சகோதர யுத்தம் புளொட் மீதான தாக்குதலில் உச்சமடைந்தது. புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள புளொட்டால் முடியவில்லை. புலிகள் அளவிற்கு அவர்களிடம் ஆயுதமும் இருக்கவில்லை. நிறைய ஆளணி வைத்திருந்தார்கள், அதிக ஆயுதம் இருப்பதை போன்ற தோற்றம் நிலவியது, ஆனால் புலிகளை எதிர்க்குமளவிற்கு ஆயுதம் இருக்கவில்லை.



தாக்குதல் தொடங்கிய சில நாட்களிலேயே புளொட் முகாம்கள் புலிகளிடம் விழுந்தது. பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் குழுக்களாக காடுகளிற்குள் தஞ்சம் புகுந்தனர்.

புளொட்டின் முன்னால் இரண்டு ஒப்ஷன்கள் இருந்தன. ஒன்று எங்காவது ஆயுதம் வாங்கிக்கொண்டு வடக்கு கிழக்கில் தொடர்ந்து நிலைகொள்வது.

இரண்டு அமைப்பை கலைத்துவிட்டு சென்றுவிடுவது.

ஆனால் இரண்டாவது ஒப்ஷனை யாரும் உடனடியாக எடுப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், விடுதலைப்புலிகள் எதற்காக இயக்கத்தை தொடங்கினார்களோ, அதற்காகத்தான் புளொட்டும் ஆரம்பிக்கப்பட்டது. புலிகளில் இணைந்த ஒருவர் எவ்வளவு உணர்வுபூர்வமானவராக இருந்தாரோ, புளொட்டில் இரணந்தவரும் அப்படித்தான் இருந்தார். புலிகள், புளொட் என பெயரில் மட்டுமே வேறுபாடிருந்தது. பல வருடங்களாக ஒரு நோக்கத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள், ஒருநாளில் அனைத்தையும் விட்டெறிந்துவிட்டு செல்ல வேண்டுமென எதிர்பார்க்க முடியாதுதானே.

ஆகவே, புளொட் அமைப்பு தொடர்ந்து இயக்குவதென்றுதான், அதன் தலைவர் உமாமகேஸ்வரன் முடிவெடுத்தார். ஆனால், அவர் யாரிடமும் ஆயுதம் வாங்க தயாராக இருக்கவில்லை. புலிகளுடனான மோதல் ஆரம்பித்ததும், புளொட்டிற்கு ஆயுதம் வழங்க இந்தியா விரும்பியது. புளொட்டிற்கு தகவலும் அனுப்பியிருந்தார்கள். ஆகவே, புளொட்டிற்கு ஆயுதம் வழங்குவதற்கு ஆட்களிருந்தனர்.

ஆனால், சிக்கல் வேறுவிதமாக இருந்தது. புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் அந்த ஆயுதங்களை வாங்க தயாராக இருக்கவில்லை. இந்தியா தொடர்பான உமாமகேஸ்வரனின் பார்வையே வித்தியாசமானதாக இருந்தது. இந்தியாவால் ஆட்டுவிக்கப்படுபவர்களாக இயக்கங்களும், ஈழத்தமிழர்களும் இருக்ககூடாது என்பது அவரது நிலைப்பாடு. இந்தியாவிலிருந்து கிடைக்கும் உதவிகளை ஈழப்போருக்கு பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, நமக்கிடையிலான மோதலிற்குபாவிக்ககூடாதென நினைத்தார். அதனால் இந்தியாவிலிருந்து கிடைக்கவிருந்த ஆயுத உதவியை பெற்றுக்கொள்வதில்லையென அவர் முடிவெடுத்தார்.

உமாமகேஸ்வரன் இந்த முடிவை எடுத்தாலும், கள நிலவரம் அவருக்கு எதிராக இருந்தது. புலிகளின் தாக்குதல் உக்கிரமடைந்திருந்தது. புளொட் போராளிகள் காடுகளிற்குள் தஞ்சமடைந்து, அடுத்து என்ன செய்வதென தெரியாத நிலையில் இருந்தனர். காடுகளிற்குள்ளும் புலிகளின் அணிகள் ஊடுருவி தாக்குலை ஆரம்பித்திருந்தன. இது போதாதென போதிய உணவுப்பொருட்களும் இருக்கவில்லை. சுமார் முன்னூறு தொடக்கம் நானூறுவரையான போராளிகள் காடுகளிற்குள் மரணத்தின் பிடியில் இருந்தனர்.

புளொட் தலைமைக்குள் இது பெரிய விவாதமாக மாறியது. இந்தியா வழங்குவதற்கு விரும்பும் ஆயுதங்களை வாங்கி, புலிகளின் தாக்குதலில் இருந்து போராளிகளை காப்பற வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். உமாமகேஸ்வரனின் போக்கும் அவர்களிற்கு பிடிக்கவில்லை. அதைப்பற்றி உள்ளுக்குள் முணுமுணுக்க தொடங்கினார்கள்.

அப்பொழுது ரெலோ மூலம்தான் புளொட்டின் அவசர தேவைக்கு கொஞ்ச ஆயுதங்கள் கிடைத்தன.

இந்தியஇலங்கைஉடன்படிக்கையின் பின்னரும் இந்த நிலைமையில் மாற்றம் இருக்கவில்லை. போதாக்குறைக்கு, புதிய பிரச்சனையாக, இந்தியப் படைகளும்புளொட்டை குறிவைத்தன. 1988 இல் இணைந்த வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலில், புளொட்டை களமிறக்க இந்தியா விரும்பியது. ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பு இந்திய இராணுவத்துடன் சேர்ந்தியங்கியதால், மக்களிடம் பெருமளவு விமர்சனத்தை சந்தித்திருந்தது. புலிகளுடன் மோதிக் கொண்டிருந்தாலும், இந்தியப்படைகளுடன் சேராமல் புளொட் இயன்றவரை சுயாதீனத்தை பேணிக் கொண்டிருந்தது. இதனால் புளொட்டை மாகாணசபை தேர்தலில் களமிறக்க இந்தியா விரும்பியது. புளொட்டுடன் பேச்சுவார்த்தையையும் ஆரம்பித்தது. ஆனால் உமாமகேஸ்வரன் அதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் புளொட்டிற்கு நெருக்கடி கொடுக்க, இந்தியப்படைகளும் புளொட் மீது தாக்குதல் நடத்த ஆரம்பினர்.

ஒரு பக்கம் புலிகள், மறுபக்கம் இந்தியப்படைகள். இருப்பதோ கொஞ்ச ஆயுதங்கள். எங்களிடம் ஆயுதம் வாங்குங்கள் என தொடர்ந்து நச்சரித்துக் கொண்டிருக்கும் இந்தியாவின் றோ உளவுத்துறை. புளொட் முக்கியஸ்தர்கள் என்ன முடிவெடுப்பார்கள்?

ஆம். அதுதான் நடந்தது. உமாமகேஸ்வரன் மீது கடும் விமர்சனம் கிளம்பியது. உமாவை விமர்சித்தவர்களின் முன்னணியில் இருந்தவர் சிவராம்!

(தொடரும்)









# WWE இப்படித்தான் தொலைக்காட்சியின் 'கிங்' ஆனது!




இன்று தொலைக்காட்சி உலகின் அரசனாக அரியணையில் அமர்ந்திருக்கிறது WWE. 150 நாடுகளில் பலகோடி மக்களை பார்வையாளர்களாக கொண்டிருக்கும் WWE, ஆண்டுக்கு 700 மில்லியன் டொலர்களுக்கு மேல் கல்லா கட்டிக் கொண்டிருக்கிறது. வாரவாரம் திங்கட்கிழமைகளில் ஒளிபரப்பாகும் 'ரோ', 1250 எபிஸோடுகளைத் தாண்டி வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. ஸ்மாக்டவுனும் 950வது எபிஸோடை கடந்துவிட்டது. இந்த இடத்தை பேருந்தில் சீட் பிடிப்பது போல் கைக்குட்டையை தூக்கிப் போட்டு பிடித்துவிடவில்லை. பல ஆண்டுகள் வெட்கப்பட்டு, வேதனைப்பட்டு, துன்பப்பட்டு, துயரப்பட்டு, அடிப்பட்டு, மிதிப்பட்டு இந்த இடத்தை அடைந்திருக்கிறது. பதினாறு வருட போர். போர்... ஆமாம் போர்...

**"சிறந்தொரு இடத்தை அடைய நான் செய்வதெல்லாம் ஒன்றுதான். என்றும் என் ஓட்டத்தை நிறுத்தப்போவதில்லை"**
**- டொல்ஃப் ஸிக்லர்**

நம் ஊரில்'கலக்கப்போவது யாருக்கு போட்டியாக 'அசத்தப்போவது யாரு', 'ஜோடி நம்பர் ஒன்'னின் போட்டியாக'மானாட மயிலாட' என கிளம்பியதைப்போல் 80'களில் WWE க்கு போட்டியாக WCW முஷ்டியை முறுக்கி நின்றது. நம்பர் ஒன் இடத்தை அடைய இரண்டு நிகழ்ச்சிகளும் போட்டி போட, ரெஸ்ட்லிங் ரசிகர்கள் பால்பாயாசத்தோடு மல்யுத்த விருந்தை அனுபவித்தனர். இந்த காலகட்டம் ப்ரோ ரெஸ்ட்லிங்கின் பொற்பாயாசம்... ஸாரி, பொற்காலம் என அழைக்கப்படுகிறது.

80'களின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் கேபிள் தொலைக்காட்சிகள் வேகமாய் பிரபலமடைந்து கொண்டிருந்தன. குறைந்த தயாரிப்புச் செலவில் பெரிய இலாபம் ஈட்டும் ரெஸ்ட்லிங் நிகழ்ச்சிகளும் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுக் கொண்டிருந்தன. WWE அப்போது WWF என்ற பெயரில் சீரும் சிறப்பும் செம்மையுமாக செயல்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது, WWFன் ஓல் அமெரிக்கன் ரெஸ்ட்லிங் நிகழ்ச்சி யுஎஸ்ஏ நெட்வொர்க் சனலில் ஒளிபரப்பாகி சக்கைப்போடு போட்டது. மற்றொரு புறம் TBS (டெட் டர்னர் ப்ரோட்காஸ்டிங் சிஸ்டம்) சனலில் GCW எனும் ரெஸ்ட்லிங் நிகழ்ச்சி ஒளிபரப்பானது. அதுவும் WWF முன்னால் தாக்குப்பிடிக்க முடியாமல் திணற, CGW நிகழ்ச்சியையே WWF நிறுவனத்திற்கு விற்றுவிட்டு கிளம்பிவிட்டார்கள் அதன் உரிமையாளர்கள். பாவத்த..!

'ஆப்பனன்ட்டா ஆளே இல்ல, சோலா ஆகிட்டேன்'எனடப்பாங்குத்து ஆடிக்கொண்டிருந்த WWFன் உரிமையாளர் வின்ஸ் மெக்மேஹனைப் பிடித்து ஊமைக்குத்து குத்தியது அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள். விதி வலியது!

TBS சனலில் ஒளிபரப்பான WWF நிறுவனத்தின் நிகழ்ச்சி, ரேட்டிங்கில் அதளபாதாளத்துக்கு சென்றது. கண்ணைப் பறிக்கும் கலர்களில் சொக்காய்களை போட்டுக்கொண்டு திரிவது, குறுக்க மறுக்க குடுகுடுவென ஓடுவது என குழந்தைகள் பார்க்கும் கார்டூன்களின் ரியல் வெர்ஷனைப் போல் இருந்த WWF நிகழ்ச்சியை மக்கள் வெறுத்தனர். WWF பார்ப்பதை விட, ஓடாத வெறும் டிவியை பார்ப்பதே நிறைய சுவாரஸ்யமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் கொலைவெறி கோபத்திற்கு ஆளான TBS சனலின் உரிமையாளர் டெட் டர்னர், 'கல்லா கட்டு, இல்லை கடையை சாத்து' என மெக்மேஹனின் கழுத்தை நெறித்தார். இறுதியாக, TBSயில் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த WWFக்கு சொந்தமான நிகழ்ச்சியை, 'ஜிம் க்ராக்கெட் புரொமோஷன்' எனும் நிறுவனத்திற்கு விற்றுவிட்டு நடையைக் கட்டினர் மெக்மேஹன். அடுத்த மூன்று ஆண்டுகளில், அதே நிகழ்ச்சியை 'ஜிம் க்ராக்கெட் புரொமோஷன்' நிறுவனத்திடமிருந்து சனல் உரிமையாளர் டெட் டர்னரே வாங்கிவிட்டார். நிகழ்ச்சியின் பெயர் WCW என மாற்றப்பட்டது, ஆட்டம் சூடுபிடிக்க தொடங்கியது, இரு உரிமையாளர்களின் வயிறு மாறிமாறி எரிந்தது, பதினாறு வருடப்போரும் ஆரம்பமானது.



யுஎஸ்ஏ நெட்வோர்க்கில் WWFன் நிகழ்ச்சியும் டிபிஎஸ் சனலில் WCW நிகழ்ச்சியும் ஒரே நேரத்தில் ஒளிபரப்பாகி பல சலசலப்புகளும் சர்ச்சைகளும் எழுந்தன. WCW நிகழ்ச்சிகாசுக்கு (PAYPERVIEW) ஒளிபரப்பாகும் அதேநேரம் WWF நிகழ்ச்சி இலவசமாக ஒளிபரப்பப்படும். இது தலைகீழாகவும் நடக்கும். 'வாழு, வாழ விடு' என தல சொன்னதை மறந்து, 'ஒண்ணு நீ வாழணும், இல்ல நான் வாழணும்' என சண்டையிட்டுக் கொண்டார்கள். விட்டுக்கொடுத்துப்போனால் கெட்டுப்போகக்கூடிய சூழ்நிலை வராதென தெரிந்தும், ஈகோ இருவரையும் ஆட்டிப்படைத்தது.

**"வலியை மறந்து விடுவேன். சண்டையில் ஒருவனை உதைக்கும்போது என் கால் வலிக்குமே, அந்த வலியை மறந்துவிடுவேன் "**
**- ரேண்டி ஒற்றன்.**

1993, 'மன்டே நைட் ரோ' நிகழ்ச்சியை தொடங்கியது WWF நிறுவனம். ஒரு ரெஸ்ட்லிங் நிகழ்ச்சியை கேபிள் ரசிகர்களுக்கு பிடித்தாற்போல் எப்படி கொடுக்கவேண்டும் என்பதை மாற்றியமைத்தது. பெரிய அரங்கம், ஸ்டுடியோ வொய்ஸ் ஓவர் என புத்தம்புது ஐடியாக்களோடு களமிறங்கிய 'மன்டே நைட் ரோ'வை கொண்டாடித் தீர்த்தனர் ரசிகர்கள். மறுபுறம் க்ளைமாக்ஸில் புதைகுழியில் மாட்டிய கதாபாத்திரத்தைப் போல் கொஞ்சம் கொஞ்சமாய் காணாமல் போய்க்கொண்டிருந்தது WCW. பின்னர், இரண்டு ஆண்டுகள் கழித்து-1995 ஆம் ஆண்டு, WCW நிறுவனம், 'மன்டே நைட் ரோ' நிகழ்ச்சிக்கு போட்டியாக 'மன்டே நைட்ரோ' எனும் நிகழ்ச்சியை தொடங்கியது. தொடங்கியது மட்டுமில்லாமல் 'ரோ' ஒளிபரப்பாகும் அதேநாள், அதேநேரம் 'மன்டே நைட்ரோ'வும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. அது 'மன்டே நைட் ரோ', இது 'மன்டே நைட்ரோ'. தட் 'நாகபதனி, நாகப்பதனி' மொமண்ட்.

WCW நிறுவனத்தின் வைஸ் ப்ரெசிடன்ட் எரிக் பிஷஃப், WWFயை தீர்த்துக்கட்ட வேண்டும் என்பதில் மிகவும் தீவிரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தார். 'மன்டே நைட் ரோ' நிகழ்ச்சியின் பெண்கள் சாம்பியனை WCWக்கு வரச்சொல்லி, அவர் கையாலேயே சாம்பியன்ஷிப் பெல்ட்டை குப்பைத்தொட்டிக்குள் போடவைத்தார். அப்போது 'மன்டே நைட் ரோ'வில் சூப்பர்ஸ்டார்களாக இருந்தவர்களின் பழைய, தோற்றுப் போன சண்டைகளை ஒளிபரப்பத் தொடங்கினார். உச்சக்கட்டமாக, WWF மட்ச் ரிசல்ட்டுகளை முன்கூட்டிய WCW நிகழ்ச்சிகளில் வைத்து சொல்ல ஆரம்பித்தார் எரிக். எரிக்கின் இந்தச் செயல் பலரையும் எரிச்சலுக்குள்ளாக்கியது.

இப்படி போர் உச்சத்தில் இருந்த சமயத்தில் 'இருக்கும் நிகழ்ச்சியிலேயே இருக்கும் மேடையிலேயே இங்கிருந்து இன்னொரு நிகழ்ச்சிக்கு தாவும் தைரியமும் தன்னம்பிக்கையும் எனக்கு மட்டும்தான் இருக்கிறது' என பலவீரர்கள் WCWக்கு தாவினார்கள். காரணம், அதிக சம்பளம். 1996 ஆம் ஆண்டு, WWFன் மிகப்பிரபலமான வீரர்களான கெவின் நாஷ் மற்றும் ஸ்கொட் ஹோல் WCWக்கு கிளம்பினார்கள். அதற்குமுன் கடைசியாக ஒரு மட்ச் ஆடிவிட்டுப் போலாம் என நினைத்து, பெரும் வினையாகிப் போனது. ஷோன் மைக்கல்ஸ், ட்ரிபிள் ஹெச், கெவின் நாஷ் மற்றும் ஸ்கொட் ஹோல் நால்வரும் சண்டையிட்டனர். சண்டை முடிந்ததும் மேடையில் வைத்தே ஒருவரை ஒருவர் கட்டிபிடித்து பிரியப்போவதை நினைத்து ஃபீலிங்காக, அதிர்ச்சியானார்கள் ரசிகர்கள். ஒருவருக்கு ஒருவர் பரம எதிரிகளைப் போல் சித்தரித்து வந்தது WWF. அவர்கள் இப்படி ஒருவரை ஒருவர் கட்டிபிடித்து நட்பு பாராட்டுவதைப் பார்த்ததும்தான் மக்களுக்கு பிசிறு தட்டியது. WWF ஸ்க்ரிப்ட் செய்யப்பட்ட நிகழ்ச்சி என்பதை கொஞ்சம் கொஞ்சமாக உணர ஆரம்பித்தனர்.

கெவின் நாஷ் மற்றும் ஸ்கொட் ஹோல் WCW மன்டே நைட்ரோ நிகழ்ச்சியில் காலடி எடுத்துவைத்ததும், அங்கே வசூல்மழை வெளுத்துவாங்கியது. ரேட்டிங் எகிறியது. நியூ வேர்ல்ட் ஓர்டர் என புது அணியை உருவாக்கி மெர்சல் காட்டினார்கள் இருவரும். 1996ன் இடையில் இருந்து 1998 வரை 'ரேட்டிங் ரேஸில்' நம்பர் ஒன் இடத்தைப் பிடித்தது. தள்ளாடிக் கொண்டிருந்த WWF, இதற்கு ஒரு தீர்வை கண்டுபிடிக்க தலையை பிய்த்துக் கொண்டிருந்தது. இறுதியாக கண்டுபிடிக்கவும் செய்தது, அதுதான் 'ஆட்டிட்யூட் எரா'. ஸ்டோன் கோல்ட், தி ரொக், ட்ரிபிள் ஹெச், கர்ட் ஆங்கிள், ஷோன் மைக்கல்ஸ், அண்டர்டேக்கர், கேன், மெக் ஃபோலி, ரிக்கிஷி, க்றிஸ் ஜெரிக்கோ, எட்ஜ் என WWFன் பெரியதலைக்கட்டுகள் உருவானது அப்போதுதான். இன்றைய WWFன் ஆதி ஊற்று, 'தி ஆட்டிட்யூட் எரா'. அதைப் பற்றி அடுத்த பகுதியில் பார்ப்போம்.



# “அழிவுக்காலத் தீர்க்கதரிசி” மால்துஸ் கணிப்புக்கள் தவறாகின்றனவா?

சாள்ஸ் ஜே போர்மன்

சமூகக்கல்வி, மனிதர்களின் பிறப்புக்கள், பொருளாதாரம் போன்றவையை ஒழுங்காகப் படித்தவர்களுக்கு தோமஸ் மால்துஸ் என்றால் யார் என்று கட்டாயம் தெரியும்!

பிரிட்டனைச் சேர்ந்த மால்துஸ் ஒரு பொருளாதார அறிஞர். தனது ஆராய்ச்சியின் மூலம் 1798 இல் “உலக மக்கள் தொகை உலகின் வளங்களால் சமாளிக்க முடியாத நிலைமைக்கு வளரும். அதன் உச்சக்கட்டத்தில் வியாதிகள், போர்கள், இயற்கை அழிவுகள் உண்டாகி மக்கள் தொகையை அவ்வப்போது அழித்துக் கட்டுப்படுத்தும்,” என்று விபரித்தவர் மால்துஸ் என்று அவரைப் பற்றித் தெரியாதவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம்.

மால்துஸின் ஆராய்ச்சிகள் அன்றைய உலகை அதிரவைத்த ஒரு குண்டு எனலாம். பல அறிஞர்கள் அவரது கூற்றை ஆதரித்து அவரது பெயரில் “மால்துஸியானிஸம்” என்ற ஆராய்ச்சிக் கோட்பாடும் அதன் தொடரும் இன்னும் வாழ்கிறது.

மால்துஸுக்குப் பின்பு அவரது கோட்பாட்டிலிருந்து ஆராய்ச்சிகள் செய்பவர்கள் உலகில் அதன்பின்பு உண்டாகிய பல தொற்றுநோய் அழிவுகள், உலகப்போர்கள் மால்துஸ் சுட்டிக்காட்டிய மக்கள்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் கருவிகளே என்கிறார்கள்.

“அழிவுக்காலத் தீர்க்கதரிசி” என்று மால்துஸைச் சாடுகிறவர்கள் அதற்கு எதிராக “மக்கள்தொகை அதிகரிக்கும் அதேசமயம் கல்வியறிவும், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் சேர்ந்து புதிய கண்டுபிடிப்புக்களால் உலகின் வளங்களை மேம்பட்ட முறையில் பாவித்து வளரும் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யும்,” என்று கூறினார்கள்.

மால்துஸ் மறைந்து சுமார் இருநூறு வருடங்களாகின்றன. உலக நடப்புக்கள் மீண்டும் மீண்டும் அவரது அழிவுக்காலத் தீர்க்கதரிசனத்தைப் பொய்ப்பித்துக்கொண்டே வருகின்றன.

1800 களில் ஒரு பில்லியனாக இருந்த உலக மக்கள்தொகை அதிகரித்து இரண்டு பில்லியன்களாக 130 ஆண்டுகளாகின. அதுவே மூன்று பில்லியன்களாகின முப்பதே ஆண்டுகளில் [1960]. மேலும் 15 வருடங்களில் மேலுமொரு பில்லியன் பேரால் அதிகரித்து அதற்கடுத்த பில்லியன் இன்னொரு 13 வருடங்களில் அதிகரித்து 1987 இல் ஐந்து பில்லியன்கள் ஆகின.

20 ம் நூற்றாண்டில் மட்டுமே உலக மக்கள் தொகை 1.65 பில்லியன்களால் அதிகரித்து இன்றைய உலக மக்களின் தொகை ஏழரை பில்லியன்களாகி விட்டது.

அதேசமயம் உலகத்தின் வளங்கள் பாவிக்கப்படுவது வெவ்வேறு விதமான தொழில்நுட்பங்களால் செம்மைப்படுத்தப்பட்டும் வருகிறது என்பதை நாம் அறிவோம். அடிக்கடி, ஆங்காங்கே இயற்கை மற்றும் தொற்றுநோய் அழிவுகள் வந்தாலும்கூட இன்றைய நிலைமையில் உலக வளங்கள் மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறது. உலகமக்களின் பிரச்சினைகள், அவ்வளங்களைப் பாவிப்பது, பங்கிடப்படுவது ஆகியவற்றில்தான் தங்கியிருக்கிறது எனலாம்.

அது ஒரு பக்கமிருக்க இனப் பெருக்கத்தின் வேகமும் உலகில் குறைந்து விட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

மால்துஸ் வாழ்ந்த காலத்தில் உலகின் குடும்பங்கள் மிகவும் பெரியதாக இருந்தன. அதற்கான காரணம் அன்று பிறக்கும் பிள்ளைகள் பல சிறு குழந்தைகளாகவோ, இள வயதிலோ இறந்தன. முக்கிய காரணம் சுகாதாரம், ஆரோக்கியம் ஆகிய நிலைமைகள் மோசமாக இருந்தன.

அத்துடன், அன்றைய முக்கிய தொழிலான விவசாயத்தில் பிள்ளைகளின் உதவி எதிர்பார்க்கப்பட்டது, வயது வந்த காலத்தில் பெற்றோரைக் காப்பாற்றுவது பிள்ளைகள் என்பதே எதிர்பார்க்கப்பட்டு, நிஜமாகவும் இருந்தது. அக் காரணங்களால் ஒவ்வொரு தம்பதிகளும் தங்களால் முடிந்தளவு குழந்தைகளைப் பெற்றார்கள். அதிகஎண்ணிக்கையில்பெற்றால்அதிகமானவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து உதவுவார்கள் என்பதாக இருந்தது.

ஆனால் 1800 களில் ஐரோப்பா, வடஅமெரிக்காவில் ஆரம்பித்த இயந்திர மயமாக்குதலும், நகர மயமாகுதலும் நிலைமையை மாற்ற ஆரம்பித்தன. அப்பிராந்தியங்களில் கல்வியறிவு, தொழில் நுட்பங்களும், சுகாதார வசதிகளும் சேர்ந்து மக்களின் வாழ்வை மேம்படுத்தச் செய்தன. அந்த நாட்டு அரசாங்கங்கள் மக்களுக்கு வெவ்வேறு தேசிய காப்புறுதிகளை செய்து கொடுத்தன. அதனால் சுபீட்சமும் வயதுவந்த காலத்தில் பிள்ளைகளில் தங்கியிருக்க தேவையற்ற நிலைமையையும் மக்கள் பெற்றார்கள்.

புதியதாக ஏற்பட்ட மாற்றங்கள் அளவுக்கதிகமான பிள்ளைகள் பெற்றால் சுயவளர்ச்சிக்கு இடையூறாக இருக்கும் என்ற உண்மையை மக்களுக்கு புரிய வைத்தன. அதனால் 1950 களுக்கு பின்பு பெண்களின் கருத்தரிப்பு அளவு வேகமாகக் குறையத் தொடங்கியது. தன் கருத்தரிப்பு வயதுகளில் சராசரியாக சுமார் 5.5 பிள்ளைகளை பெற்ற பெண் இப்போது சராசரியாக சுமார் 2.5 பிள்ளைகளையே பெற்றுக் கொள்கிறாள்.

ஒவ்வொரு பெண்ணும் 2.00 க்கு மேற்பட்ட பிள்ளைகளை தனது கருத்தரிப்பு வயதுகளில் பெற்றுக் கொண்டால் மட்டுமே உலக மக்கள் தொகை அதிகரிக்கும். சுமார் 2.0 அளவில் அது இருக்குமானால் ஒரு நிலையான அளவு மக்கள் தொகையே நீடிக்கும். ஏனெனில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் சேர்த்து ஒரு பெண் 2.0 பிள்ளைகளைப் பெற்றால் அது அவர்களது இடத்தை நிறைப்பதில் மட்டுமே இருக்கும். 3.0 பிள்ளை பெறும்போதுதான் இரண்டு பேர் சேர்ந்து தங்களைவிட அதிகமாக ஒருத்தரை உருவாக்குகிறார்கள்.


உலகம் முழுவதும் பரவலாக இருந்த அதிக பிள்ளைகளை பெறுதல் என்பது இப்போது உலகின் சில பிராந்தியங்களில் மட்டும் தொடருகிறது. கடந்த கால் நூற்றாண்டுகளாக ஆசியப் பிராந்தியங்களில் ஏற்பட்டு வரும் பொருளாதார சமூக வளர்ச்சி அங்கிருக்கும் சனத்தொகை மிக அதிகமான நாடுகளான சீனா, இந்தியாவிலும் பெண்களின் கருத்தரிப்பு அளவைக் குறைத்திருக்கிறது.


சீனாவின் கடுமையான கருத்தடுப்புத் திட்டங்களால் சீனப்பெண்கள் இப்போது சராசரியாக 2.0 க்குக் குறைவாகவே பிள்ளைகளை பெற்றுக் கொள்கிறார்கள். அதாவது சீனா இன்று உலகின் அதிக மக்கள் தொகையுள்ள நாடாக இருப்பினும் விரைவில் அந்த நாட்டு மக்கள்தொகை ஒரு சீரான அளவுக்கு வந்து குறையும் சாத்தியமே இருக்கிறது. இந்தியா இன்று உலகின் இரண்டாவது ஜனத்தொகை அதிகமான நாடாக இருக்கிறது. அங்கே பெண்களின் கருத்தரிப்பு அளவு 2.5 க்குக் கீழ் போய்விட்டது. அதாவது விரைவில் இந்தியா உலகின் அதிக ஜனத்தொகையுள்ள நாடாகினாலும் அங்கேயும் மக்கள் தொகை சீரான ஒரு எண்ணிக்கைக்கு வந்து குறையும் என்றே கணிக்கப்படுகிறது.

முஸ்லீம்மக்கள்வாழும்சனத்தொகை அதிகமுள்ள நாடுகளில் பிள்ளை பெறுதலை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதலும், தொடர்வதும் மிகப்பெரும் பிரச்சினைகளாக இருந்தன. ஆனால், இந்தோனேசியா, ஈரான், சவூதிஅரேபியா, துருக்கி, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பெண்கள் தமது கருவுறும் வயதுகளில் 2.5 பிள்ளைகளைப் பெறும் நிலை உண்டாகிவிட்டது. எகிப்து, பாகிஸ்தான் நாடுகளில் மட்டும் பெண்கள் இன்னும் 3.5 பிள்ளைக்ளை பெற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும், அந்த நாடுகளிலும் அந்த எண்ணிக்கை மெதுவாக கீழிறங்கி வருவதாகவே கணிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன.

மீதமிருப்பது ஆபிரிக்காவில் சகாராவை சுற்றியுள்ள சில நாடுகளும், சில தென்னாபிரிக்க நாடுகளும்தான். நகர மயமாக்கல், பொருளாதார, கல்வி, சுகாதார வளர்ச்சி இன்னும் ஒழுங்காக பரவாத அப் பிராந்தியத்தில் மட்டும் பெண்களின் பிள்ளைப் பெறுதல் எண்ணிக்கை சுமார் 5.00 ஆக இருக்கிறது. ஆனாலும், 1960 களில் சராசரியாக 8.00 பிள்ளைகளை பெற்றுக் கொண்டவர்கள் இப்போது அத்தொகையை குறைத்து விட்டார்கள் என்பதைக் கவனித்தால் அங்கும் மெதுவாக ஜனத்தொகை வளர்ச்சி சீராகி குறைந்துவரும் சாத்தியமே காணப்படுகிறது.

ஜனத்தொகை அதிகரிப்பையும் உலக வளங்களின் நிலையையும் பொறுத்தவரை மால்துஸ் கணிப்பீடுகள் படிப்படியாக தவறாகிக் கொண்டு வருகின்றன.



# சென்றதும் வென்றதும்! 8

மெக்கல்லன்

அரண்மனை ஊழியனாக இருந்த மெக்கல்லனின் கப்பல் பயணக் கனவு 1505ல் நிறைவேறி, அவரது முதல் பயணமாக இந்தியாவில் கால் பதித்தார்.

'இனி, நாம் அரண்மனை ஊழியன் அல்ல. யாருக்கும் சலாம் போட வேண்டியது இல்லை' என மகிழ்ச்சியோடு இந்தியாவில் இறங்கும்போதே, சிலர் கத்தியோடு ஓடி வந்தார்கள். திகைத்து நின்றார் மெக்கல்லன். அவர்கள் அரேபியா, வெனிஸ் நாடுகளைச் சேர்ந்தவர்கள். 'இந்தியா எனக்குத்தான், இல்லை எனக்குத்தான்' எனக் கத்திக்கொண்டே மெக்கல்லன் மீது பாய்ந்தார்கள். சண்டைபோட்டுத் தப்பித்தார். கடல் பயணம் என்றால், உல்லாசம் மட்டுமல்ல, ஆபத்தானதும்கூட என்பது முதல் பயணத்திலேயே மெக்கல்லனுக்குப் புரிந்துவிட்டது.

ஆனாலும், அடுத்த ஐந்து ஆண்டுகள் ஆசை தீர இந்தியப் பெருங்கடலை ஒட்டிய பிரதேசங்களில் சுற்றிவந்தார். அடுத்தடுத்து பல வாய்ப்புகள் வந்தன. எதையும் விட்டுவைக்கவில்லை. ஆண்டுக்கணக்கில் சுற்றிச் சுற்றி வந்ததால், உலகம் பற்றியும் அதன் புவியியல் அமைப்பு பற்றியும் நன்றாகத் தெரிந்தது.

இந்தத் துணிச்சலில்,' மெக்கல்லன் ஒரு நாள் கனவு காண ஆரம்பித்தார். 'எல்லோரும் செல்லும் வழியில் இல்லாமல், புதிய வழியில் ஸ்பைஸ் தீவுகளுக்குச் சென்றால் என்ன? பொதுவாக, தென் கிழக்கு ஆசியாவுக்கு எல்லோரும் கிழக்கு நோக்கி பயணம் செய்வார்கள். அதுவே பாதுகாப்பானது. எனக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? மற்றவர்களைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்க வேண்டாமா? நாம் ஏன் மேற்கில் போகக் கூடாது?' என நினைத்தார்.

இந்தத் திட்டத்தை தன் நண்பர்களிடம் சொன்னபோது, விழுந்து விழுந்து சிரித்தார்கள். "வித்தியாசமாகச் சிந்திப்பது முக்கியம்தான். அதற்காக இப்படியா? வலது பக்கம் போனால்தான் ஆசியா வரும் என்கிற போது, இடது பக்கம் போனால் தொலைந்துபோவாய். இவ்வளவு ஆண்டுகள் இதைக்கூட கற்றுக்கொள்ள வில்லையா?" எனக் கேலி பேசினார்கள்.

"புவியியல் புரியாமல் பேசுகிறீர்கள். வலது பக்கத்தில் உள்ள ஓரிடத்துக்கு, இடது பக்கத்தில் இருந்தும் போகலாம். இதுதான் புதிய விதி" என அசராமல் சொன்னார் மெக்கல்லன்.

நண்பர்களுக்குப் புரியவில்லை. புவியியல் துறை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டிருந்த கால கட்டம் அது. பூமியானது தட்டையாக இருக்கும், நீளமாகச் சென்றுகொண்டே இருந்தால் ஓரிடத்தில் முடிவடையும் என்று நம்பினார்கள். பூமி தட்டையல்ல, உருண்டை எனச்சிலர் சொன்னபோது, விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"பூமி உருண்டை என்றால், நாம் வழுக்கி விழுந்திருக்க வேண்டுமே, ஏன் அப்படி நடக்கவில்லை?" எனக் கேள்வி கேட்டார்கள். இந்தக் கிண்டலைப் பொருட்படுத்தாமல், பூமி நிச்சயம் உருண்டைதான் எனச் சிலர் நம்பினார்கள். அதில், மெக்கல்லனும் ஒருவர். அதனால்தான், 'எல்லோரும் கிழக்கில் போனால், நான் மேற்கில் போவேன்' என்றார்.

சொன்னதோடு நிறுத்தாமல் செயல்படுத்தவும் நினைத்தார். நம்பிக்கை, துணிச்சல், திறன் எல்லாமே அவரிடம் இருந்தது. இல்லாதது பணம் ஒன்றுதான். 'புதிய வழியைக் கண்டுபிடித்தால், பலன் அடையப்போவது என்னுடைய போர்த்துக்கல் நாடும் மன்னரும்தானே' என்று நம்பிக்கையுடன் மன்னரைச் சென்று பார்த்தார் மெக்கல்லன்.

அவரை ஏற இறங்கப் பார்த்த மன்னர், "சரி, அப்புறம் பார்க்கலாம்" என்று போய்விட்டார்.

மெக்கல்லன் இதை எதிர்பார்க்கவில்லை. 'என்னைப் புறக்கணித்த இந்த மன்னரும் வேண்டாம், இந்த போர்த்துக்கலும் வேண்டாம்' எனக் கோபத்துடன் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்றார்.

ஸ்பெயின் மன்னர் மெக்கல்லனை ஆதரிக்க முன்வந்தார். முன்பு இதேபோன்ற திட்டத்தோடு ஸ்பெயின் மன்னர் ஃபேர்டினாண்டை கொலம்பஸ் அணுகியபோது, அவரை ஆதரித்தார். தற்போது, மெக்கல்லனுக்கு ஆதரவு தந்தவர் ஃபேர்டினாண்டின் பேரன்.

10 ஒகஸ்ட் 1519 அன்று மெக்கல்லனின் உலகைச் சுற்றும் பயணம் ஆரம்பமானது. 'டிரினிடாட்' என்ற கப்பலை அவர் செலுத்தினார். கூடவே, நான்கு கப்பல்கள் சென்றன. அவற்றில், இருநூறுக்கு அதிகமான பணியாளர்கள் இருந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கான உணவும் ஏராளமான ஆயுதங்களும் இருந்தன.

தென் அமெரிக்காவை அடைந்த பிறகு, மேற்கொண்டு நகர்வதற்கான வழியை ஆராயத் தொடங்கினார். இதற்கிடையில் தங்கியிருந்த இடத்தில் இருந்து எதிர்ப்புகள் வரத் தொடங்கின. மெக்கல்லனின் கப்பலில் இருந்த சிலரே கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களைக் கடுமையான முறையில் ஒடுக்கினார் மெக்கல்லன்.

சற்றே சுதாரித்த பிறகு, தன்னுடன் வந்த 'சாண்டியாகோ' என்னும் கப்பலை அனுப்பிவைத்தார். அந்தக் கப்பல் வரவேயில்லை. கடுமையான சூறாவளிப்புயலில் சிக்கி சின்னாபின்னமானது. 'சரி வாருங்கள். நாமே வழியைக் கண்டுபிடிப்போம்' என்றார் மெக்கல்லன்.

ஆனால், முந்தைய கப்பலைப் போல மூழ்கிவிட்டால் என்ன செய்வது என மற்றவர்கள் பயந்தார்கள். மெக்கல்லனை நம்பிப் பயனில்லை, ஊர் திரும்பிவிடலாம் எனப் பலரும் முடிவெடுத்தார்கள்.

21 ஒக்டோபர் 1520ல், ஒரு புதிய பாதையைத் துணிந்து தேர்ந்தெடுத்து கப்பலைச் செலுத்தத் தொடங்கினார். இந்தப் பகுதி இப்போது, 'மெக்கல்லன் ஜலசந்தி' என்று அழைக்கப்படுகிறது.

போகும் வழியில் பெருங்கடல் ஒன்று குறுக்கிட்டது. சூறாவளி, புயல் என்றில்லாமல் அமைதியாக இருந்த அந்தக் கடலுக்கு, 'மார் பசிஃபோ' என்று பெயரிட்டார். இன்று அது, 'பசிபிக் கடல்' என்று அழைக்கப்படுகிறது. பசிபிக் என்றால், 'அமைதி' என்று பொருள்.

அடுத்து, பிலிப்பைன்ஸ் தீவுக்குச் சென்றார் மெக்கல்லன். தென் அமெரிக்காவைத் தாண்டி யாருமே வந்திராத நிலையில், பிலிப்பைன்ஸில் காலடி எடுத்துவைத்த முதல் ஐரோப்பியர் மெக்கல்லன்தான். இனி, ஸ்பைஸ் தீவுகள் கைக்கு எட்டும் தூரம்தான் என உற்சாகமானார்.

செர்பூ எனும் தீவை 27 ஏப்ரல் 1521ல் அடைந்தார் மெக்கல்லன். அங்கிருந்த பழங்குடிகள் எதிர்த்தபோதும் அலட்டிக்கொள்ளவில்லை. தன்னிடம் உள்ள நவீன ஆயுதங்களுக்கு முன்னால், இவர்களின் வில்லும் அம்பும் ஒரு துரும்பு என உறுமியபடி தாக்குதலை ஆரம்பித்தார். அப்போது, 'விஷ்க்' எனக் காற்றைக் கிழித்துக்கொண்டு வந்த அம்பு, மெக்கல்லனைத் தாக்கியது. ஆ..! என அலறியவாறு கீழே விழுந்தவர், எழுந்திருக்கவே இல்லை.

ஆம், உலகை வலம் வந்த அந்த சாகச நாயகனின் உயிரை, நஞ்சு தடவிய அந்த அம்பு பிடுங்கிக்கொண்டது.

(பயணம் தொடரும்...)





ஸ்பெயின், கிரீஸ், சிசிலி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, வடக்கு ஆப்பிரிக்கா எனப் பல நாடுகளைச் சேர்ந்த பணியாளர்கள், மெக்கல்லனின் கப்பலில் இடம் பெற்றிருந்தனர்.

ஐந்து கப்பல்களில் விக்டோரியா கப்பல் மட்டும்தான் ஸ்பெயினுக்குத் திரும்பவும் வந்தடைந்தது. முதலில், உலகைச் சுற்றிவந்த கப்பல் எனும் பெருமையையும் பெற்றது.



8 அடி உயரம்கொண்ட அரக்கர்களை அர்ஜென்டினா அருகில் கண்டதாக மெக்கல்லனின் ஆட்கள் விவரித்தனர். ஒரு அரக்கனை மெக்கல்லன் மயக்கி, தன் கப்பலுக்கு அழைத்துவந்து மதம் மாற்றி, 'பால்' என்று பெயரும் சூட்டினாராம். அவர்கள், உயரமான பழங்குடிகளாக இருப்பார்கள் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

# மாய மனிதன் க்ரிஃபின் 8

VENU VARIATH ஓவியம்: கே.எஸ்.ரகு தமிழில்: ரமேஷ்












இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 01.04.2018 அன்று வெளியிடப்பட்டது.